www.padippakam.com



ஆப்கன் போர் - சிறப்புக் கட்டுரை
அ. ஜ. கான்

ஏகாதிபத்தியமும் முன்னேற்றமும்
இஜாஸ் அகமது


பின் நவீனத்துவம்...
விளாடிமீர் பிலேன்கின்

# காலக்குறி

ஜனவரி 2002 14 விலை ரூ. 25/-

படிப்பகம்

www.padippakam.com



## புதிய உலக அமைப்பும் அமைதியும்

சிவசேகரம்

அவர்கள் அமைதியை வேண்டுகின்றனர்
தங்கள் மூதாதையர் செய்த தவறுகளைத்
தவறாது கண்டிக்கின்றனர்.
தங்கள் மூதாதையர் கால்வைத்த இடமெல்லாம்
சிந்தப்பட்ட குருதியையிட்டும்
திருடப்பட்ட பொருளையிட்டும்
பறிக்கப்பட்ட மண்ணையிட்டும்
மிகவும் வருந்துகின்றனர்.
தங்கள் மூதாதையர் வேரறுத்தோர் தசைகளிலே
விளைந்த கோப்பித் தோட்டங்களையும்
தேயிலைக்காடுகளையும்
கரும்பு வயல்களையும்
தங்கச் சுரங்கங்களையும் பற்றி
மிகவும் வெட்கப்படுகின்றனர்.

நீங்கள்
நடந்தவற்றை மறந்து
நமது நண்பர்களாக - இருப்பதை
அவர்கள் மிகவும் வேண்டுகின்றனர்.
அதோடு

உங்கள் வாழ்வு மிகவுஞ் சீரழிந்தும்
வறுமைப்பட்டும்
உங்கள் பண்பாடு சிதைக்கப்பட்டும்
நீங்கள் கடவுளரால் நிராகரிக்கப்பட்டும்
இருப்பதை
அவர்கள் நன்றாக உணர்கின்றனர்.

உங்கள் மண்ணின் மீதும்
உழைப்பின் மீதும்
உங்களது ஆளுமையை வலியுறுத்தி
அவர்களது அதிகாரத்தை மறுதலித்துக்
கிளர்ந்து
போராடிக்
கலகஞ் செய்து
உலக அமைதியை
நீங்கள் குலை [illegible]க்காதவாறு
அவர்கள்
உங்கள் மீது போர் தொடுக்கும் போதும்
ஒன்றை மட்டும் மறவாதீர் :
உலகம் உள்ளபடியே உள்ளவரையில்
அவர்கள் அமைதியையே வேண்டுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com




இதழ் - 14

ஜனவரி - 2002

தனியிதழ் : 25/-
சந்தா : 100/-

முகவரி : 18, அழகிரி நகர்,
இரண்டாவது தெரு,
வடபழநி,
சென்னை - 600 026.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு காலக்குறி வெளிவருகிறது. வாசகர்களின் சிரமத்திற்கு வருந்துகிறேன். அடுத்தடுத்து முறையான காலத்திற்குள் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்படும். போடோ சட்டம் பற்றி விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்க, எதிர்க்கட்சி களிடையே கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளது. ஏற்கனவே தடா இருக்கும்போது புதிதாக போடோ எதற்கு? என்கின்றன எதிர்க்கட்சிகள். செப்.11க்குப் பிறகு காஷ்மீர் மற்றும் பாராளுமன்ற தாக்குதலைக் காரணம் காட்டி போடோ அவசியம் என்கின்றன ஆளும் அரசு. அமெரிக்காவில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் அமெரிக்க தேசபக்த சட்டத்தின் (American patriotric Act) ஒரு நகலாகத்தான் போடோ சட்டம் உள்ளது. இது பத்திரிகைச் சுதந்திரத்தின் அடிப்படை ஜனநாயக உரிமையை பறிக்கும் நிலை என்பதைக் காட்டிலும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படை ஜனநாயக உரிமையையே பறிப்பதாக உள்ளது. புதிய காலனிய கால கட்டத்தில் மூன்றாமுலக நாடுகளின் பெருளாதாரம் மிக கொடூரமாக பாதிக்கும். அதன் விளைவாக மக்களின் எதிர்ப்பு அதிகரிக்கும் போது ஆளும் வர்க்கங்களும் அதற்கேற்றவாறு தன் அரசு எந்திர அமைப்புகளை பாசிசமயமாக்கிக் கொள்வது அதன் இயல்பு. எனவேதான் ஜெயலலிதாவின் ஆட்சி பாசிசமயமாகி வருகிறது, பாரதீய ஜனதா அரசும் பாசிசமயமாகி வருகிறது, ஒற்றை வல்லரசு அமெரிக்காவும் பாசிசமயமாகி வருகிறது.

## உள்ளே...

### கட்டுரைகள்

1. ஏகாதிபத்தியமும் முன்னேற்றமும் - இஜாஸ் அகமது 12
2. ஆப்கானிஸ்தான் - அ.ஜ. கான் 38
3. பின் நவீனத்துவம்... - விளாடிமீர் பிலேன்கின் 53

### சிறுகதைகள்

1. வெள்ளாவி - விமல் குழந்தைவேல் 3
2. வதை - மீரா கதிரவன் 31



### நூல் மதிப்புரை

1. மைலாஞ்சி - பொதிகைச் சித்தர் 66
2. உண்மை ஒளிர்கவென்று... - மா. அரங்கநாதன் 70
3. வயலட்நிற பூமி - நா. முருகேச பாண்டியன் 73
4. நீர் விளையாட்டு - சா. தேவதாஸ் 75
5. நிறமற்றுப் போன கனவுகள் - த. பழமலய் 76
6. நெருப்புக் குழியில் குருவி - சா. தேவதாஸ் 65

E-mail : kalakkuri@eth.net

www.padippakam.com

# காலக்குறி

நம் காலத்திற்கான நவீன மொழிப்பரப்பு

**Kalakkuri காலக்குறி**

**A Sign of The Time 14** காலாண்டு இதழ்

A quarterly journal of
Arts & Literature

Published & Owned by

**A. Jabarullakhan** and Printed by
**S. Baskara Pandian** at Mani Offset, Chennai-5.

Published from 18, Alagiri Nagar IInd Street,
Vadapalani, Chennai - 600 026.

Pictures & Drawings Courtesy:
Quantum Dice, Manushi,
National Geography, Oil Dollers & Politics,
Edgar Valter, Regional Art Exhi.-1996,
Revolutionary Worker, மனஓசை

Laser Typeset by:
Shri Vignesh Prints, Chennai-33.

email : kalakkuri@eth.net

படைப்புகள், விமர்சனங்கள் மற்றும்
சந்தாக்கள் அனுப்பவேண்டிய முகவரி:
18, அழகிரி நகர் 2-வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.

தனிப்பிரதி விலை ரூ.25
ஆண்டுச்சந்தா ரூ.100
வெளிநாட்டுச் சந்தா 10 US$

முன் அட்டைப்படம்:
CIMA-WOUNDS-99

பின் அட்டைப்படம்:
National Geography

அச்சாக்கம்: மணி ஆப்செட்,
சென்னை - 5.

இதழ் வடிவாக்கம்: ஜேகே.

புத்தக விமர்சனத்திற்கு

2 பிரதிகளை அனுப்பவும்.

சந்தா மற்றும் விற்பனைத் தொகையை காலக்குறி பதிப்பகம் (KALAKKURI PATHIPPAGAM)
என்ற பெயருக்கு டி.டி./ மணியார்டர் மூலம் அனுப்பவும்.

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# வெள்ளாவி

விமல் குழந்தைவேல்
(லண்டனில் வாழும் ஈழத்தமிழர்)



அது அவனின் ஆத்மார்த்தமா, இல்லை வியாபாரமா, அல்லது தன் வாழ்க்கை பயணத்தை முடிக்கும் வரையிலான காலக்கடத்தலுக்கான பொழுது போக்கா...? இதில் எது என்று இனம் பிரித்து காணமுடியாதளவுக்கு தன் மனதையும் உடலையும் தனது பரம்பரை தொழிலுக்குள் திணித்து விட்டுக் கொண்ட நாகமணி அதிலிருந்து மீளமுடியாதவனாகவே இருந்தான்.

குறிப்பிட்ட சில நாட்களுக்குள் தன் மனைவிக்குக் கிடைத்த மதிப்பும் மரியாதையும் அவனை மாற்றி விடுமோ என்று பயந்து கொண்டிருந்தான் அவன்.

தரையில் தூக்கியெறியப்பட்ட மீன் குஞ்சுகள் தண்ணீருக்குள் செல்ல தத்தித் துடிப்பது போல தான் அவனும் இருந்தான்.

வெளுத்து மடித்த உடுப்புகளை கொடுத்து விட்டு மீண்டும் அழுக்கு உடுப்புகளுக்காக காத்திருந்தான் நாகமணி. கொண்டு வந்த உடுப்புகள் அத்தனையும் சரியாக இருக்கிறதா என்று வண்ணக்கர் பொஞ்சாதி மகளிடம் கேட்க மகள் உடுப்புகளையும் சுணாம்புச் சுவரில் எழுதப்பட்டிருக்கும் குறிப்பையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்னடா நாகமணி வெளுக்கச் சொல்லி புடவையைப் போட்டா இப்பிடி கிழிச்சி சிலமாக்கி கொண்டு வந்து தந்திருக்காய்'... உள் வீட்டுக்குள் இருந்து குரல் கொடுத்தாள் வண்ணக்கர் பொஞ்சாதியின் தாய்.

நாகமணி போகம் விளைஞ்சா கூலிக்கு மட்டும் வந்து நிற்பாய் ஆனா தொழில மட்டும் ஒழுங்காய்செய்யமாட்டாய். எண்ட பச்சசீலையொண்டு குறையுது எங்க அது ஆருக்கும் மாத்துப் புடைவையா குடுத்துட்டையோ... இனி எவனெவள் எண்டபுடவையை கட்டிக்கொண்டு றோட்டுல திரியப் போறாளோ தெரியாது. இஞ்ச பார் நாகமணி ஆருக்கும் மாத்துப்புடவையா எண்ட சீலைய குடுத்திருந்தா அது எனக்கு திரும்பவும் தேவைப்படாது சொல்லிப்போட்டன் தெரியுமோ...

இல்ல தாயி. வெள்ளாவியில போட மறந்திட்டன் அடுத்த வெள்ளையோட

படிப்பகம்

www.padippakam.com

அந்த புடவையும் சேர்த்துக் கொண்டு வந்திர்றன்...

இது எவன் ஊட்டுப் புடவையெல்லாம் இஞ்ச கொண்டு வந்திருக்காய் இந்தா ஆரு எவள்ற புடவையோ... வண்ணக்கர் பொஞ்சாதி வீசி எறிந்த புடவை நாகமணியின் முகத்தில் வந்து விழ அதை எடுத்துப் பார்த்து விட்டு போடியார் வீட்டுப்புடவை இதுக்குள்ள எப்பிடி வந்திச்சோ தெரியாது... என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டது வண்ணக்கர் பொஞ்சாதியின் காதில் விழுந்து விட்டது.

என்னடா நாகமணி உண்ட கதைய பார்த்தா போடியார் ஊட்டுப்புடவைக்கு ஆசைப்பட்டு நான்தான் எடுத்து வைச்சன் மாதிரியெல்லோ இரிக்கு...

அப்பிடிச் சொல்லயில்ல தாயி... எப்பிடி வந்திச்சி எண்டு தெரியாது அதுதான்...

சரி... சரி... போயிற்று போகம் விளைஞ்ச உடன வந்து கூலிய வாங்கிக்கொள்... சொல்லி விட்டு கிணற்றடி ஈரத்தை கிண்டிக்கிளறிக் கொண்டிருந்த கோழிகளையும் குஞ்சுகளையும் விரட்டி விட்டுக் கொண்டிருந்தாள் வண்ணக்கர் பொஞ்சாதி.

ஏன் தாயி இந்த முறை வெள்ளைக்கு ஊத்த ஏதும் இல்லையோ...

ஊத்த இல்லாமல் இல்லை இருக்குத்தான் உனக்கிட்ட இல்ல வேற ஆருக்கிட்டையும் குடுத்து வெளுத்துக் கொள்ளுறம் நீ போ...

ஏன் தாயி...

என்ன நாகமணி ஏன் என்று புதினமாக கேட்குறாய்... இண்டைக்கு உண்ட குடும்பம் இருக்கிற நிலைமையில உண்ட பொஞ்சாதிக்கு இருக்கிற மதிப்பும் மரியாதைக்கும் நாங்க இனியும் என்னெண்டு ஊத்தை போட முடியும். சாமியம்மா ஊட்டுக்கு ஊத்த வெளுக்கப் போட்டம் எண்ட பாவமும் பழியும் எங்களுக்குத் தேவையில்ல. இது நான் மட்டும் எடுத்த முடிவில்ல. ஊராக்கள் எல்லாரும் சேர்ந்து எடுத்த முடிவு அது தெரியுமோ உனக்கு... சொல்லிக்கொண்டே கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து குடத்தில் நிரப்பிக்கொண்டாள்.

இதென்ன தாயி மதிப்பும் மரியாதையும் இண்டைக்கு வந்தது தானே அதுவும் அது எண்ட பொஞ்சாதிக்குத் தானே அதுக்காக நான் பரம்பரையா செய்யற தொழில உடலேலுமோ நீ வெள்ளைக்கு ஊத்தைய போடு தாயி... முழங்காலில் கைகுத்தி தாழ்வாரத்தில் குந்தியிருந்த நாகமணியை பார்க்க பரிதாபமாக இருந்தது வண்ணக்கர் பொஞ்சாதிக்கு.

நீ சொல்லுறதும் சரிதான் நாகமணி... இப்படி ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு சாட்டச்சொல்ல மதிப்பும் மரியாதையும் எண்டு விலத்தி வைச்சால் ஊருக்குள்ள உள்ள ஊத்தைய கழுவ அயலூருக்கு போயோ ஆள் தேட முடியும்... அடிபொட்டே மூலைக்குள்ள குவிச்சுக் கிடக்கிற ஊத்தை உடுப்புகள கொண்டு வந்து போடுடி... சொல்லிவிட்டு வீட்டுக்குள் போய் மகளிடம் ஏதோ ரகசியமாகச் சொல்ல மகள் கோடிப்பக்கம் போய்விட வண்ணக்கர் பொஞ்சாதி அள்ளிக்கொண்டு வந்து ஒவ்வொண்றாக எண்ணிப்போட்டு விட்டு போட்டவைகள் எத்தனை என்று சுவரில் குறிப்பெழுதிக்கொண்டிருக்க குந்தியிருந்த நாகமணியின் முகத்தில் உயரத்துக்கு குவிந்து விட்ட ஊத்தை உடுப்புகளை மாராப்பாய் கட்டமுறப்பட்டபோது கோடிப்பக்கமிருந்து வந்த வண்ணக்கரின் மகள் எறிந்த ரத்தக்கறை பட்ட சட்டையையும் சேர்த்துக் கட்டிக் கொண்டு மாராப்பை தூக்கி தோளில் தொங்க போட்டான் நாகமணி.

என்ன நாகமணி... போகப்போறயோ தேயிலை குடிக்காம.. அவனுக்கும் ஆசைதான் ஒரு கோப்பை தேயிலைத்தண்ணியை குடித்து தாகத்தை தீர்த்துக் கொள்ள.

இல்ல தாயி நேரம் போகுது வெள்ளாவி வைக்கவேணும் மழை வாறாப்போல இரிக்கி காயப்போட்ட வெள்ளைகள எடுக்க வேணும் நான் வாறன்.. சொல்லி விட்டு மாராப்பை தோளில் போட்டுக் கொண்டு வீதிக்கு வந்து சந்தி கடையில் வெள்ளாவிக்கான சோடாத் தூளை வாங்கி இடுப்பில் சொருக்கிக் கொண்டான். மிச்ச சில்லறையை வாங்கும் போது கல்லாவில் இருந்த கடைக்கார போடியாரின் பேரன் தன்னிடம் காட்டிய மரியாதையை கண்டும் காணாதவனாய் நடந்தான் நாகமணி.

தோளில் தொங்கிய உடுப்பு மாராப்புகள் வழமையை விட இன்று பாரம் குறைந்திருப் பதை உணர்ந்தபோது அவனின் மனதில் ஒருவித



படிப்பகம்

www.padippakam.com

பாரம் ஏறிக் கொண்டது. ஊத்தை போட ஒரு துணியும் இல்ல நாகமணி என்று இன்று பல வீடுகளில் அவனைத் திருப்பி அனுப்பியபோது ஏன் என்ன காரணம் என்று அவன் சிந்திக்க வில்லை. வண்ணக்கர் பொஞ்சாதி சொன்ன போதுதான் அவனுக்கு உண்மை உறைத்தது. ஒரு பொழுதுக்குள் தன் மனைவியும் மகனும் ஏற்படுத்தி விட்ட மாற்றத்தினால் தன் தொழிலுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்று நினைத்து உள்ளூர பயந்தது அவனின் மனம்.

மேகம் இருண்டு வானம் மப்புக்கட்டியிருந் ததைக் காண காலையில் வெளுத்துக் கழுவி புல்தரையில் விரித்து விட்டு வந்த புடவைகளின் நினைவு வந்தது. காலையில் தான் வரும்போது வாசல் பந்தலுக்குள் தன் மனைவியைக் காண வந்து குவிந்திருந்த அயலூர்சனக்கூட்டத்தையும் நினைத்துக் கொண்டான் அவன்.

வீதியின் இருபக்கமும் விளைந்து பழுத்து சிவந்து தலைசாய்த்துக் கிடக்கும் நெல் வயலைப் பார்த்து பூரித்துப் போனான் நாக மணி. அந்த வயல்கள் அவனுக்கு சொந்தமில் லாதபோதும் அந்த வயலில் விளையும் நெல் தான் தனக்கு போகக் கூலியாக கிடைக்கின்றது என்பதை நினைக்கும் போது தனக்குள்ளேயே பெருமிதப்பட்டுக் கொண்டான்.

அறுப்புக்காலம் தொடங்கியிருக்கிற நேரத்துல தான் வானமும் இருண்டு போயிருக்கி. போன வருசமும் இப்பிடித்தான் கடைசி நேரமாப் பார்த்து அடைமழை கட்ட தேங்கி நிண்டு வடிஞ்சோடின வெள்ளத்துல விளைஞ்ச பயிரெல்லாம் வேரழுகி வெள்ளத்தோட போயிற்று. இந்த வருசமும் அப்பிடி ஒரு நிலைமை ஏற்படக்கூடாது, வருணபகவானே நீ தான் காப்பாத்த வேணும்... என்று வானத்தை அண்ணாந்து பார்த்து தனக்குள்ளேயே பேசிக்கொண்டான்.

கிராமத்துப் பெண்ணின் இடுப்புச்சேலை முந்தானை சொருகம் போல் முடிச்சுப் போட்டு கட்டிய உப்பட்டி கட்டுகள் அறுத்த வயலுக்குள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவிக் கிடந்தது. அழகாய் இருந்தது.

பிந்தி விதைத்த வேளாண்மை பயிர்கள் பிள்ளைத்தாய்ச்சியைப் போல் மொத்தி கட்டி வயிறுத்திப்போய் நின்றது. கண்ணுக்கு எட்டிய வரைநோட்டம் விட்ட நாகமணியின் கண்களில் பச்சை பயிர்வயலுக்குள் ஏதோ நடமாடுவதைப் போல் தெரிய நன்றாக உற்று நோக்கிய நாகமணியின் நெஞ்சம் பதறியது.

என்ன அநியாயம்கா இது குடலைப்பயிர தாய்களும் கண்டுகளுமாய் சேர்ந்து இப்பிடிச் சப்புதுகளே... என்று சொல்லிக் கொண்டு வேளாண்மை வயலுக்குள் இறங்கப்போனவன் துடக்கு புடவை மூட்டைகளோட விளையும் பயிருக்குள்ள இறங்கக் கூடாது என்று நினைத்த வனாய் தோளில் தொங்கிய மூட்டைகளை இறக்கி புல்தரையில் வைத்து விட்டு வயலுக் குள் இறங்கி நடந்து சென்று கோ... கோ... என்று மாடுகளையும் கன்றுகளையும் . விரட்டிக் கொண்டு போய் ஆற்றங்கரையில் விட்டு விட்டு மீண்டும் வந்து உடுப்பு மூட்டைகளை தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வயல் வெளி நடுவே தீவுத்திடல் போல் தெரிந்த தனது குடியிருப்பை நோக்கி நடந்து கொண்டிருந்தான் நாகமணி.

வாழ்க்கை முழுவதும் நின்று துணிதுவைத்ததில் இளகி ஊறி வெடித்து காய்ந்து போன பாதங்களில் சின்ன கிறவல் கல்லுகள் குத்திய போது சுள் என்று ஏற்பட்ட வலி உச்சிக்கு பாய்ந்தது.

திடீரென வீசிய காற்றில் ஒதுங்கப்பட்ட மழை மேகம் பொத்தானை காட்டை நோக்கி போனதில் வாசலில் இப்போதும் சனக்கூட்ட மாகவே இருந்தது. தோளில் ஊத்தை மூட்டை களுடன் உள்ளிட்ட தகப்பனை எரித்து விடுவது போல் முறைத்து பார்த்த மகன் குருநாதனை நிமிர்ந்து பார்த்து விட்டு கிணற்றடிக்குப்போய் உடுப்பு மூட்டைகளை இறக்கிப்போட்டு விட்டு ஆற்றங்கரைக்குப்போய் புல்தரையில் காய்ந்து கிடந்த புடவைகளை எடுத்து மடித்துக் கொண்டிருந்தான் நாகமணி. கஞ்சிபோட்டு காய்ந்து போன புடவைகளை மட... மட... வென்று இறுகிப்போயிருந்தது.

இனி மழை வருமாப்போல தெரியவில்லை இன்னுமொரு தரம் வெள்ளாவி வைச்சு ஊத்தைகள அவியப்போடலாம் என்று நினைத்துக் கொண்டு வந்து கொண்டு வந்த புடவைகளை மூலையில் வைத்து விட்டு அடுப்பை எரித்து வெள்ளாவிப் பானையை



படிப்பகம்

www.padippakam.com

வைத்து தண்ணீரை ஊத்தி சோடாத் தூளையும் கலந்து விட்டு துலா அடியில் குந்தியிருந்து குண்டூசியை எடுத்து கீசா குப்பிக்குள் இருந்த கறுப்பு மையைத் தொட்டு அவிக்க வேண்டிய ஒவ்வொரு உடுப்புகளுக்கும் குடும்பக்குறியை இட்டுக் கொண்டிருந்தான் நாகமணி.

முன்பெல்லாம் குண்டூசியில் மை தொட்டு உடுப்புகளுக்கு மகன் குருநாதன் குடும்பக் குறியிட மனைவி அடுப்பெரித்து வெள்ளா வியை கொதிக்க வைத்த ஊத்தைகளை அவித்துக் கொடுத்தால் அதை எடுத்துக் கொண்டு போய் ஆற்று நீரில் அடித்துக் கழுவி பிழிந்தெடுத்துக் கொண்டு வருவது மட்டும் நாகமணியின் வேலை. இப்போது எல்லாமே தன் வேலையாகி விட்டதாய் நினைத்துக் கொண்டவன் பந்தலுக்குள் என்ன நடக்கின்ற தென்பதை அறிய ஆசைப்பட்டவனாய் கண்ணையும் காதையும் பந்தல் பக்கம் திருப்பியபோது...

வெள்ளைச்சேலையுடுத்தி திருநீற்று பட்டை சாத்தி சந்தன குங்குமம் தரித்து தியான நிலையில் சாமிக்கோலத்தில் இருந்த தன் மனைவியின் காலில் விழுந்து வணங்கிவிட்டு கண்ணீர் வடிந்தபடி நிமிர்ந்து பார்த்த ஒரு பெண்ணுக்கு தன் மனைவி தலையில் நீர் தெளித்து ஆசிர்வாதம் செய்து விட செம்பி லிருந்து கொடுத்த நீரை பயபக்தியுடன் வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தாள் அந்த பெண்.

வந்திருந்தவர்கள் அனைவரும் வசதிபடைத்த அயலூரார்காரர். ஒழுங்கைக்குள் இரண்டு கார்கள் வந்து நிற்க காரிலிருந்து இறங்கி வந்தவர்கள் நேராக வந்து நாகமணியின் மனைவியின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

வாருங்கள்... வந்து அமருங்கள் தாங்களுக்கு என்ன குறையோ... நாகமணியின் மனைவி கேட்டாள்.

எங்களுக்கு ஒரு குறையும் இல்ல சாமியம்மா... உங்களுக்கு அருள் கிடைச்சசெய்தி கேட்டு உங்க பாதத்தை தொட்டு வணங்கிற்று போவம் என்று வந்தம். உங்கட பாதம் தொட்டதே நாங்கள் செய்த பாக்கியம் இதை விட எங்களுக்கு இன்னும் என்ன வேணும்... உள்ளம் உருகினாள் அந்த முக்காட்டு பெண்.

என்னில் என்ன மகளே இருக்கின்றது. எல்லாம் அவன் செயல். இலை ஆடுவதும் ஈசன் செயல்லவா... அவன் வந்தான் என்னில் குடியிருந்தான். எனது ரூபத்தில் அவனைக் காணுகின்றீர்கள்... சுத்தமான தமிழில் சொன்ன நாகமணியின் மனைவியை பயபக்தியுடன் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

எப்படியம்மா இந்த புதுமை நடந்தது... முக்காட்டு பெண்ணின் கணவன் கேட்டான்.

ஒருநாள் நள்ளிரவில் துகில் கொண்டிருந்த நேரம் கனவில் ஒரு அசரீதி என் காதுகளில் கேட்டது. நான் தான் நாகராஜா... இந்த லோகத்தில் நான் வந்து வாழ்வதற்கு உன் வீட்டை தேர்ந்தெடுத் திருக்கிறேன். இன்று முதல் உன் உருவில் நான் வாழப் போகிறேன். என்னையும் என் அருளை யும் நீதான் இந்த மானிடர்க்கு வெளிக்காட்ட வேண்டும். எழுந்திரு... எழுந்திரு... உன் வீட்டுக்குள் நான் குடி வந்திருக்கிறேன். எழுந்து என்னைப் பார் என்றது அந்த அசரீதி... எழுந் தேன். எழுந்தபோது என்னையும் அறியாமல் எனக்குள் ஒரு பரவசம் ஊடுருவியிருப்பதை அறிந்தேன். எழுந்து வந்து எனது உள் வீட்டைத் திறந்தேன். என்ன அதிசயம் இருண்டு கிடந்த என் உள் வீடு வெளிச்சம் பாய்ந்து ஜெகஜோதி யாக ஜொலித்தது. எங்கிருந்து இந்த ஒளி வெள்ளம் பாய்கின்றது என்ற பரவசத்தில் நின்றபோது இங்கே இருக்கிறேன் என்னைப் பார் என்றது ஒரு குரல்!... குரல் வந்த திசையில பார்த்தேன்... அப்போது தான் அந்த அதிசயம் என் கண்களுக்கு புலப்பட்டது. ஆம் அதோ பார்த்தீர்களா உள்வீட்டுச்சுவரில் தெரிகின்றதே ஏழு துவாரங்கள் அந்த ஏழு துவாரங்களின் ஒவ்வொரு துவாரங்களிலிருந்தும் ஒவ்வொரு மலையாக ஏழு நாக தலைகள் வெளியில் தெரிந்தது. அந்த தலைகளில் இருந்து வெளிப் பட்ட ஒளிவெள்ளம் தான் என்னை பரவசப் படுத்தியது. நாகராஜாவே உங்களைக் கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் என்று என்னையும் அறியாமல் கத்தினேன்... கத்திக் கொண்டே அந்த தலைகளை பார்த்துக் கொண்டிருந்தேன்.

சுவரில் தெரிந்த ஏழு துவாரங்களுக்குள்ளிருந்தும் வெளிப்பட்ட ஏழுதலைகளும் ஒன்றாக வெளிப்பட்டு ஓர் உடலும் ஏழுதலையுமாக காட்சியளித்த போது எனக்குள் ஓர் பரவசம் ஊற்றெடுத்தது... அந்த ஏழுதலைகளும் என்தலைமேல் குடையாக நின்றது. எனக்குள்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட பக்திப்பரவசத்தில் நான் மயங்கி விழுந்து விட்டேன். மீண்டும் ஓர் அசரீதி கேட்டது...

மகளே!... நான் இப்போது உனக்குள் புகுந்து விட்டேன்... இனி நீ வேறு நான் வேறல்ல... நீயே நான்... நானே நீ... நான் நீயாகிவிட்டேன். நீ நானாகி விட்டாய்... நான் இங்குதானிருப்பேன். உன்னோடு தான் இருப்பேன். என்னைக் காணவேணுமென்று நினைப்பவர்கள் உன்னைக் கண்டால் போதும் அது என்னைக் கண்டதற்கு சமன். இப்போது கண்களை திறந்து பார் என்றது அந்த அசரீதி.

நான் கண்களைத் திறந்தேன் திறந்த என் கண்களின் எதிரே இதோ... இதோ... இந்த ஏழு துவாரங்கள் உள்ள புற்று திடீரென தோன்றிருந்தது. அவர் எனக்கு காட்சி தந்த முறையும் அவர் குடியிருக்கும் இடமும் இதுதான்...

நாகமணியின் மனைவி நாகதெய்வத்தை கண்ட வரலாற்றை சொல்லி முடித்ததும் தன் சட்டைப் பையுக்குள் கைவிட்ட முக்காட்டு பெண்ணின் கணவன் ஒரு கட்டு பணநோட்டை எடுத்து பயபக்தியுடன் சாமியம்மாவிடம் கொடுக்க எனக்கு எதுவும் வேண்டாம் மகனே... கொடுக்க விரும்பினால் அவருக்கு காணிக்கையாக கொடுங்கள் அவர் வந்து ஆசீர்வாதம் செய்தால் எடுத்துக் கொள்ளுவோம். இல்லையென்றால் நீங்கள் மீண்டும் வரும்போது உங்கள் பணம் உங்களிடமே மீண்டும் திருப்பித் தரப்படும். அந்த நேரத்தில் நீங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று நினைத்துக் கொண்டு உங்கள் பணத்தை திருப்பி எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். இப்போது இந்த காணிக்கையை அந்த புற்றின் அடியில் வைத்து விட்டுச் செல்லுங்கள்.

சாமியம்மா இப்படிச் சொன்னதும் முக்காட்டுப் பெண்ணின் முகம் மழை காணா பயிர் போல வாடி விட்டது. தங்கள் காணிக்கையை நாகராஜா ஏற்றுக் கொள்வாரா இல்லையா என்ற பயம் அவள் முகத்தில் தெரிந்தது.

தாயே சாமியம்மா!... நாகராஜா கட்டாயம் வருவாரா... அவளின் கேள்வியில் தனது காணிக்கை நாகராஜாவால் ஏற்றுக் கொள்ளப் பட வேண்டுமென்ற ஆதங்கம் வெளிப்பட்டது.

என்ன மகளே கேள்வி இது... என்னைக் காணாமல் அவரும் அவரைக் காணாமல் நானும் இருந்ததுண்டா?... அவர் வருவார்... நள்ளிரவு நேரம் வருவார். வந்து பகலில் வந்த பக்தர்களில் யார் யார் உண்மையான பக்தர்கள் என்பதை என் காதுக்குள் சொல்லுவார்... அதன் பின் நானும் அவரும் அதிக நேரம் உரையாடுவோம் பின்பு அவருக்குரிய பாலையும் பழத்தையும் உண்டு குடித்து விட்டு இதோ இந்த புற்றுக்குள் சென்று அவர் உறங்கி விடுவார். அதன் பின்பு தான் நான் துயில் கொள்ளுவேன். சாமியம்மா சொன்னதும் முக்காட்டுப் பெண் மூன்று முறை விழுந்து புற்றில் தன் நெற்றியை முட்டிக் கொண்டாள்.

கணவர் வருவார், ஆசிரியர் வருவார், அதிகாரி வருவார் என்பது போல் அவர் வருவார், அவர் உண்பார். அவர் உறங்குவார், அவர் உரையாடுவார் என்றெல்லாம் தன் மனைவி சொல்வதையெல்லாம் நாகமணி கேட்டுக் கொண்டே இருந்தான்.

முக்காட்டுப் பெண்ணும் கணவனும் சாமியம்மாவின் கால்களைத் தொட்டு வணங்கி விட்டு விடைபெற்று சென்றுவிட அவர்களைத் தொடர்ந்து ஒவ்வொருவராக வந்து சாமியம்மாவை தொட்டு வணங்கி விட்டு ஏழுதலை நாகம் தோன்றிய சுவரில் உள்ள துவாரத்தையும் நாகராஜா பகல் தூக்கம் கொள்ளும் புற்றினையும் பார்த்தார்கள், வணங்கினார்கள், காணிக்கையாக பணம் வைத்தார்கள். முக்காட்டுப் பெண்ணுக்கும் கணவனுக்கும் சொன்ன சரித்திரைத்தையே மற்றவர்களுக்கும் சொன்னார் சாமியம்மா. இதற்கிடையில் இரண்டு மூன்று தடவை விறைத்து விழுந்து கிடந்த சாமியம்மாவை தண்ணீர் தெளித்து எழுப்பி விட யாரோ நாகராஜாவில் நம்பிக்கையில்லாதவர்கள் வந்திருக்கின்றார்கள் என்றும் அதுதன் ஞானக் கண்ணுக்குள் புலப்படுகின்றதென்றும் அதனால்தான் தான் விழுந்து விறைத்து விடுவதாகவும் சொல்லிக் கொண்டிருந்தாள் சாமியம்மா.

குண்டுசியில் மைதொட்டு குறிவைத்து முடித்த ஊத்தை உடுப்புகளை கொதிக்கும் வெள்ளாவிப் பானைக்குள் போட்டு அவிய வைத்தான் நாகமணி.

கிணற்றில் தண்ணி இறைத்து அவித்த உடுப்புகளில் ஊற்றி குளிரவைத்து அவை



படிப்பகம்

www.padippakam.com

களைப் பிழிந்து எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போனான்.

குப்பைக்கூழங்கள், இலைகொடிகள் சேராமல் ஆற்றுக்குள் கிடுகு வேலி கட்டிய நீர்ப் பகுதிக்குள் சென்று வெள்ளாவிகளில் அவித்துக் கொண்டு வந்த புடவை துணிகளை அடித்துக் கழுவி பிழிந்தபோது அவனின் காலில் ஏதோ ஊர்வதாய் உணர்ந்தவன் கரையேறி காலைக் குனிந்து பார்த்தான்.

ஒருபெரிய அட்டைப் புழுவொன்று தன் காலில் துளைபோட்டு ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டவன் இடுப்பு மடிப்புக்குள் கொண்டுவந்த சுண்ணாம்பு கட்டியொன்றை எடுத்து உள்ளங் கையில் வைத்து நீரில் கரைத்து அட்டையின் மேல் ஊற்ற சுண்ணாம்புத் தண்ணிபட்டதும் கழன்று விழுந்த அட்டை இருந்த இடத்தி லிருந்து குபுக்கென இரத்தம் வடிந்து கொண் டிருக்க ஆற்றுநீரினால் காலைக்கழுவிவிட்டு மீண்டும் ஆற்றுக்குள் இறங்கி புடவை துணி களைக் கழுவி பிழிந்து கொண்டு கரை யேறினான் நாகமணி.

பொழுது சாய்ந்து விட்டது. இனி புல்தரையில் புடவைகளை காயவைக்க முடியாது. இரவு வேளையில் நடமாடும் மாடுகள் மிதித்து சேதப்படுத்திவிடும் என்று நினைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து தென்னைமரங்களில் தொடுத்து கட்டப்பட்டிருந்த கொடிகளில் புடவைகளை காயவைத்தான். கதியெரித்து காலையில் கழுவிகாய்ந்த புடவைகளை மடித்து பொட்டிபோட்டு ஒவ்வொரு வீட்டும் உரிய புடவைச் சட்டைகளை பிரித்து அடுக்கி வைத்தான்.

நன்றாக இருட்டிவிட்டிருந்தது. எல்லா வேலை களையும் செய்து முடித்த போது இடுப்பு முறிந்த விழுந்து விட்டது போல் நோவு தெரிந்தது. பசிவேறு வயிற்றைக் கிள்ளியது. வாசலை எட்டிப் பார்த்தான். எல்லோரும் போய் வாசல் வெறிச்சோடிக் கிடந்தது. வீட்டுக்குள் எட்டிப் பார்த்தான். தாயும் மகனும் புற்றுக்கு அடியில் பக்தர்கள் வைத்துவிட்டுப் போன பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

நாகமணிக்கு பசி தாங்கவில்லை. குசினிக்குள் சென்று பார்த்தான். பழைய சோறுமட்டும் பானைக்குள் கிடந்தது. வழித்தெடுத்து ஒரு தட்டில் போட்டுக் கொண்டு பக்கத்து வீட்டுத் தெய்வானையிடம் போய் அந்த சோற்றுத் தட்டில் கொஞ்சம் கருவாட்டுக் குழம்பு ஊற்றி வாங்கி எடுத்துக்கொண்டு வந்து வாசலில் நிற்கும் செவ்வரத்தம் பூமரத்தின் கீழிருந்து சோற்றை பிசைந்து ஒருபடி வாயில் போட்ட போது மகன் குருநாதன் வந்து எதிரில் நின்றான்.

சோற்றை வாயில் வைத்துக்கொண்டே மகனை அண்ணாந்து பார்த்தான் நாகமணி.

நீ என்னகா நினைச்சிக் கொண்டு இப்படி யெல்லா நடக்குறாய்... குருநாதன் தகப்பனை அதட்டினான். மகன் சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாமல் மீண்டும் ஒருபிடி சோற்றை அள்ளி வாய்க்குள் போட்டுக் கொண்டான் நாகமணி.

இண்டைக்கு அம்மைக்கும் நம்மட குடும்பத் துக்கும் நம்மட சாதி சனத்துக்கும் மற்ற ஊராக்கள் தாற மதிப்பும் மரியாதையும் என்னெண்டு தெரியுமோகா உனக்கு...

தெரியல்லையேடா.. ஒள்ளுப்பம் சொல் லண்டா எனக்கும்.. தொண்டைக்குள் இறங்கிய சோறு விக்கலெடுத்து செம்பிலிருந்த தண்ணியை எடுத்து மடமடவென குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

எங்கட சாதிசனத்தில உள்ளவங்கள தங்கட சாதிசனத்தோட சேர்க்காத உயர்சாதிக்கார லெல்லாம் இண்டைக்கு நம்மட ஊட்டுக்குள்ள வந்து அம்மைய தொட்டுக்கும்பிட்டு அம்மான்ர கையால தண்ணியும் வாங்கிக் குடிக்கினம். இது தெரியாம நீ இன்னும் தூமைச்சீலை வெளுத்து எங்கட மானத்த வாங்குறாய்.. உனக்கென்ன குறைகா இந்த ஊட்டுல.. பேசாம கிடந்து கொண்டு ராசாமாதிரி திண்டு கொண்டு இரிக்காம விடிஞ்சா பொழுதுபடும் வரைக்கும் ஆக்கள் வந்திரிக்கிற இடத்துல ஏன்கா எங்கட மானத்தை வாங்குற....

டேய் மகனே குருநாதா!.. மதிப்பும் மரியாதையும் நீயாக கேட்டு வாங்கக்கூடாதுடா அத அவங்ளா திருந்தி விரும்பி திரும்பித் தர வேணும்டா.. இண்டைக்கு கொம்மார கையால தண்ணி வாங்கிக் குடிக்கிற உயர்சாதிக்காரன் ஒருவன் நம்மட இந்த குடியிருப்பில இருக்குற ஒவ்வொரு ஊட்டுலயும் போய் தண்ணி வாங்கிக் குடிப்பானாடா?... இல்லையேடா. அப்ப ஏண்டா இந்த போலி நாடகமும் நடிப்பும்.. தெய்வானை வீட்டுக் குழம்புக்குள் கிடந்த



படிப்பகம்

www.padippakam.com

கருவாட்டு முள்ளைசப்பி துப்பினான் நாகமணி.

அப்போ இஞ்சபாருகா.. நம்மட குடியிருப்புல அம்மைக்கு மட்டும்தானே இப்பிடி அருள் கிடைச்சிருக்கு. அப்ப அம்மைக்கிட்ட மட்டும் தானே எல்லாரும் வருவாங்க.... குருநாதன் சொல்லி முடிக்கும் முன்னே கலகலவென சத்தமாக சிரித்தான் நாகமணி.

குருநாதா அந்தா கிணத்தடியில் நிக்கிற தென்னம்புன்னையில சாத்தி வைச்சிருக்கிற உலக்கைய கேட்டா அது சொல்லும்டா ஏழுதலை நாகம் ஊட்டுக்குள்ள வந்து கொம்மைக்கு எப்படி அருள் குடுத்துச்செண்டு.. கையைக் கழுவி எச்சி தண்ணிய தூர வீசிவிட்டு அருகில் இருந்த துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு உள்ளே போய் நடுவால் கிழிந்த பாயொன்றை எடுத்துக்கொண்டு நடுவாசலில் நாகமணி படுத்துக்கொள்ள தென்னம்புள்ளையில் சாய்ந்து நின்ற உலக்கையையே சிறிது நேரம் பார்த்திருந்து விட்டு வீட்டுக்குள் போய் தாயின் அருகில் படுத்துக் கொண்டான் குருநாதன்.

மூன்றடி கூந்தலை வெட்டியெறிந்து விட்டு மொட்டைத்தலையும் வெள்ளைச்சீலையுமாய் படுத்திருக்கும் மனைவியைப் பார்த்தபோது சிரிப்பதா, அழுவதா என்று தெரியாமல் இருந்தது நாகமணிக்கு. உடலுறவு வெறுத்து குடும்பத்தை மறந்து சன்னியாசி கோலம் பூண்டிருக்கும் தன்மனைவி இந்த நிலையை அடைந்திருக்க காரணமான அந்த இரவு நாகமணியின் கண்முன்னே வந்து நின்றது. தென்னம் பிள்ளையில் சாய்த்து வைத்திருக்கும் அந்த உலக்கை விளக்கு வெளிச்சத்தில் நீண்டு நிழலாக தெரிகின்றது. இந்த உலக்கையினால் தான் குருநாதனும் தாயும் ஒரு இரவில் உள்வீட்டுச்சுவரில் ஏழு ஓட்டைபோட்டார்கள். ஆத்து கழி மண்ணையும் மணலையும் கலந்து குழைத்து இரவோடு இரவாக நடு வீட்டுக்குள் புற்று தயாரித்தார்கள். புற்றை சுற்றி மேடை போட்டு வெள்ளைசீலை விரித்தார்கள். யாரும் பார்க்காதவாறு இரண்டு நாள் வீட்டை பூட்டி வைத்து விட்டு மூன்றாம் நாளில் ஏழுதலை நாகம் வந்தது காட்சி தந்தது வீடே ஜெக ஜோதியாக ஜொலித்தது என்று கதைகட்டி னார்கள். எதையும் வெளியில் சொல்லக்கூடாது என்று மகனால் கட்டாயப்படுத்தப்பட்டான் நாகமணி. அன்று வரத்தொடங்கிய அயலூர்பக்த கூட்டத்தின் வருகை இன்றுவரை முடிய வில்லை. எப்போது வெளுக்கும் இந்தசாயம் என்ற சிந்தனையில் இருந்த நாகமணி தன்னை யும் அறியாமல் நித்திரையாகி விட வீட்டுக்குள் இருந்த புற்றிலிருந்த இரண்டு பாம்பு வெளியே தலைகாட்டியது.

என்ன நினைத்ததோ தெரிவில்லை. வெளியில் தலைகாட்டிய இரண்டில் ஒருபாம்பு மீண்டும் புற்றுக்குள் தலையை நுழைத்துக் கொள்ள மற்ற பாம்பு மெல்ல புறப்பட்டு புற்றிலிருந்து இறங்கி சர்ர்.. என்று ஊர்ந்து வந்து புற்றின் அடியில் கிண்ணத்தில் வைத்திருந்த பாலை உறிஞ்சி குடித்துவிட்டு தலையை நிமிர்த்தி அங்கும் இங்கும் பார்த்துவிட்டு அடிக்கடி நாக்கை வெளியே காட்டிக் கொண்டபடி வளைந்து நெழிந்து சென்று நாகமணியின் நெஞ்சில் ஏறிபடமெடுத்தபடி நின்றது.

கொடியில் காயப்போட்ட ஈரத்துணியொன்று தன்மேல் விழுந்து விட்டதாய் நினைத்த நாகமணி நெஞ்சில் படமெடுத்து நின்ற பாம்பை கையால் எடுத்து அருகில் தூக்கி எறிந்து விட்டு மறுபக்கம் புரண்டு படுக்க எறிந்ததும் துள்ளிக் குதித்த பாம்பு மீண்டும் ஊர்ந்து வந்து நாகமணியின் உடலுக்கு மேலால் ஏறி ஊர்ந்து வீட்டுக்குள் படுத்த நாகமணியின் மனைவியின் அருகில் வந்து தவணை போட்டு படுத்துக் கொண்டது.

பலமாக அடித்த காற்று விளக்கை அணைத்து விட வீடு இருளில் வியாபித்தது. முழங்காலுக்கு மேலே ஒதுங்கிக் கிடந்த சேலையை கீழே இழுத்து விட்டு விட்டு மறுபக்கம் புரண்டு படுத்தபோது தன்கையில் ஏதோ குளிர்ச்சியாக பட்டு நெழுநெழுப்பாய் உணர்ந்த நாகமணியின் மனைவி டேய் குருநாதா எழும்புடா மகனே.. கையில் ஏதோ தட்டுப்படுற மாதிரி இரிக்கி.. என்று சொல்ல தாயின் பதட்டமான குரல் கேட்டு எழும்பிய குருநாதன் விளக்கை எரியவிட்டு பார்த்தபோது தன் அருகில் சுருண்டு படுத்திருக்கும் பாம்பைக் கண்டதும் எண்ட மகனே குருநாதா பாம்புடா மகனே... என்றபடி முந்தானையை உதறியபடி எழும்பிய வேகத் தில் அதிரிச்சியடைந்த பாம்பு கோபம் கொண்டது போல் சீறி படமெடுத்து தலையை உயர்த்தியது.

மனைவியின் சத்தம் கேட்டு நாகமணியும் விழித்துக் கொண்டு உள்ளே வந்தபோது பயந்து



படிப்பகம்

www.padippakam.com

நடுங்கியபடி அவனின் மனைவி வீட்டு மூலைக்குள் நின்று கொண்டிருந்தாள்.

எலக்கோ அப்பா பாம்புகா வராதேகா விலத்தி நில்லுகா... குருநாதன் சொன்னபோது தான் நாகமணி பார்த்தான். பாம்பு படமெடுத்தபடி நின்று கொண்டிருந்தது.

டேய் என்னடா பார்த்துக் கொண்டு நிற்கிறாய்.. அடிச்சிச் சாக்காட்டண்டா அந்த சனியன.. தாயின் குரல் கேட்டதும் ஓடிப்போய் தென்னையில் சாய்த்து வைத்திருந்த உலக்கையை எடுத்துக் கொண்டு ஓடிவந்த மகனை நாகமணி தடுத்தான்.

டேய் குருநாதா அதுர படத்தப்பார்த்தா நாகம்போல தெரியுது அடிக்காதை.. நாகத்தைக் கொண்ட பாவம் நம்மட பரம்பரையையே விடாதுடா.. அடியாதை.. சொல்லிப் போட்டன்... நாகமணி சொல்லியதைக் கேட்டு குருநாதன் தாயின் முகத்தைப் பார்த்தான்.

டேய் அந்த மனிசண்ட கதைய உட்டுப்போட்ட அடிடா அந்த சனியன.. அடிடா... அடிடா.. அடி.. அடி.. அடே படம் எடுக்குதடா.. நிலத்துல கொத்தி சாபம் போடப்போகுதுடா அடிடா.. அடிடா.. தாயின் சொல்கேட்டு உலக்கையுடன் முன்னேறிய குருநாதனை தடுத்தான் நாகமணி.

மகனே குருநாதா இந்த அப்பன் இண்டைக்கு மட்டுமாவது கேளு.. இந்த நாகத்துக்கு கட்டாயம் ஒரு இணையன் இரிக்கும் அதுவும் எப்படியும் இங்கதான் திரியும் இந்த நாகத்தை நீ சாக்காடினாயெண்டால் அந்த நாகம் இதத் தேடிவரும். இணையனப் பிரிஞ்ச சினம் கொண்டால் அதுக்குப் புறகு நான குடியிருந்த பாடில்ல.. கொமர கதைய கேளாத சோல்லிப் போட்டன்... சொல்லிவிட்டு ஒருபிடி மண்ணை அள்ளி பாம்பின் மலே எறிந்து நீபோ... நீபோ... அப்பன் எண்ட ராசன் எல்லவோ.. நீபோ. என்று குழந்தையுடன் கதைப்பதுபோல் பாம்புடன் கதைத்தான் நாகமணி.

டேய் குருநாதா நான் சொல்லுறத கேளு... அத அடிச்சிச் சாக்காடப் போறியோ இல்லையோ?... உன்னால ஏலாதெண்டால் இஞ்ச கொண்டுவா உலக்கைய ... என்று கொண்டு உலக்கைய பறிக்கவந்த தாயை விலகி நிற்கச் சொல்லி விட்டு உலக்கையை ஓங்கி பாம்பின் தலையில் போட அதன் தலை மண்ணுக்குள் சப்பையாகிப் போக வால்பகுதி மட்டும் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட குருநாதன் மீண்டும் இரண்டு மூன்றுதரம் பாம்பின் உடம்பில் உலக்கையை தூக்கிபோட பாம்பின் உடம்பு கிழிந்த சீலையாகிக் கிடந்தது.

இந்த கொடுமையை பார்க்கப் பிடிக்காத நாகமணி மீண்டும் போய் பாயில் படுத்து தலைசாய்த்துக் கொண்டான். செத்த பாம்பை தூக்கிக் கொண்டு வளவின் மூலையில் போட்டு அதன் மேல் காய்ந்த தென்னை ஓலைக் கூந்தல்களைப் போட்டு எரித்தான் குருநாதன்.

மீண்டும் அந்த உலக்கை தென்னை மரத்தில் சாய்த்து வைக்கப்பட்டது. இன்னும் ஆறு பாம்பு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்போ என்னவோ தாய்க்கும் மகனுக்கும் என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டான் நாகமணி.

ஒழுங்கைக்குள் வந்து நின்ற வாகனத்தின் சத்தம் கேட்டு நாகமணி எழுந்தபோது நன்றாக விடிந்திருந்தது. குருநாதனும் தாயும் வீட்டுக்குள் புதிதாக வெள்ளை விரித்து பூஜைக்குரிய ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தார்கள். நாகமணி எழுந்து சென்று கிணற்றில் தண்ணி அள்ளி கைகால் முகம் கழுவி விட்டு வாசலுக்கு வந்தபோது நேற்று வந்த முக்காட்டு பெண்ணும் கணவனும் இன்னும் சிலரும் வந்து கொண்டிருந்தார்கள்.

நேற்று பின்னேரம் வெளுத்து கொடியில் தொங்கப் போட்ட புடவை துணிகளை தொட்டுப் பார்த்தான் நாகமணி. அவைகள் இன்னம் காயாமல் ஈரமாகவே இருந்தது. வெள்ளாவி அடுப்பில் படுத்திருந்த சிரட்டை நாயொன்று இவனைகண்டதும் காலை உயர்த்தி அடுப்புக்குள் சர்ர்.. என்று பாய்ச்ச இவன் ஓடிப்போய் அடி .. அடி... என்று நாயை விரட்டி விட்டு எங்கோவிழுந்து கிடந்த ஒருபுடவையை எடுக்கப் போக அதற்கிடையில் ஓடிவந்த அடைக்கோழியொன்று விழுந்து கிடந்த சீலையின் மேல் நின்று காலை இடர்ந்து பீய்ச்சி விட்டு நாகமணிக்கு பழிப்புக் காட்டுவது போல் இரண்டொருதரம் மலவாசலை மூடித் திறந்து பின் பக்கத்தை ஆட்டிக் காட்டிவிட்டு ஓடிய போது கோபம் கொண்ட நாகமணி ஓடிப்போய் புடவையை எடுத்துப் பார்த்தான். நாற்ற மடித்தது.

புடவையை எடுத்துக் கொண்டு வந்து தண்ணீரை இறைத்து கால்களுக்கிடையில்



படிப்பகம்

www.padippakam.com

சீலையைப் போட்டு கசக்கிக் கொண்டு வீட்டுக்குள் என்ன நடக்கிறதென்று அறிய ஆசைப்பட்டவனாய் எட்டிப் பார்த்தான்.

ராத்திரி பூரா நித்திரையில்ல சாமியம்மா... எங்கட காணிக்கையை நாகராஜா ஏற்றுக் கொண்டாரா இல்லையா? ... என்கிறத அறியத்தான் கார்புடிச்சு ஓடிவந்தம்.. முக்காட்டுப் பெண் சோகமும் குரலில் கவலையும் காட்டினாள்.

கவலை கொள்ளாதே மகளே!.... ராத்திரி நள்ளிரவில் அவர் வந்தார். என்னோடு நீண்ட நேரம் உரையாடினார்.. உங்கள் காணிக்கையை அவர் முன் வந்து ஏற்றுக் கொண்டார். அவருக்கு நிரந்தரமான வதிவிடம் ஒன்று தேவையென்று ஆசைப்பட்டார்.. அதற்காகவே உங்கள் காணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கின்றது... என்று நாமணியின் மனைவி சொல்ல வந்த வர்கள் எல்லோரும் விழுந்து வணங்கினார்கள்.

இது நாங்கள் முற்புறப்புல செய்த பூர்வ ஜென்மபலன்தாயே!.. என்றார்கள் அவர்கள்.

அடிக்கடி வாருங்கள்..உங்கள் வருகையை நான் அவருக்குத் தெரிவிக்கின்றேன்.. அவனின்றி எதுவும் அசையாதே... இலையாடுவதும் ஈசன் செயலல்லவா.. நீங்கள் போய் வாருங்கள்.. நாகமணியின் மனைவி சொன்னதை கேட்டு பூரித்துப்போன அவர்கள் போய்விட தொடர்ந்து வந்தவர்களிடம் பேசத் தொடங்கினாள் நாகமணியின் மனைவி.

காலால் கசக்கிய புடவையை எடுத்துப் பார்த்தான் நாகமணி. அடக்கோழி பீய்ச்சியது பச்சை நிறத்தில் அடையாளமாகத் தெரிந்தது. கையால் கழுவி இந்த கசறு போகாது இதுக்கொண்டு கட்டாயம் ஒரு வெள்ளாவி வைக்க வேணும். வெள்ளாவி வைத்து அவித்தால் கட்டாயம் வெளுக்கும்.

சூரியன் பட்ட ஆறு வெள்ளித்தகடாய் மினுமினுத்து ஆடியது. அடுப்பை எரித்து வெள்ளாவிப் பானையை வைத்து சோடாத் தூளையும் தண்ணீரையும் விட்டுக் கலந்தான். கொதித்தபின் சீலையைப் போட்டால் இந்தப் புடவை கட்டாயம் வெளுக்கும். வெள்ளாவிப் பானை கொதிக்கும் வரை காத்திருந்தான் நாகமணி.

●

# பிணைப்பு

**செல்லா**

மணம் வீசி அழைத்து
குடைவிரித்து குடிகொள்ளச் செய்ததை
மெலிதாய் நுகர்ந்திழுத்தவாறே
புதைந்து விட்டேன் பூவினுள்

திகட்டலுக்குப் பிறகு திங்கமுடியா
பொங்கலாய் நகர்த்திவிட்டாலும்
திரும்பத்திரும்ப உள்ளம் நாடும்
கிருகிருப்பாய் என் முன்

மரத்துக்குக் காலான
சூரிய நிழலின் நகர்வுபோல்
கூட்டில் கட்டப்பட்ட கால்

தள்ளிவிட்டு ஓடமுடியாததும்
கட்டுண்டு கிடக்காததும்தான்
மணம்

★ ★ ★

# இரவு

நினைவுகளை மிதக்கவிட்டு
வேடிக்கையாளனாய் நான்

அமைதியற்ற மௌனத்தில்
குறைந்த ஒளிக்கீற்றாய்
பளபளக்கிறது நிஜம்

நிகழ்ந்தது போன்ற நினைவை
நிகழ்வாக்கி, நிகழப்போவையுமாகி
நிலை கொண்டு விட்டது கனவு


பாழ்வெளியில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கும்
பாதுகாப்புணர்வுக்கான உறக்கமின்மை
சோர்வில் சுருண்டுவிடுகிறது

உறங்கும்பொழுது கால் நழுவிய
குருவியின் சப்தத்தில்
என் அரற்றலின்
மொழி ஒலிப்பதாய்
தொடர்கிறது கனவற்ற நிஜம்



படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்தியமும் முன்னேற்றமும்

இஜாஸ் அகமது

தமிழில் : கலைச்செல்வன்

Lineages of the Present
நிகழ்காலத்தின் பாரம்பரியங்கள் என்ற தொகுப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
வெளியீடு : Tulika - Delhi.

1973-இல் 'ஏகாதிபத்தியமும் முதலாளித்துவ தொழில் மயமாக்கலும்' என்ற நூலை வெளியிட்ட ஆங்கிலேய எழுத்தாளர் பில்வாரன் தற்பொழுது (1980) ''ஏகாதிபத்தியம் - முதலாளித்துவத்தின் முன்னோடி'' என்ற நூலை வெளியிட்டுள்ளார். இவை இரண்டுமே இன்று மேலை மார்க்சியர்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ள 'புதிய இடது நூல்கள்'' அமைப்பால் வெளியிடப்பட்டன. ''முதலாளித்துவ வரலாற்றில் கொடுமையான கட்டமே ஏகாதிபத்தியம், ஏகாதிபத்திய நாட்டுப் பெரு முதலாளிகளின் செல்வக்குவிப்பு மிதமிஞ்சிப்போக அடிமை நாடுகளில் சுரண்டலின் அளவு மிதமிஞ்சிப் போகின்ற காலகட்டம்'' என்ற லெனினிய தத்துவத்தை எதிர்த்து உலக முதலாளித்துவ அமைப்பில் விளிம்பு நாடுகளுக்கு தொழில் நுட்பத்தையும், தொழில் மயமாக்கியும் கொண்டு வரும் முன்னேற்றத்தின் தூதுவராக ஏகாதிபத்தியத்தை சித்தரிப்பதே அவ்விரு நூல்களின் நோக்கமாகும். ஐரோப்பிய, அமெரிக்க மார்க்சிய அறிவுஜீவிகள் மத்தியிலும் மற்றும் ஐரோப்பிய பொதுவுடமைக் கட்சிகள் மத்தியிலும் அண்மைக் காலங்களில் உருவாகி வரும் ஒரு பொதுவான போக்கின் பிரதிபலிப்பே இது என்பதால், இதனை விரிவாக ஆய்வது அவசியம்.

காலனீயத்தையும், நவீனமாக்கலையும் கைகட்டி ஆதரிப்பவராக காரல் மார்க்சை காட்டி வரும் முயற்சி அண்மைக் காலங்களில் நடைபெற்று வருகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு காலனீயம் முக்கியமானதல்ல; மைய நாடுகளின் மூலதனத் திரட்சிக்கு ஏகாதிபத்தியம் இன்றியமையாததல்ல; சரியாகச் சொன்னால், ஏகாதிபத்தியம் என்ற கருத்தே 'மூன்றாம் உலக வாதிகளின்' கற்பனை; மாறாக காலனீயம் மூன்றாமுலக நாடுகளுக்கு தொழில் நுட்பத்தையும், சமுதாய மாற்றங்களையும் கொண்டு வரும் ஒரு முற்போக்குச் சக்தி என்ற பிரச்சாரம் தொடங்கியுள்ளது. காட்டுமிராண்டி ஆசியாவில் மேலை நாகரீகத்தைப் பரப்பியதை வியந்து ஆதரிக்கும் ஒரு நவீனத்துவ வாதியாக காரல் மார்க்சைக் காட்ட ஷோல்மோ அவனேரி முயல்கிறார். வடக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவ மாற்றம் ஏற்பட்டதற்கு அங்கு உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களே போதுமான காரணங்களாகும். காலனியச் சுரண்டல் சாத்தியப்படுத்திய மூலதனத்திரட்சியும், காலனீயச் சந்தைகளும் இரண்டாம் பட்சமானவையே என்று ஸ்வீசி-தேப் விவாதத்தைப் பற்றிய தம் விரிவுரையில் எய்டன் போஸ்டர் - கார்ட்டர் எழுதியுள்ளார். ஏகாதிபத்தியம் என்று அழைக்கப்படுவதற்கும், மூலதனத் திரட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, தப்பித் தவறி சுரண்டல் ஏதும் நடந்திருந்தால் அவை கொள்கை மாற்றங்களின் தொடர் விளைவுகளே என்று சிமான்ஸ்கி வாதிடுகிறார். சார்புத் தத்துவம், சமமற்ற பரிவர்த்தனை



படிப்பகம்

www.padippakam.com

என்பதெல்லாம் கற்பனை; புதிய ஸ்மித்திசம்; பின்தங்கிய நாடுகள் பின்தங்கியிருப்பதற்கு அவை பின் தங்கியதே காரணம் என்று ராபர்ட் ப்ரென்னர் - ஜான்வீக்ஸ் - எலிசபெத் டோர் ஆகியோர் வாதிடுகின்றனர். பல்வேறு விவாதங்களில், நவீன முதலாளித்துவத்தின் தன்மை, அரசியல் போராட்ட வழி ஆகிய வற்றை நிர்ணயிப்பதற்கு ஏகாதிபத்தியத்தைக் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை என்ற கருத்து பரப்பப்படுகிறது. எடுத்துக்காட்டாக முதலாளித்துவ அரசின் தன்மை பற்றி அலசிய பௌலண்ட்சா - மிலிபாண்ட் - லக்லூ' வின் புகழ் பெற்ற விவாதத்தை எடுத்துக் கொள் வோம். இங்கே அரசு என்பது, ஐரோப்பாவிற்கு உள்ளேயே நிகழ்ந்த மூலதனத்திரட்சியின் அரசாகக்காட்டி, உலக அளவில் இவ்வரசுகளின் ஏகாதிபத்தியத்தன்மை, ராணுவ பொருளியல், அரசியல் துறைகளில் அவற்றின் திட்டவட்ட மான ஒடுக்குமுறைச் செயல்பாடுகள் ஆகிய வற்றைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடு கின்றனர். மறுபுறம் ஐரோப்பிய பொது வுடைமைக் கட்சிகள், தம்நாட்டு அரசுகள் ஏகாதி பத்தியங்கள், அவற்றின் ஏகாதிபத்தியத் தன்மையை உடைத்தெறிதல் உண்மையான சோசலிச மாற்றத்திற்கான எல்லாத் திட்டங் களிலும் இடம்பெற வேண்டும் என்ற கருத்துக் களை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டன.

மேலே நாம் குறிப்பிட்ட ஆசிரியர்களின் கருத்துக்களைப் போல் வாரனின் கருத்துக்கள் அவ்வளவு ஆழமாகவோ, சிறப்பாகவோ எழுதப்படவில்லை ஆயினும், அவற்றின் பொதுவான போக்கையே சித்தரிக்கின்றன.

**வாரனின் கூற்று**

'ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாடுகள் நமது கால கட்டத்தின் முக்கிய அரசியல் தத்துவங் களாகி விட்டன. பொருளியல், அரசியல், பண்பாடு மற்றுமல்லாமல் மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் மேலாண்மை செலுத்துவதாகக் கருதப்படும் ஏகாதிபத்தியம், பெரும்பான்மை மனித குலத்திற்கு இழைத்த தாகவும், தொடர்ந்து இழைத்து வருவதாகவும் கூறப்படும் கொடுமைகளை குறிப்பாக (ஆனால் பெரும்பாலும் மேலோட்டமாக) இத்தத்துவங்கள் விவரிக்கின்றன. இதனால், முதலாளித்துவத்தின் கடந்த காலச் சாதனை களின் அடிப்படைத் தத்துவமான 'மேலை தாராளவாதம்' முற்போக்குச் சிந்தனையாக உணரப்படுவதற்குப் பதில் வெட்கமும் குற்றவுணர்வும் கொள்ளப்பட வேண்டிய தத்துவமாக இழிவு செய்யப்படுகின்றது. இதனோடு சுயவேதனை விரும்பிகளால் வெள்ளை மனிதனின் சுமைகளாக சித்தரிக்கப் படுவனவற்றையும் சேர்த்துக்கொண்டால், மார்க்சீய வரலாற்றிலேயே அதற்குக் கிடைத்த மாபெரும் விளம்பர வெற்றி இது எனலாம்... ஏகாதிபத்தியக் கருத்துருவாக்கத்திற்கு மார்க் சீயத்தைப் பயன்படுத்தியதால் இன்று எண்ணற்ற ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் நிராயுதபாணிகளாகியுள்ளனர்.''

வாரனின் சீற்றத்திற்கு வானமே எல்லை. ஏகாதிபத்தியம் என்பதெல்லாம் வெற்றுக் கோட்பாடு, வெறும் பிரச்சாரம், ஏகாதிபத்தியத் தால் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ப தெல்லாம் வெறும் குற்றச்சாட்டுத்தான். மேலை தாராளவாதத்தை முற்போக்கு சிந்தனையாக மீண்டும் கொண்டு வர வேண்டும். மார்க்சீய வாதிகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உழைக்கும் மக்களின் அதிர்ஷ்டம் ஆனால் வாரன் ஒன்றும் சாதாரண நவீனத்துவவாதி அல்ல. மார்க்சீயம் என்று அவர் நம்பும் கருத்துக்களுக்குள் உறுதி யாக நிற்கிறார். புகழ் பெற்ற 'உற்பத்திச் சக்தி களின் விதி' யின் ஒரு புதிய மரபை உருவாக்கி இருக்கிறார். லெனினியத்தை ஒரு வரட்டுத் தத்துவமாக குறை கூறுகிறார். தேசிய வாதம், கவர்ச்சிவாதம், காலனீய எதிர்ப்பு, போன்ற மூன்றாம் உலகப் பிற்போக்கு வாதங்களோடு அது கூட்டுச் சேர்வதாக குற்றம் சாட்டுகிறார். இதனால் அந்நிய முதலீடு தடுக்கப்படுகிறது. அதனால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தடைபடுகிறது. இதனால் உலகப் புரட்சியே தடுக்கப்படுகிறது என்று பொங்கி எழுகின்றார்.

புகாரின் - லெனின் தொடங்கி இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு முழுமையடைந்த ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சீயச்சிந்தனைகள் அனைத்தையும் வாரன் மறுக்கிறார். மறுபுறம் அ) ஏகாதிபத்திய காலம் முடிவடைந்து விட்டது ஆ) மூன்றாம் உலக நாடுகளின் தொழில் மயமாக்கலுக்கு வலுவான அடித்தளம் இட்டதே மனித குல முன்னேற்றத்திற்கு ஏகாதிபத்தியத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பங்களிப்பாகும். இ) நவீன நாடு கடந்த



படிப்பகம்

www.padippakam.com

நிறுவனங்கள் உலகமெங்கும் உற்பத்திச் சக்திகளை மிதமிஞ்சிப் பெருக்கி வருவதால், ஏழை-பணக்கார நாடுகளிடையே நிலவும் இடைவெளிகள் குறைந்து கொண்டே வருகின்றன என்றும் நிறுவ முயற்சிக்கிறார். அவரது கூற்றுப்படி விரைவில் சோமாலியா சுவீடனுக்கு இணையாக வளர்ந்து விடும். நமது குழந்தைகள் - வெள்ளையோ, கறுப்போ, மஞ்சளோ - அனைவரும் அந்நிறுவனங்களின் அரவணைப்பில் என்றென்றும் மகிழ்ச்சியில் திளைப்பார்கள். அதன் பிறகு, சோசலிசம் நோக்கிய உண்மையான போராட்டத்தைத் தொடங்கலாம்.

முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் உலக ளாவிய முற்போக்குச் சக்திகள் என்பதை நிறுவ இந்தியா பற்றி காரல் மார்க்ஸ் எழுதிய புகழ் பெற்ற இரண்டு கட்டுரைகளை மட்டும் எடுத்துக் கொள்கிறார். அதற்குப் பின் மார்க்சும் எங்கல்சும் காலனீயம் பற்றி எழுதியவை களையும், கடந்த ஒரு நூற்றாண்டுச் சிந்தனை களையும் புறக்கணித்து விட்டு, மேலோட்ட மாக எழுதப்பட்ட அந்த இரண்டு கட்டுரை களை மட்டுமே அடிப்படையாக வைத்து காலனீயம் பற்றிய கோட்பாடுகளை உருவாக்க வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார். மேலும் காலனியமே மனித குல வளர்ச்சிக்குத் தேவையான முற்போக்குச் சக்தி என்ற சரியான மார்க்சியக் கோட்பாடு போல்ஷ்விசத்தினன் வரவால் செல்வாக்கிழந்து போனதாக வருத்த மடைகிறார். இது எல்லாவற்றிற்கும் காரணம் லெனின் என்று குறை கூறுகிறார்.

தனது நூலின் இரண்டாம் பகுதியில் விளிம்பு நாடுகளின் தற்சார்பின்மை, குறைவளர்ச்சி, பின்தங்கிய நிலைமை, சமமற்ற வளர்ச்சி, சமமற்ற பரிவர்த்தனை ஆகிய அனைத்தையும் மொத்தமாக மறுத்து விட முயல்கிறார். காலனி களின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு காலனியம் தடையாக இருந்தது என்றோ, விளிம்பு நாடுகளின் இயல்பான மூலதனத் திரட்சிக்கும், வளர்ச்சிக்கும் ஏகாதிபத்திய மேலாண்மை தடையாக நின்றது என்றோ பேசுபவர்களையெல்லாம் ''தேசிய-கற்பனா வாத - மார்க்சீய எதிர்ப்பு பிரச்சாரகர்கள்'' என்று முத்திரை குத்தித் தூக்கி எறிந்து விடுகிறார். இயல்பான உள்நாட்டு மூலதனத் திரட்சி யையும், வளர்ச்சியையும், காலனீயத்தின் நேரடி ஆட்சி குறுக்கவும் இல்லை தடுக்கவும் இல்லை. மாறாக, முற்போக்கான சமுதாய மாற்றத்தைக் கொண்டு வந்த வலிமையான எஞ்சினாகவே செயல்பட்டது என்று அடித்துக் கூறுகிறார். தற்பொழுது, அதாவது காலனீயத் திற்குப் பிந்திய கட்டத்தில், விளிம்பு நாடுகளின் வளர்ச்சியையே ஏகாதிபத்திய நாடுகள் விரும்பு வதாகவும் அதனால் முதலாளித்துவ உலகிற் குள் அரசியல் - பொருளாதார அதிகாரப்பரவலில் ஏற்றத்தாழ்வு மிகவும் குறைந்து வருவதாகவும் மேலும் 'நாம் ஏகாதிபத்தியம் நலிவடைந்து முதலாளித்துவம் உயர்வடைந்து வரும்' கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் வாதிடுகிறார். இக்கூற்றுகளுக்கு ஆதாரமாக, வர்த்தக விதிகள் மூன்றாம் உலக நாடுகளுக்கே சாதகமாக இருப்பதாகவும், மொத்த உற்பத்தியில் தொழில் துறையின் பங்கு மைய நாடுகளிலும், விளிம்பு நாடுகளிலும் ஒரே அளவில் இருப்பதாகவும், மைய நாடுகளை விட விளிம்பு நாடுகளே தொழில் வளர்ச்சியில் விரைவாக முன்னேறி வருவதாகவும், எனவே உலகளாவிய முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஏழை பணக்கார நாடுகளிடையேயான ஏற்றத் தாழ்வுகள் மறையப் போகும் நாள் நெருங்கி விட்டது என்றும் முன்னறிவிக்கிறார்.

முதலாளித்துவ உற்பத்தி முறையை உலக மயமாக்குவதற்காக நிகழ்த்தப்பட்ட பயங்கரக் கொடுமைகள் அனைத்தும் ஒரு தொழில் நுட்ப விஷயம், உற்பத்திச் சக்திகளின் முன்னேற்றத் தின் பொழுது வந்த துணை உற்பத்திப் பொருட்கள் என்று ஒதுக்கித்தள்ளி விடுகிறார். வியட்நாமை அமெரிக்கா அழித்தொழித்ததை அதன் மூலம் ஏற்பட்ட அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டும் என்கிறார். இது மட்டுமா? மக்களின் கல்வி, உடல் நலம், பண்பாடு, நல்வாழ்வு ஆகியவற்றிற்கு ஏகாதிபத்தியம் ஆற்றியுள்ள அரும்பணிகளைப் பட்டியலிட்டபின், முதலாளித்துவத்திற்கும், பாராளுமன்ற (முதலாளித்துவ) ஜனநாயகத்திற்கும் உள்ள உலகு தழுவிய இணக்கத்தை அழுத்தமாகக் கோடிட்டுக் காட்டுகிறார்.

இதன் அரசியல் சாரம் வெளிப்படையானது தான். ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதெல்லாம் முட்டாள்தனம். இதற்குத் துணை போனதன் மூலம் மார்க்சீயம் பாட்டாளி வர்க்கத்தை



படிப்பகம்

www.padippakam.com

ஏமாற்றி விட்டது. பன்னாட்டு மூலதனத்தின் மீதான வரட்டுத்தத்துவ எதிர்ப்பை உழைக்கும் வர்க்கம் கைவிட வேண்டும். மேலும், உன்னத மான முதலாளித்துவத்தை உருவாக்குவதற்கான லட்சியத்திற்காக பன்னாட்டு நிறுவனங் களோடு, மூன்றாம் உலக உழைக்கும் வர்க்கம் கைகோர்த்து நின்று செயல்படுவதில்தான் இனி எதிர்காலமே உள்ளது.

வாரனின் இந்தக் கருத்துக்கள் மட்டும் நமக்கு வியப்பளிக்கவில்லை. அவை பிரசுரிக்கப் பட்டதும், இடது சாரிகளிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருப்பதும் அதைவிட வியப்பளிக்கிறது.

**மூன்றாம் உலக தொழில்மயமாக்கலும், வாரனின் ஆய்வு முறையும்**

வரலாற்று அடிப்படையையும், சமுதாய அமைப்பின் தன்மைகளையும் அலட்சியப் படுத்துவது வாரனின் பெருங்குறைகளில் ஒன்றாகும். மேலும் தத்துவார்த்தமாகவோ, அனுபவரீதியாகவோ நிறுவிட முடியாத பல முடிவுகளைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்கிறார். எடுத்துக்காட்டாக, மூன்றாம் உலகம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தும் விதத்தைக் கூறலாம். காலனீயமும் ஏகாதி பத்தியமும் உலகமெங்கும் ஒரே தன்மை யுடையதாகக் கருதுவதே 'சார்புத் தத்துவத்தின்' பெருங்குறையாகும். காலனீயமயமாக்கப் படும் நாடுகள் அனைத்தும் ஒன்றேபோல் இருப்பதில்லை. ஒவ்வொன்றும் வெவ்வேறு வரலாறுகளையும், சமுதாய அமைப்புக் களையும் கொண்டிருந்தன. மேலும் உள்ளூர் ஆளும் வர்க்கங்கள் வெறும் பொம்மைகளாக, மைய நாடுகளின் முகவர்களாகக் கருதப்படு கின்றனர். அதனால் அவை ஒரு குறிப்பிட்ட வர்க்க நலனைப் பாதுகாப்பதற்காக சுயமாக முடிவெடுக்கின்ற, அணி சேர்கின்ற, வெவ்வேறு வரலாற்று அடிப்படைகளில் கட்டியமைக்கப் பட்ட உண்மையான அமைப்புக்கள் என்பது மறுக்கப்படுகின்றது. மேலும் மைய நாடுகளே அனைத்து லாபங்களையும் எடுத்துக் கொள்வ தாகக் கூறுவதன் மூலம், லாபத்தில் கணிசமான பங்கை உள்ளூர் ஆளும் வர்க்கங்கள் சுருட்டிக் கொள்வது மறக்கப்படுகின்றது. வாரனின் முடிவுகள் வேறாயிருந்தாலும், ஆய்வு முறை இவ்வழியிலேயே செல்கிறது. பல நூற்றாண்டு கள், பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பட்ட வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்ட, பல்வேறு நிலப்பரப்புக்களில் பரவிய காலனீ யத்தையும், ஏகாதிபத்தியத்தையும் உலகெங்கும் அனைத்துக் காலகட்டங்களிலும் ஒரே சீராகக் காட்டுகிறார். அவரது கூற்றுப்படி முதலில் 'மேம்பாடு' 'முன்னேற்றம்' 'வளர்ச்சி' தொழில் மயமாக்கல் பின்பு பொருளியல் - பண்பாட்டு முன்னேற்றம் என வரிசைக்கிரமமாக நடை பெறுகின்றன. இம்முடிவின் அடிப்படையில் தொழில் வளர்ச்சியில் விரைவாக முன்னேறிய கொரியா, பிரேசில் போன்ற ஒரு சில நாடுகள், மிகக் குறுகிய காலகட்டங்களின் புள்ளி விவரங் களை மூன்றாம் உலக நாடுகளின் பொதுவான புள்ளி விவரங்களாகக் காட்ட முயல்கிறார். தொழில்மயமாதலையே நாட்டு முன்னேற் றத்தைக் காட்டும் ஒரே அளவு கோலாகப் பயன்படுத்துகிறார். அத்தொழில் மயமாக்கலின் தன்மைகள், சமுதாய உறவுகளிலும், சார்புத் தன்மையிலும் அது ஏற்படுத்தும் பாதிப்புக்கள் ஆகியவற்றைக் கண்டு கொள்வதேயில்லை. அண்மைக்காலங்களில் உலகளாவிய மூலனத் தில் நிகழ்ந்து வரும் அமைப்பு மாற்றங்கள் காரணமாக சில பகுதிகளில் ஏற்படும் தொழில் மயமாக்கலை காலனீய, ஏகாதிபத்திய சக்தி களின் முற்போக்குத் தன்மைக்கு மூன்று காரணமாகப் பறை சாற்றுகின்றார். (காலனீயத் தையும், ஏகாதிபத்தியத்தையும் ஒரே பொருளில் பயன்படுத்துகிறார். ஒன்றின் சரிவு தானாகவே மற்றொன்றின் சரிவை ஏற்படுத்துவதாகக் கொள்வதன் மூலம் இன்று ஏகாதிபத்தியம் நிலவுவதையே அவரால் மறுக்க முடிகின்றது.

காலனீயம் எங்கும் ஒரே மாதிரியாக இருந்த தில்லை. அது தொழில் மயமாக்கலை துரிதப் படுத்தியது என்பதும் கட்டுக்கதையே. 1820-இல் லத்தீன் அமெரிக்காவிலிருந்து காலனீயம் அகன்ற பொழுது அங்கு இருந்த அதே அளவு தொழில் வளர்ச்சிதான் 1950-இல் ஆப்பிரிக்காவில் காலனீயம் அகற்றப்பட்ட பொழுதும் இருந்தது.

உலகின் மிகப்பழமை வாய்ந்த போர்த்துகீசிய காலனிகளிலோ தொழில் வளர்ச்சி துளியும் ஏற்படவில்லை. கணிசமான அளவு தொழில் வளர்ச்சி அடைந்துள்ள இந்தியா போன்ற நாடுகளில் காலனீயம் நுழைந்திராவிட்டால்



படிப்பகம்

www.padippakam.com

இதைவிடச் சிறப்பான தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதைப் பின்பு விரிவாக விளக்க உள்ளேன். சிங்கப்பூர், இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள் அண்மைக் காலங்களில் தொழில் வளர்ச்சியில் மேம்பட்டிருப்பது உண்மையே. ஆனால், ஏகாதிபத்தியமே தொழில் வளர்ச்சியில் ஏக காரணி என்பது தான் தவறு. தென்கொரியா அளவிற்கு வடகொரியாவும் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது. தனியார் மயமும், அந்நிய மூலதனமும் தாராளமாக வரவேற்கப்பட்ட காலகட்டத்தை விட, அந்நிய மூலதனம் தடை செய்யப்பட்டு, வங்கிகளும் பெருந்தொழில்களும் அரசுடைமையாக்கப்பட்டு, தொழில் நுட்பம் பெரும்பாலும் சோவியத் ஒன்றியத்திலிருந்தே பெறப்பட்ட நாசரின் காலகட்டத்தில் தான் எகிப்து தொழில் துறையில் பெருவளர்ச்சி அடைந்தது.

மலாய் பகுதியிலிருந்து, கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரை வரை, உற்பத்திச் சக்திகள் தொழில் மயமாகவில்லை என்றும், காலனீய காலகட்டத்தை விட அதற்கு முந்தைய கட்டத்திலேயே அதிக வளர்ச்சி பெற்றிருந்தன என்றும் அறிகிறோம். ஆசியாவின் முக்கிய மூன்று நாடுகளான சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய மூன்றையும் ஒப்பு நோக்குவோம். இந்தியா முழுமையான காலனீய நாடானது, சீனா கடுமையாகச் சுரண்டப்பட்ட அரைக்காலனீய நாடாக இருந்தது. ஆனால் ஜப்பான் மட்டுமே காலனீயத்திடம் அடிமையாகாதிருந்தது. இந்தியாவும் சீனாவும் காலனீயத்தின் காலடியில் நசுங்கிய அதே கால கட்டத்தில்தான் ஜப்பானில் மெய்ஜி புரட்சி நடந்தேறியது. **வாரனின் கூற்றுப்படி தொழில் வளர்ச்சி ஜப்பானில் மிக மந்தமாகவும், சீனாவில் விரைவாகவும், இந்தியாவில் அதிவிரைவாகவும் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், காலனீயத்தின் காலடிபடாத ஜப்பானில் அல்லவா தொழில் வளர்ச்சி மிக விரைவாக வளர்ச்சியடைந்தது.** மேலும், மேலை வரலாற்றாசிரியர்கள் சித்தரித்து வந்தது போன்ற மிகப் பிற்போக்கான நாடாக இந்தியா ஒரு போதும் இருந்ததில்லை. இந்தியாவில் வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான சமுதாய அமைப்பு இருந்தது, தொழில் மயத்திற்கு முந்திய உற்பத்தி முறையில் எண்ணற்ற வர்க்கங்கள் ஈடுபட்டிருந்தன, வணிகம் பெருவளர்ச்சி பெற்றிருந்தது; நாடெங்கும் நதிவழிப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், பேரளவிலான சரக்குப் போக்குவரத்து, நகர்மயமாதல், ஒரே நாணய முறை/நீண்ட கால முதலீடுகளைச் செய்ய வல்ல பெருவணிகக் குடும்பங்கள், நாடு தழுவிய கடன் அமைப்பு, வங்கி வசதிகள், நாடு முழுவதும் எண்ணற்ற நகரங்களில் பரவிக் கிடந்த நெசவு, உலோகத்துறை, போன்ற விவசாயம் சாராத தொழில்களிலும் வியத்தகு திறமை பெற்றிருந்த லட்சக்கணக்கான தொழிலாளர்கள் - இவை அனைத்தும் இந்தியாவில் இருந்தன. எனவே, காலனீயம் உள்ளே நுழைந்திராவிட்டால், ஜப்பானிய மெய்ஜிப் புரட்சி போன்ற ஒன்று இந்தியாவில் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்றும் கூறிவிட முடியாது.


மைய நாடுகளில் பொருள் குவிதல் விரைவடைதல், சர்வதேச உழைப்புப் பிரிவினை, தொழில் நுட்ப ஏற்றத்தாழ்வு, (அமீன் குறிப்பிடும்) விளிம்பு நிலை முதலாளித்துவ அமைப்பு ஆகியவற்றை ஏகாதிபத்தியத்தின் விளைவுகளாக மாவோயிஸ்டுகள் மற்றும் ஃப்ராங்க், அமீன் போன்றோர் குறிப்பிடுகின்றனர். இவை அனைத்தையும் தூரமாக ஒதுக்கிவிட்ட வாரன், உற்பத்தி முறையும் தொழில் மயமாதலும் மட்டுமே ஒரு நாட்டு முன்னேற்றத்தின் ஒரே அளவு கோல் என்கிறார். வாதத்திற்காக நாம் அதை ஏற்றுக் கொண்டால் பின் மூன்றாம் உலக நாடுகள் அனைத்தும் ஒரே தன்மையுடையனவாக இருக்க வேண்டும். ஆனால் கோஸ்டாரிகாவிற்கும், சவூதி அரேபியாவிற்கும், சிங்கப்பூருக்கும், பர்மாவிற்கும், பிரேசிலுக்கும் இடையே நாம் என்ன ஒற்றுமையைக் காண இயலும். மூலதனத்திற்கும், தொழில் நுட்பத்திற்கும் மைய நாடுகளையே சார்ந்துள்ளன என்பதும், மூலதனம் நிரம்பி வழியும் அரபு நாடுகள் கூட மைய நாடுகளுக்குச் சாதகமான சந்தை அமைப்பையே தம் விற்பனைக்கு நம்பியுள்ளன என்பதுமே இவற்றிடையே உள்ள ஒத்த தன்மை. அரசியல் ரீதியாகவும் இவை மைய நாடுகளையே சார்ந்துள்ளதை பாலஸ்தீனியப் பிரச்சனை மூலம் அறியலாம். எண்ணை வளம் கொழிக்கும் அரபு நாடுகள் அனைத்தும் பாலஸ்தீனியப் பிரச்சனையைத்தம் சொந்தப் பிரச்சனையாகக் கருதினாலும் கூட



படிப்பகம்

www.padippakam.com

அவற்றால் எதுவும் செய்ய இயலவில்லை. எனவே தொழில்மயமாதல் எதனையும் நிரூபிக்கவில்லை. மைய விளிம்பு நாடுகளிடையே இன்று ஏற்றத்தாழ்வுகள் குறைந்து கொண்டே வருவதாகவும், அதைக் காட்டும் முக்கிய அளவுகோல் உருவாகும் சார்புத் தன்மையை சற்றும் கண்டு கொள்வதில்லை. மைய நாடுகளிலும், அவற்றின் வங்கிகளாலும் கட்டுப்படுத்தப்படும் சர்வதேச கடன் அமைப்பின் கைதிகளாகவே இன்று பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் உள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் இந்நிலைமை விரிவாகவும், விரைவாகவும், நடைபெற்று வருகின்றது. இந்த பாதகமான நிலைமைக்கு, வாரனும், உலக வங்கியும் ஒகோவென்று பாராட்டும் பிரேசிலே சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். நிதிப்பிரச்சனைக்கு இணையாக சந்தைப் போட்டியும் உருவாகிறது. இறக்குமதிகள் பெரும்பாலும் ஏற்றுமதிப் பொருட்கள் தயாரிப்பதற்கானவையே. மைய நாடுகளின் குறுகிய சந்தைகளுக்காக விளிம்பு நாடுகள் தமக்குள் போட்டிபோட்டுக் கொள்கின்றன. சந்தை சிறிது சுருங்கினாலும் மாற்றுச் சந்தைகள் இல்லை. தொழில் மயமாதலில் பெரும்பகுதி தற்காலிகத் தன்மையுடையவை. விளிம்பு நாடுகளில் கிடைக்கும் வரிச்சலுகை, குறைந்த கூலிக்கு ஆட்கள், உள்ளூர் அரசியல் அதிபர்கள் மூலம் பெறும் மற்ற சலுகைகள் ஆகியவற்றைப் பெறுவதற்காகவே அங்கு மைய நாடுகள் தொழிற்சாலைகளை நிறுவுகின்றன. குறைந்த காலத்தில் கொள்ளை லாபம், **நெகிழ்வான தொழில் நுட்பம் ஆகியவற்றால் தேவை ஏற்படும் பொழுது மூலதனத்தை நினைத்தவுடன் வேறிடத்துக்கு மாற்றிக்கொள்ள இயலுகிறது.** இது இப்பொழுது பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் வெளிப்படையாகத் தெரிகின்றது. மேலும் மூன்றாம் உலக நாடுகளில் ஒரு சில மட்டுமே உற்பத்திக் கருவிகளைத் தயாரிக்கும் ஆற்றல் பெற்றவை. உயர் தொழில் நுட்பங்கள் முழுக்க முழுக்க மைய நாடுகளுக்கு மட்டுமே சொந்தமாயுள்ளன. உயர் தொழில் நுட்ப ஆலைகள் விரிவடைவதால் மைய நாடுகளில் ஏற்படும் இட நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக சாதாரணத் தொழில் நுட்பம் மட்டுமே தேவைப்படும் ஆலைகள் விளிம்பு நாடுகளுக்கு மாற்றப்படுகின்றன. இன்று மூன்றாம் உலக நாடுகளில் தொழில் துறையில் வளர்ச்சியடைந்து விட்டனவாக கருதப்படும் நாடுகள் அனைத்தும் சாதாரணத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி துணி, ரேடியோ, கார் போன்ற நுகர் பொருட்களைத் தயாரிக்கும் நாடுகளே.



மேற்கூறப்பட்டவற்றால், சர்வதேச தொழிலாளர் கட்டமைப்பிலும் வேலை வாய்ப்பிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால், மைய நாடுகளுக்கும் விளிம்பு நாடுகளுக்கும் இடையே நிலவும் தொழில்நுட்ப, நிதி மூலதன ஏற்றத்தாழ்வுகள் குறைகின்றன என்ற வாரனின் கூற்றிற்கு துளியும் ஆதாரம் இல்லை. சர்வதேச உழைப்புப் பிரிவினை மாறிக் கொண்டே வருகிறது. ஒரு சில விளிம்பு நாடுகள் கச்சாப் பொருட்களின் நடுவில் அமைந்திருப்பதால் (சவூதி அரேபியா) அல்லது சர்வதேச நிதிப்பின்னலின் நடுவே அமைந்து விட்டதால் (சிங்கப்பூர்) மற்ற விளிம்பு நாடுகளை விட அதிகமான சலுகைகளை தற்காலிகமாக அடைகின்றன. ஆனால், பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் நிலைமை மேலும் மோசமடைவதால், மூன்றாம் உலக நாடுகளுக்குள்ளேயே, பெரும் ஏற்றத்தாழ்வுகள் உருவாகியுள்ளன. இந்த தற்காலிகமான சலுகைகளும் கூட நிலையற்றவையே. எடுத்துக்காட்டாக, பாகிஸ்தான், பிரேசில், ஈரான் ஆகிய மூன்று நாடுகளையும் காணலாம். மூன்று நாடுகளுமே ஒவ்வொரு காலகட்டத்தில் முன்னேற்றத்திற்கு முன்னுதாரணங்களாகத் திகழ்ந்தவை. மூன்றுமே



படிப்பகம்

www.padippakam.com

இயல்பான சமுதாய வர்க்க மாற்றங்கள் நிகழாமல், தொழில்மயமாதல் மேலிருந்து திணிக்கப்பட்டது. சர்வதேச நிதியுதவி, கடன் ஆகியவற்றின் பிடியில் சிக்கி, பிரேசில் நெருக்கடிக்குள்ளானது. ஈரான் போன்ற நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியால் தோன்றிய முரண்பாடுகளின் காரணமாக எழுந்த சமூக எழுச்சிகள் 'நவீனத்துவ மாதிரி களை' சுக்கு நூறாய் உடைத்தெறிந்தன.

ஈரான் வரலாற்றை பொருளியல் கண்ணோட் டத்தில் மட்டுமே ஆய்வு செய்கிறார். தொழில் மயமாதலே முதன்மையானது என்ற தனது வர்க்க சாய்வற்ற பார்வையை தூய மார்க்சிசம் என்று பறை சாற்றிக் கொள்கிறார். அவரது ஆய்வில் தொழிலாளி வர்க்கம் தன்னியக்கமற்ற வெற்றுக்கூட்டம், உற்பத்தி உறவுகள் முக்கிய மற்றவை, அனைத்தையும் தீர்மானிப்பன உற்பத்திக் கருவிகளே. வர்க்கப் போராட்டத் திற்கு மாற்றாக தொழில்மயமாக்கலை தீர்மானகரமான காரணியாக முன் வைக்கிறார்.

**மார்க்சும் காலனியமும் 'ரத்த உறிஞ்சலும்'**

ஏகாதிபத்தியம் பற்றிய லெனினின் கருத்து களுக்கு மார்க்சியக் கருத்துகளே எதிராக இருப்பதாக வாரன் நிறுவ முயல்கிறார். அதற்கு அவர் பயன்படுத்தும் முறைகளும் வழக்க மானவையே. மெக்ஸிகோ பற்றிய குறிப்பு ஏங்கெல்ஸின் ஒரு கடிதத்தில் உள்ள அல்ஜீரியா பற்றிய குறிப்பு, பின்பு ஹெரால்டு ட்ரிப்யூனுக்கு மார்க்ஸ் எழுதிய, 'இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி' 'இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்கால விளைவுகள்' ஆகிய இரு கட்டுரை களிலிருந்து மேற்கோள்கள் ஆகியவையே அவை. இது நீண்ட காலமாகவே சொல்லப் பட்டு வரும் ஒன்றுதான். மார்க்சும் ஏங்கெல்சும் காலனீயத்தைப் பற்றி வேறு இடங்களில் விரிவாகக் கூறியிருப்பதைப் பற்றி இவர் மூச்சு விடுவதில்லை. முதலாவதாக, அங்கே காலனீயத்தைப் பற்றிய முழுமையான தத்து வத்தை உருவாக்க மார்க்ஸ் முயலவில்லை. இரண்டு சிறு பத்திரிகைக் கட்டுரைகளின் அடிப் படையில், ஒரு உலக தத்துவத்தை உருவாக்க முயல்வது நேர்மையற்ற செயலாகும். இரண்டா வதாக அக்கட்டுரை எழுதப்பட்ட காலமான 1850-இல்தான் இந்தியாவில் காலனியமாக்கல் முழுமை பெற்றிருந்தது. ''அபினிப்போர்களும்'' ஆப்பிரிக்க ஆக்கிரமிப்பும் முழுமையடைந்து, ஆப்பிரிக்காவை பங்குப் போட்டுக் கொண்ட பெர்லின் மாநாடு நடப்பதற்கு இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முந்திய காலம். அன்றைய ஐரோப்பிய முதலாளித்துவத்திற்கும் 1880ற்கும் பின்பான ஐரோப்பிய முதலாளித்துவத்திற்கும் இடையே பண்பு ரீதியான பல வேறுபாடுகள் இருந்தன. எனவே மார்க்சின் அன்றைய மேலோட்டமான கணிப்புகள் காலத்தால் மாற்றமடையாமல் இருந்தனவா என்று பார்ப்பதே சரியான முறையாகும். மூன்றாவ தாக ஆசிய அமைப்பு முறை பற்றிய, குறிப்பாக இந்தியா பற்றிய மார்க்சின் கருத்தாக்கங்களை ஏற்றுக் கொள்வதற்கு முன் மார்க்சின் ஆய்வுக்கு அடிப்படையாக இருந்த ஆசியா பற்றிய அரைகுறை ஐரோப்பிய கருத்துக்கள் உண்மையி லேயே ஆசிய அமைப்பு முறையுடன் ஒத்திருந் தனவா என்பதையும் நோக்க வேண்டும். நான்காவதாக, அவ்விரு கட்டுரைகளுடன் அதற்குப்பின் மார்க்ஸ் காலனீயத்தைப் பற்றி எழுதிய கருத்துக்களையும், காலனியம் என்பதையே ''ரத்தம் உறிஞ்சும் முறை'' என்ற முடிவிற்கு அவர் வந்ததையும் நினைத்துப் பார்க்க வேண்டும். இறுதியாக, ''மேலை நாகரீகம்'' ''ஆசிய காட்டுமிராண்டித்தனம்'' போன்ற ஐரோப்பிய சொல்லாக்கங்கள் மார்க்சிடமும் செல்வாக்குச் செலுத்தியதை கேள்வி கேட்பதும் நியாயமானதே. இதைத் தான் வாரன் அறிவியல் பூர்வமானதாக எடுத்துக் கொண்டு தொடங்குகிறார்.

அவ்விரு கட்டுரைகளிலும் மார்க்ஸ் ஆசிய சமுதாயத்தைப் பற்றி எழுதியுள்ள கருத்துக் களுக்கும், அன்று ஆசிய சமுதாயம் இருந்த உண்மை நிலைமைக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது என்பதும், இந்திய தொழில் மயமாக் கலைப்பற்றிய அவரது எதிர்காலக் கணிப்புகள் துளியும் நடந்தேறவில்லை என்பதும் இன்று தெளிவாக நிறுவப்பட்டுள்ள உண்மைகளாகும். நாகரீகமடைந்த ஐரோப்பாவும், காட்டு மிராண்டித்தனம் நீங்காத கீழ்த்திசையும் என்ற கருத்தாக்கம் ஐரோப்பாவில் தொன்றுதொட்டு நிலவி வந்ததாகும். அரிஸ்டாட்டில் தொடங்கி, ஹோப்ஸ், மாக்கியவல்லி என்று ஹெகல்வரை நீண்ட பாரம்பர்யம் இதற்கு உண்டு. ஆசிய கிராம சமுதாயங்கள் பற்றிய மார்க்சின் கருத்துக்கள் அப்படியே ஹெகலின் ''வரலாற்றின்



படிப்பகம்

www.padippakam.com

தத்துவம்'' நூலிலிருந்து பெறப்பட்டது. ஏனெனில், அன்று ஹெகலின் கருத்துக்களே ஐரோப்பாவில் அங்கீகரிக்கப்பட்ட கருத்துக்கள். இதன் அடிப்படையில் கணிக்கப்பட்ட ''எதிர்கால விளைவுகள்'' காட்டுமிராண்டித் தனத்தை நீக்கி முன்னேற்றத்தைக் கொண்டு வரும் தவிர்க்க முடியாத கொடூரமாக பிரிட்டீஷ் காலனியத்தைக் கருதியது.

இது விவாதத்தின் ஒருபுறம். மறுபுறம், ஆங்கில மூலதனம் குறிப்பாக இருப்புப்பாதை அமைத்தல் இந்தியாவைத் தொழில்மயமாக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் நடந்ததோ முற்றிலும் எதிரானதாகும். இக்கட்டுரைக்கு 60 ஆண்டுகளுக்குப் பிறகு 1921இல் இந்தியத் தொழிற்சாலைகளில் வேலை செய்தோரை விட இந்திய தேயிலைத் தோட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் அமெரிக்க அடிமைத்தனத்தையும் விஞ்சிய கொடுமையான சூழலில் பணிபுரிந்து கொண்டிருந்தனர். ஆங்கில ராணுவம் விரிவாகப் பயணம் செய்வதற்கும் கச்சாப் பொருட்களை உட்பகுதியிலிருந்து துறைமுகத்திற்கு (அங்கிருந்து மைய நாடுகளுக்கு) கொண்டு வருவதற்குமே இருப்புப் பாதை பெரும் பயனளித்தது. அதுமட்டுமல்லாமல், ஆங்கில முதலாளிகளின் கடன் பொறியிலும் இந்தியாவை சிக்க வைத்தது.

ஆசியா பற்றி அன்று ஐரோப்பாவில் நிலவிய அரைகுறை தகவல்கள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் மார்க்ஸ் இம்முடிவுகளுக்கு வந்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால், நவீனத்துவவாதியான வாரன், அன்றைய ஆசியா பற்றி இன்று எண்ணற்ற புதிய ஆராய்ச்சிகள் வெளிவந்த பின்னும், மார்க்சின் அவ்விரு கட்டுரைகள் அடிப்படையில் ஒரு பொது விதியை உருவாக்க முயல்வதுதான் வியப்பளிக்கிறது. மார்க்சின் மேலும் பண்பட்ட பிந்தைய நூலான ''மூலதனத்''தில் புராதன திரட்சியை இருபக்கங்கள் கொண்டதாக விவரிக்கிறார். ஒருபுறம் ஐரோப்பிய நேரடி உற்பத்தியாளர்கள் பயங்கரமாகச் சுரண்டப்பட்டு, கொடுமையான இழப்புக்கு ஆளாகின்றனர். மறுபுறம் சுரண்டலால் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் புதையுண்டும், அடிமைப்பட்டும், பிச்சைக்காரர்களாகியும் துன்புறுகின்றனர். இதே கருத்து ''கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டறிக்கை'' யிலும் ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. மேலும் முதலாளித்துவ உற்பத்தி முறையில் உலகை அடிமைப்படுத்துதல் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக, ஒரு முன் நிபந்தனையாக விளக்கப்படுகிறது. இவை எதிலுமே காலனியம் முழுக்க முழுக்க ஒரு முற்போக்கு சக்தியாக குறிப்பிடப்படவில்லை.

உற்பத்தி முறை தத்துவவாதிகள் ஐரோப்பிய மாற்றத்துக்கு அழுத்தம் கொடுப்பது மார்க்சின் கருத்துக்களுடன் ஏற்புடையது. காலனிகளைச் சுரண்டும் வலிமை பெறுவதற்கு ஐரோப்பிய மாற்றம் முன்நிபந்தனையாகிறது. ஆனால் அது காலனியக் கொள்கைக்கு அழுத்தம் கொடுக்கும் ஏகாதிபத்திய தத்துவத்திற்கு எதிராகி விட்டது. மைய நாடுகளில் செல்வம் குவிதலின் அளவும், விரைவும் அந்நாடுகளில் ஏற்பட்ட தொழில் மயமாக்கல் மட்டுமல்லாமல் காலனிகளிலிருந்து பேரளவில் செல்வம் மையத்துக்கு மாற்றப்படுதல், கோடிக்கணக்கான தொழிலாளிகளின் உழைப்பு குறைந்த கூலி கொடுத்தும், கூலியே கொடுக்காமலும் சுரண்டப்படுதல், கச்சாப் பொருட்களை ஏகபோகமாகச் சுரண்டுதல், காலனியத்துக்கு முந்தைய தொழில்களை ஈவிரக்கமின்றி அழித்தல், மாறாக மைய நாடுகளில் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைகளாக காலனியாக்கப்பட்ட நாடுகளை மாற்றுதல் போன்றவை முன் நிபந்தனைகளாகின்றன. இரண்டு பார்வைகளுமே சரியானவைதான். இவ்விரண்டுக்குமிடையே இயக்கவியல் ரீதியான அடிப்படை உறவு, இருப்பதாக மார்க்சின் எழுத்துக்களிலேயே காணலாம். வாரன், வெர்னர் போன்ற சில இன்றைய உற்பத்தி முறைத் தத்துவவாதிகள் இவை இரண்டையும் ஒன்றுக்கொன்று காலனியக் கொள்கையின் விளைவே மைய நாடுகளின் வளர்ச்சி என்ற இதற்கு நேரெதிரான கருத்துக்களும், இன்றைய சார்புத் தத்துவவாதிகள் சிலரிடம் உள்ளது. இதுவும் ஒரு சார்புடையதாகும். உலகு தழுவிய இயக்கவியல் ரீதியான ஒரு நடைமுறையின் பிரிக்கமுடியாத, ஒன்றுக்கொன்று வலிமை சேர்க்கின்ற இரு அங்கங்களாக ஐரோப்பிய மாற்றத்தையும், காலனியக் கொள்கைகளையும் பார்க்கின்ற மார்க்சின் பார்வையையே நாம் மீண்டும் கொண்டு வர வேண்டும்.

மார்க்ஸ் காலத்தில் கிடைக்காத, இன்று நமக்குக் கிடைத்துள்ள பல ஆராய்ச்சிக்



படிப்பகம்

www.padippakam.com

கூட ஏகாதிபத்தியங்கள் பின்னடையச் செய்து, தேசீய முதலாளிகளை மைய நாடுகளின் மூலதனத்தின் வெறும் இடைத்தரகர்களாக மாற்றி விட்ட போதிலும், வெற்றி பெற்ற சீனா, கியூபா, வியட்நாம், மொசாம்பிக் நாடுகளின் புரட்சிகளை நாம் மறந்து விடக்கூடாது.

ஐரோப்பாவில் இக்காலகட்டத்தில், ஓட்டுரிமை பரவலாக்கப்பட்டு தொழிலாளர் இயக்கங் களும் பாராளுமன்ற வாதத்திற்குள் மூழ்கடிக்கப் பட்டன. எனவே ஏகாதிபத்திய காலகட்டத்தின் தொடக்க காலத்தில், ஒருபுறம் அதுவரை கண்டிராத விரைவில் காலனிகள் அடிமைப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. மறுபுறம் விளிம்பு நாடுகளில் காலனீய எதிர்ப்பும், தேசீயமும் வெடித்துக் கொண்டிருந்தன. மைய நாடுகளில் அளவில்லா முதலாளித்துவ செல்வக்குவிப்பும், கூடவே சமூக ஜனநாய கத்தின் வாயிலாக ஐரோப்பிய உழைக்கும் வர்க்கத்தின் பெரும்பகுதிகளை முதலாளித்துவ பாராளுமன்ற வாதத்திற்குள் மூழ்கடிக்கும் செயலும் நடந்து கொண்டிருந்தது. இந்தச் சூழலுக்குப் பொருத்தமான ஏகாதிபத்தியக் கோட்பாட்டை நிறுவியதே லெனினின் அன்றைய முயற்சியாயிருந்தது. தேசிய இனப் பிரச்சனைக்கு அவர் அளித்த தங்குதடையற்ற ஆதரவு தத்துவார்த்தமானது மட்டுமல்ல, காலனிகளில் அது சிறந்த போர்த்தந்திரமாகவும் விளங்கும். என்பதை அவர் தொலைநோக் கோடு உணர்ந்திருந்தார். ''ரத்தம் உறிஞ்சும் முறை'' யின் மூலம் ஏகாதிபத்திய மூலதனத்தின் ஒட்டுண்ணித்தன்மை உள்நாட்டு மூலதனத் திரட்சியைத் தடுத்து வந்தது. எனவே தேசிய விடுதலை, அது முதலாளித்துவ விடுதலையோ, முதலாளித்துவ மற்ற விடுதலையோ எதாயினும் உள்நாட்டு உற்பத்தி சக்திகளை வலுப்படுத் தவே செய்யும். மறுபுறமோ, காலனிகளில் முதலாளித்துவ வர்க்கமும் சரி, பாட்டாளி வர்க்கமும் சரி, இரண்டுமே சரியாக வளர்ச்சி யடையாத நிலையில் பாட்டாளி வர்க்கமும் நாட்டுப்பற்றுள்ள அறிவு ஜீவிகளும் இணைந்த கூட்டணி காலனிகளில் அரசியல் மேலாண்மை பெற்ற சக்தியாக வளரும் வாய்ப்பு இருந்தது. (அதாவது தேசிய விடுதலைக்கு ஏற்புடைய அரசியல் நடவடிக்கைகளை அது ஏற்படுத்திக் கொண்டிருந்தால்) அன்று சோசலிசப் புரட்சி என்பதை விட வர்க்க மேலாண்மை என்ற கேள்வியே முதன்மையானதாயிருந்தது. ஏகாதி பத்திய ஒட்டுண்ணிகளால் காலனிய எதிர்ப்புப் போராட்டம் அனைத்து வர்க்கத்தினருக்கும் தவிர்க்கவியலாததாக ஏற்கனவே ஆக்கப்பட்டு விட்டது. அந்தப் போராட்டத்தின் போக்கில் தான் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் மேலாண்மை நிறுவப்பட முடியும். எனவே தான் லெனினின் கருத்துக்களில் காலனிய பிரச்சனைக்கும், காலனிகளில் வர்க்கப் போருக்கும் இடையே அடிப்படை உறவு இருப்பதைக் காண்கிறோம்.

**முற்போக்கான முதலாளித்துவம் என்ற மாயை**

முன்னேற்றத்தின் பெயரால் முதலாளித் துவத்தின் அனைத்து அநியாயங்களுக்கும், படுகொலைகளுக்கும் பாவ மன்னிப்பு அளித்து விடுகிறார் வாரன். முதலாளித்துவத்தை உலகு தழுவியதாக ஆக்குவதற்குப் பலியிடப்படும் மனித உயிர்களின் எண்ணிக்கை கணக்கிலடங் காதது. ஆயினும் அவற்றை வாரன் சுலபமான இரண்டு காரணங்கள் காட்டிப் புறக்கணித்து விடுகிறார். முதலாவதாக அறம்சார் பார்வை, பொருள்முதல் வரலாற்றுப் பார்வை என்று இரண்டு பிரிவுகளை வரையறை செய்து கொண்டு, இரண்டாவது பார்வை முன்னேற்றத் துடன் மட்டுமே தொடர்புடையது. அறம் சார் கூறுகள் அதற்கு அவசியம் இல்லை என்று வாதிடுகிறார். இரண்டாவது காரணமோ இதற்கு இணையானது ஆயினும், இவ்வாதத் துடன் முரண்படுகிறது. அதாவது மனித சமுதாயம் எப்பொழுதுமே கொடியதுதான். ஆனால் முதலாளித்துவத்திற்கு முந்திய சமுதாயங்களில் அறம்சார் சிந்தனைகள் இல்லாததால் அவற்றை யாரும் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை. முதலாளித்துவ சமுதாயம் உயர்வான நீதிகளைக் கடைப் பிடிப்பதால், இதில் இவையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சுருக்கமாகக் கூறினால், நீதிநெறிகள் என்பனவே முதலாளித் துவத்தால் தோன்றிய, உலகம் முழுவதற்கும் ஐரோப்பா தந்த கொடையாகும் (அறத்துப்பால் எழுதிய வள்ளுவரையெல்லாம் நாம் மறந்து விட வேண்டியது தான் போலும்! மொ-ர்.)

நாஜிக் கூடாரங்களிலும், இரண்டாம் உலகப் போரிலும் நடைபெற்ற மனித வதைகளையும்,



படிப்பகம்

www.padippakam.com

மனிதக் கொலைகளையும் 'தங்கக் கும்பல்கள்', 'முப்பதாண்டுப் போர்' ஆகியவற்றுடன் ஒப்பிட்டு வேறுபாடு எண்ணிக்கையில் மட்டுமே என்கிறார். முதலாளித்துவத்தின் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் முன்னெப் போதையும் விடப் பேரழிவுகள் ஏற்படுவது ஒரு தொழில் நுட்ப விஷயம், தொழில் நுட்ப துணை உற்பத்தி என்று விளக்குகிறார். தொழில் மயமாக்கல் முதலில் தொடங்கிய இங்கிலாந்தில்தான் சமத்துவம், சமநீதி, பெருந்தன்மை போன்ற கொடூரங்களுக்கு எதிரான அறப்பண்புகள் தோன்றினவாம். புராதனத் திரட்சியின் பயங்கரங்களை மார்க்ஸ் விளக்கியுள்ளதையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையக்காலங்களில் ஆங்கிலேய தொழிலாளர் வர்க்கம் அனுபவித்த சொல்லொண்ணாக் கொடுமைகளை ஏங்கெல்ஸ் விரிவாக ஆய்வு செய்துள்ளதையும் வசதியாக மறந்து விடுகிறார். முதலாளித்துவ தாராளவாதத்தை கேள்விக்குள்ளாக்கும் அனைத்து கருத்துக்களையும் துடைத்தெறிந்து விடுகிறார்.

நவீன முற்போக்கு பெண்கள் விடுதலை இயக்கங்களை, முற்போக்கும் மனிதாபிமானமும் மிக்க ஜான் ஸ்டூவர்ட் மில்லுடன் ஒப்பிடும் பொழுது இவை பிற்போக்கானவை, அகவயப்பார்வை கொண்டவை, பழிதீர்க்கும் தன்மையுடையவை என்கிறார்.

இறுதியாக, முதலாளித்துவ நீதிநெறிகளுக்கும், சோசலிச நீதி நெறிகளுக்கும் இடையே பெரிய வேறுபாடு எதுவும் இருக்கப்போவதில்லை என்கிறார். ஏனெனில் தொழில்மயமாக்கப் பட்ட அனைத்துச் சமுதாயங்களின் நீதிநெறிகளும் ஒரே தன்மையுடையனவாகவே இருக்குமாம். தொழில்மயமாக்கப்பட்ட சமுதாயத்திற்கும், முதலாளித்துவத்துக்கு முந்தைய சமுதாயத்திற்கும் இடையே உள்ள பண்பாட்டு, நீதிநெறி வேறுபாடுகளே அடிப்படையானவை, மிகப் பெரியவை என்கிறார். அவரது கூற்றுப்படி பன்னாட்டு நிறுவனங்களே மூன்றாம் உலக நாடுகளுக்குப் பண்பாட்டைச் சொல்லித் தருகின்றன. மேலும், நாளைய சோசலிச சமுதாயத்தின் நீதிநெறிகள் இன்றைய உலகு தழுவிய பண்ட ஆராதனைச் சந்தை மய சமுதாயத்திலிருந்து துளியும் வேறுபடப் போவதில்லை என்கிறார்.

### முதலாளித்துவமும் மக்களாட்சியும்

வாரனின் கூற்றுப்படி முதலாளித்துவமும் மக்களாட்சியும் 'சயாமிய இரட்டையர்கள்', ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளுக்கு தொழில் மயத்தையும், பொருளியல் வளர்ச்சியையும் மட்டுமல்லாமல் பண்பாட்டையும் மக்களாட்சியையும் கொண்டு வருவதாக வாதிடுகிறார். மூன்றாம் உலக நாடுகளுக்கு மக்களாட்சியைக் கொண்டு வரும் முதலாளித்துவத்தின் நற்பணி பற்றி வாரன் மட்டுமல்லாது கிட்டத்தட்ட மேலை மார்க்சியர்கள் அனைவரும் புகழாரம் சூட்டுவதால், இதனைச் சற்று தெளிவாகக் காண்பது அவசியமாகிறது.

உழைக்கும் வர்க்கத்திற்கு மக்களாட்சி தேவை என்பதில் யாருக்கும் ஐயமில்லை. நீங்கள். 1913-இல் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க முயலும் இங்கிலாந்துப் பெண்மணியாகவோ, 1933ல் சுதந்திரமாகப் பேச முயலும் ஜெர்மன் கம்யூனிஸ்டாகவோ, அல்லது 1953ல் கரோலினா மாகாணத்தில் காப்பிக்கடைக்குள் நுழைய முயலும் ஆப்பிரிக்க அமெரிக்கனாகவோ இருந்தால் ஒரு வேளை முதலாளித்துவத்தில் ஜனநாயகமா? எங்கே என்று கேட்கலாம். மற்றபடி ஆணாக - வெள்ளையினத்தவனாக-டோரி கட்சி (முதலாளித்துவ கட்சி) யைச் சேர்ந்தவராக இருந்தால், மக்களாட்சிக்கும், முதலாளித்துவத்திற்கும் இடையே உள்ள முக்கியமான தொடர்பை கட்டாயம் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் விளிம்பு நாடுகளில் நிலை என்ன? சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன் துப்பாக்கி ஏந்தி, அடிமை பிடிப்பவர்களாக, வணிகர்களாக முதலாளித்துவம் இங்கே கால் வைத்தது. இந்த ஐநூறு ஆண்டு அடிமைத்தனத்திற்குப் பின்னும் நிலையான மக்களாட்சி நிலவும் ஐந்து நாடுகளையாவது இன்று விளிம்பு நாடுகளில் காட்ட இயலுமா? மாறாக, மக்களாட்சிக்கும், முதலாளித்துவத்திற்கும் இடையே விளிம்பு நாடுகளைப் பொறுத்தவரை எதிர்மறை உறவே நிலவுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு இந்நாட்டுப் பொருளாதாரங்கள் உலகமயமாதலில் இணைக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அந்நாட்டு அரசுகளில் கொடுங்கோன்மையும் அதிகமாகின்றது. பாசிசமும், போனபார்ட்டிசமும், ராணுவ சர்வாதிகாரமும்



படிப்பகம்

www.padippakam.com

விதிவிலக்குகள் என்று மேலை மார்க்சியர்கள் கூறுகின்றனர். அது ஒரு வேளை மைய நாடுகளுக்கு உண்மையாயிருக்கலாம். ஆனால் விளிம்பு நாடுகளில் அவையே சாதாரணமாக பொதுவான அரசு வடிவங்கள்.

மேலும் ஆழமாகப் பார்க்கலாம். நவீன ஏகாதிபத்தியம் உருவான சுமார் 1880 வரை, பாராளுமன்ற ஜனநாயகம் என்பது ஐரோப்பாவிலும் கூட பலவீனமான விதிவிலக்காகவே நிலவியது. சில நாடுகளில், சில சமயங்களில், மக்களின் சில பிரிவினருக்கு மட்டுமே பயனளித்தது. மக்களாட்சியும், முதலாளித்துவமும் சயாமிய இரட்டையர் அல்ல. மாறாக, மைய நாடுகளில் கூட அனைவருக்கும் ஓட்டுரிமையறிந்து பொதுவான, நிலையான, அரசமைப்பாக பாராளுமன்ற ஜனநாயகம் அண்மைக் காலங்களிலேயே, இரண்டாம் உலகப்போரின் பின் விளைவாகவே உருவானது. ஐரோப்பாவின் வலிமை குறைந்த நாடுகளான ஸ்வீடன், கிரேக்கம், துருக்கி போன்றவற்றில் ஜனநாயக அரசுகள் பொதுவானவையும் அல்ல, நிலையானவையும் அல்ல. மேற்கு ஜெர்மனி, இத்தாலி போன்ற பணக்கார நாடுகளில் கூட கடந்த முப்பதாண்டு செல்வச் செழிப்பே அங்கு மக்களாட்சி நிலவுவதற்கு அடித்தளமாயிற்று. மைய மக்களாட்சி முறையை இனி மாறவே மாறாது என்று வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் கூட உலக முதலாளித்துவத்தின், ஒரு சிறிய மூளையால், முப்பத்தி ஐந்து ஆண்டு அனுபவங்கள் மட்டுமே மக்களாட்சிக்கும், முதலாளித்துவத்திற்கும் இடையே ஒரு அடிப்படை உறவை விவரிக்கப் போதுமானதல்ல.

இங்கே நான், ஒன்று நாகரீகமடைந்து மற்றொன்று காட்டுமிராண்டித் தன்மையுடையதாக உள்ள அல்லது ஒன்று முதலாளித்துவ கட்டத்திலும், மற்றது முதலாளித்துவத்திற்கு முந்தைய கட்டத்திலும் உள்ள இரண்டு அமைப்பு முறைகளைப் பற்றி அல்ல, ஏகாதிபத்தியம் என்ற ஒரே ஒரு அமைப்பு முறைகளைப்பற்றி அல்ல, ஏகாதிபத்தியம் என்ற ஒரே ஒரு அமைப்பு முறையைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். ஏகாதிபத்தியம் என்பது உற்பத்திச் சக்திகளைப் பற்றியது மட்டுமோ அல்லது சுதந்திரமான தேசியப் பொருளாதாரங்களிலேயே சமமற்ற பரிவர்த்தனை நடக்கும் பொருளாதார முறை மட்டுமோ அன்று. ஏகாதிபத்தியம் ஒரே சமயத்தில் உலகப் பொருளாதாரமாகவும் உலகு தழுவிய அரசியல் அமைப்பாகவும் நிலவுகிறது. இந்த அமைப்பில் மக்களாட்சி நடக்கும். மைய அரசிற்கும், சர்வாதிகாரம் நடக்கும் விளிம்பு நாட்டு அரசிற்கும் இடையே இயக்க இயல் ரீதியான தொடர்பு உள்ளது. செல்வந்திரட்ட, அதிகமாக்குவதற்கு இவ்விரு அமைப்புக்களுமே இன்றியமையாதவை. விளிம்பு நாடுகள் ஏன் சர்வாதிகார அரசைப் பெற்றிருக்க வேண்டும், என்பதை அறிவதற்குப் பெரும் ஆய்வுகள் தேவையில்லை.

நிரந்திரமான எண்ணற்ற வேலையற்றோர் பட்டாளம்; உற்பத்திச் சக்திகள் மிகச்சிலரின் கைகளிலேயே குவிவதால் பெரும்பான்மையினர் மேலும், மேலும் ஓட்டாண்டியாகுதல்; பெரும்பாலான பாட்டாளி வர்க்கத்திற்கு தன்னுடைய உழைப்புச்சக்தியை மறு உற்பத்தி செய்து கொள்வதற்கு மட்டுமே போதுமான குறைந்தபட்சக்கூலி; கைவினைஞர்கள், சிறு உற்பத்தியாளர்கள், நிலமற்றோர்களின் பேரழிவு, கூலி உழைப்புக்கு குறைவற்ற தொழிலாளர்கள், வன்முறை, கொள்ளை, மரணம் முதலாளித்துவத்திற்குள் சில அடிப்படை விதிகள் இவை. இவற்றை அங்கீகரிக்காமல் யாரும் ''மூலதனத்தை'ப் படிக்க இயலாது. ஆனால் மேலை மார்க்சீயர்களது அகராதியிலிருந்து இச்சொற்கள் மாயமாய் மறைந்து விட்டன. ஏனெனில் அவர்கள் முதலாளித்துவத்தை மைய நாடுகளில் மட்டுமே நிகழ்வதாகக் காணுகின்றனர். ஆனால் இந்த ஐரோப்பிய மைய தேசியவாதத்தை உடைத்துக் கொண்டு முதலாளித்துவத்தை உலகு தழுவிய அமைப்பாக, சரியாகச் சொன்னால், ஏகாதிபத்தியமாக காணத் தொடங்கிய உடனேயே இந்த அடிப்படை விதிகள் வெறுமே பிரான்சில் மட்டுமோ அல்லது இங்கிலாந்தில் மட்டுமோ அல்லாமல் உலகு தழுவிய அளவில் இன்று செயல்படுவது தெளிவாகும். இன்று உலகப் பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பகுதி வாழும் விளிம்பு நாடுகளிலேயே முதலாளித்துவத்தின் கோரப்பற்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. மூலதனத்தின் சக்தி என்றும் போலவே இன்றும் துப்பாக்கிக் குழாயிலிருந்தே பிறக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

### காலனீயமும் கல்வியும் கடும்பசியும்

மக்களாட்சியை மலர்வித்தது மட்டுமல்லாமல் காலனீயம் அடிமை நாடுகளுக்கு கல்வி, உடல் நலம், சத்துணவு போன்ற பல்வேறு சமுதாய பண்பாட்டு முன்னேற்றங்களையும் வழங்கியதாக வாரன் வாதிடுகிறார். (நம்நாட்டு கிறிஸ்தவர்களிடையே இங்கிருந்து நீண்ட காலமாகவே பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது - மொழி பெயர்ப்பாளர்) மனித குல ஒற்றுமைக்கு ஏகாதிபத்தியம் ஆற்றியுள்ள பங்கு மகத்தானது என்றும் குறிப்பிடுகின்றார். காலனீயமாக்குவதில் வன்முறையின் பங்கு மிகமிகக் குறைவானதாகவே இருந்துள்ளது என்றும் கூறுகிறார்.

இவை எவையுமே உண்மையல்ல என்பது வெளிப்படை எடுத்துக்காட்டாக, அமெரிக்காவின் பூர்வகுடிகளை ஒழித்துக் கட்டி விட்ட அமெரிக்கமுதலாளித்துவம் வன்முறையற்றது என்று பூர்வகுடிகள் ஏற்றுக் கொள்வார்களா? அல்லது சிறைப்பிடித்து அடிமைகளாக விற்கப் பட்ட மேற்கு ஆப்பிரிக்க மக்கள் அடிமை வியாபாரத்தை மனித குல ஒற்றுமையின் மகத்தான சின்னமாகக் கருதுவார்களா? இக்கேள்விகள் அண்மைக்காலத்திற்கும் பொருந்துபவை. வியட்நாமில் போரைக்கண்ட அறிவு பிறழாத எவராவது அவரது ஏகாதிபத்தியம் பாய்ச்சல் மனிதாபிமானத்திற்கு ஆற்றிய மாபெரும் சேவையாக ஏற்றுக் கொள்வார்களா? இந்த மாபெரும் மனிதாபிமான சேவையில் உயிரிழந்த, கை, கால் இழந்தவர்கள் ஒருபுறம் இருக்கட்டும், எஞ்சியிருப்பவர்களின் நிலை என்ன? இனி ஏகாதிபத்தியம் உடல் நலத்திற்கும், கல்விக்கும், ஊட்டச்சத்திற்கும் ஆற்றி வரும் பணிகளைக் காண்போம். சகேலிலிருந்து - கென்யா வரை, சோமாலியாவிலிருந்து - பந்துஸ்தான் வரை நவீன கால பட்டினிப் பட்டாளங்களின் அணிவகுப்பிலிருந்து காலனிய மற்றும் ஏகாதிபத்தியத்தின் சாதனைகளைக் கண்ணாரக் காணலாம். ஆயினும் மார்க்சிலிருந்து நமது நவீன கால வாரன் வரை அனைவரும் இந்தியாவையே எடுத்துக்காட்டாக ஆய்வு செய்வதால் நாமும் ஆங்கிலப் பேரரசின் மாணிக்கமாகக் கருதப்பட்ட இந்தியாவின் கடந்த கால, நிகழ்கால வரலாறுகளைக் காண்பது அவசியம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் காலனீயம் முதன் முதல் முழுமையாக நுழைந்த பெருமையுடைய வங்காள தேசத்தின் எண்பது விழுக்காடு மக்கள் உயிர் வாழத் தேவை என்று கருதப்படும் குறைந்தபட்ச கலோரிகளை (உணவுச்சத்து) விட மிகக் குறைந்த அளவே உண்கின்றனர். காலனிய வரவு முதல் படிப்படி யாக உணவு கிடைப்பதும், உடல் நலமும் மோசமடைந்தே வந்துள்ளன. மற்ற கூறு களைப் போலவே உணவு விஷயத்திலும் மையத்திற்கும் விளிம்பிற்கும் இடையே நேரெதிரான உறவுகள் நிலவுகின்றன. வெற்றி கொண்டோருக்கு உணவையும், தோல்வியுற் றோருக்குப் பசியையுமே முதலாளித்துவம் அறுவடை செய்துள்ளது.

''தொழிற்புரட்சியிலிருந்து கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் தான் வடக்கு அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் மனித குலத்தின் மூன்றில் ஒரு பங்கினருக்கு மோசமான சத்துணவு உறுதி செய்யப் பட்டுள்ளது.'' (எல்.பிரௌன் மற்றும் ஜிஃபிண்டர் புஷ் எழுதிய ''மனிதனும் அவனது சூழலும் - உணவு''-1972)

### இதற்கு மாறாக கெய்ல் ஓம்வத் எழுதியுள்ளவற்றைப் பார்ப்போம்

''முதலாளித்துவ மையங்களில் வரலாறு தோறும் வந்து கொண்டிருந்த பஞ்சங்கள் முதலாளித்தவ வளர்ச்சியால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. ஆனால் இதன் விளைவாக வேறு பகுதிகளில் பஞ்சங்கள் கடுமையாகின. புள்ளி விவரங்களே கொடுமையானவை. முழுமையாக, நீண்ட காலம் காலனியத்திற்கு உட்பட்ட இந்திய சமுதாயத்தின் அனுபவம் மிக மோசமானது. முதலில் கைப்பற்றப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட வங்காளத்தில் மட்டும் காலனீயமாக்கப்பட்டு பத்தே ஆண்டுகளில், 1969-70ல், சுமார் ஒரு கோடிப் பேர் (மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர்) பட்டினியால் மாண்டனர். மீண்டும் கிழ்த்திசையில் 1866ல் பத்து லட்சம் பேர் இறந்தனர்; ராஜஸ்தானில் 1869ல் 15 லட்சம் பேர் மாண்டனர். 1876-78ல் ஐம்பது லட்சம் பேர், 1899-1900ல் மேலும் பத்து லட்சம் பேர் பட்டினிச் சாவிற்கு இரையாயினர். காலனீய



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் மக்கள் தொகை தொடர்ந்து நோய்களாலும் மரணங்களாலும் சூறையாடப் பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திலிருந்து ஒரு புறம் பெரும் பஞ்சங்கள் தொடங்கின. 1876-79ல் ஒரு கோடியே முப்பது லட்சம் பேர் வடசீனப் பகுதியில் இறந்தனர். 1929ல் ஹுனான் பகுதியில் இருபது லட்சம் பேர் இறந்தனர். இந்த காலகட்டத்தில் ஐரோப்பாவில் ஒரே ஒருமுறை தான் பஞ்சம் தாக்கியது. அதன் ''வெள்ளைக் காலனியான அயர்லாந்தில் 1846-47ல் ஏற்பட்ட உருளைக் கிழங்கு பஞ்சத்தால் சுமார் இருபதிலிருந்து முப்பது லட்சம் மக்கள் பட்டினியால் மாண்டனர்.''

(பாட்டாளி அரசியல் பொருளாதாரம் - ஏகாதிபத்தியமும் உலக உணவுப் பஞ்சமும் - 1975)

இதில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சமும் உள்ளது. பட்டினி கிடந்து மக்கள் மாண்டாலும், காலனீய அரசின் வரி வசூல் உயர்ந்து கொண்டே தான் சென்றது. 1769-70 பஞ்சம் முடிந்த பின் வங்காள கவர்னர் வாரன் ஹேஸ்டிங்ஸ் 1772ல் நவம்பர் 3-ஆம் தேதி இவ்வாறு குறிப்பிட்டார். ''பிரதேச மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் மடிந்து அதனால் விவசாயம் குறைந்த போதிலும் கூட 1771ம் வருட நிகர வசூல் 1768-ஆம் வருட வசூலையும் விட விஞ்சி விட்டது. பழைய அளவுகளைக் குறையாமல் கடும் வன்முறை மூலம் பார்த்துக் கொண்டதன் பலனே இது.'' இன்று விளிம்பு நாடுகளில் போதிய உணவின்மை, உணவிற்கு மைய நாடுகளைச் சார்ந்திருத்தல், விளிம்பு நாடுகளின் பொருளாதாரங்களை பன்னாட்டு நிறுவனங் களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர உதவும் விவசாயத் தொழில் நுட்பங்கள் ஆகிய வற்றின் மூலமாக அமெரிக்க ஆளும் வர்க்கம் அதன் முகவரான அமெரிக்க அரசு மூலம் (வாரன் சொல்வது போல உலக ஒற்றுமைக்காக அல்ல) உலகை ஆள்வதற்காக அதன் கடற் படை, அணுகுண்டு போன்ற ஒரு ஆயுதமாக இனி உணவையும் பயன்படுத்தப் போகிறது.

அடுத்ததாக கல்வித்துறையைக் காண்போம். 1757ல், பிளாசி போரில் வெற்றி பெற்று வங்காள ஆக்கிரமிப்பைத் தொடங்கியதி லிருந்து இங்கிலாந்தின் இந்திய ஆக்கிரமிப்பு தொடங்கியது எனலாம். அதை அடுத்த அறுபது ஆண்டுகளில் கல்விக்காக சில லட்ச ரூபாய் களை ஒதுக்குவதும், ஆனால் அதில் மிகச்சிறு பகுதியை மட்டுமே - அதுவும் ஆங்கிலேயர் களுக்கு இந்திய மொழிகளைச் சொல்லிக் கொடுக்கும் பள்ளிகளுக்கே பெரும்பாலும் செலவிடுவதும் வழக்கமாக இருந்தது. 1820 வரை இந்த நிலை தொடர்ந்தது. ஆயினும் காலனிய ஆட்சியாளர்களில் தொலைநோக் குள்ள அறிவு ஜீவிகள் இந்தியர்களுக்கு ஆங்கிலம் போதிப்பதில் காலனீய வணிகத் திற்கு ஏற்படும் சாதகங்களை உணர்ந்திருந்தனர். 1830ல் இந்திய நிர்வாகம் ஆங்கில அரசின் நேரடி கண்காணிப்பின் கீழ் வந்த பிறகே மற்ற நிர்வாகப் பிரச்சனைகளுடன், கல்விப் பிரச் சனையும் எழுப்பப்பட்டது. 1834ல் ஆங்கிலக் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக இந்தியாவுக்கு வந்த மெக்காலே, அதன் நோக்கத்தை ரத்தினச் சுருக்கமாக இவ்வாறு குறிப்பிட்டார்; ''**நமக் கும், நம்மால் ஆளப்படும் கோடிக்கணக்கான மக்களுக்கும் இடையே மொழி பெயர்ப்பாளர் களாகப் பணியாற்ற ஒரு வர்க்கத்தை உருவாக் குவது நம் தலையாய கடமையாகும். அது ரத்தத்தாலும், நிறத்தாலும் இந்தியராகவும் ஆனால் ரசனையிலும், கருத்துக்களிலும், நீதி நெறிகளிலும், சிந்தனையிலும், ஆங்கிலேய ராகவும் உள்ள ஒரு வர்க்கம்''** இதைவிட தொலை நோக்கான பார்வையே மெக்காலே யின் மைத்துனர் சர் சார்லஸ் ட்ரெவெல்யார் முன் வைத்தார். இன்று நாம் காலனீயத்திற்குப் பிந்திய சமுதாயமாகக் குறிப்பிடுவதன் முக்கிய தேவைகளை அவர் 1838-இலேயே உணர்ந்திருந் தார். தனது, 'இந்திய மக்களின் கல்வி பற்றி' என்ற நூலில் இவ்வாறு எழுதினார். ''எத்தகைய கொள்கை முயற்சிகளாலும் தேசங்கள் மீண்டும் விடுதலை அடைவதைத் தடுக்க இயலாது. மற்ற முறைகளில் புரட்சியால் மட்டுமே சாதிக்க முடிந்தவற்றை ஆங்கிலேயக் கல்வி படிப்படியான சீர்திருத்தங்கள் மூலமே சாதித்து விடும். தேசங்கள் நமக்கு எதிராக எழப்போவ தில்லை, ஏனெனில் நாமே குனிந்து அவர் களைத் தூக்கி விடப் போகிறோம்... நாம் லாபகரமான குடிமக்களுக்குப் பதிலாக லாபகர மான கூட்டாளிகளை மாற்றிக் கொள்ளப் போகிறோம்... உலகின் முதல் தொழில் பொருள் உற்பத்தி நாட்டிற்கும் முதல் (கச்சாப்)



படிப்பகம்

www.padippakam.com

பொருள் உற்பத்தி நாட்டிற்கும் இடையே திட்டவட்டமான வணிகக்கூட்டை ஏற்படுத்தப் போகிறோம்.''

அத்தகைய வணிகக் கூட்டு உருவாக்கப் பட்டதும், உடலால் இந்தியராகவும் உள்ளத் தால் ஆங்கிலேயராகவும் உள்ள ஒரு வர்க்கம் உருவானதும், அனைவரும் அறிந்ததே. ஆனால் இந்த ஆங்கில மோகம் மேல் தட்டினரைத் தவிர வேறு யாருக்கு என்ன பயன் கிடைத்தது? 1882ல் மெக்காலே வந்து சென்ற அரை நூற்றாண்டு களுக்குப் பின்பும் ஆங்கிலோ இந்திய அரசு இந்திய ராணுவத்திற்கு நூறு டாலர் செலவிட் டால், இந்தியக் கல்விக்கு ஆறு டாலர் மட்டுமே ஒதுக்கியது. 1921-22ல் அதற்கு நாற்பது ஆண்டுகள் கழித்த பின்னும் பள்ளி வயதிலிருந்த இந்தியக் குழந்தைகளின் கல்விக்கு தலைக்கு அறுபத் தேழு சென்டுகளே ஓர் ஆண்டுக்குச் செல விட்டது. இந்த சராசரிகளும் மாயத்தோற்றம் தான். காலனீய மேல்தட்டு வர்க்கத்தை மறு உற்பத்தி செய்யும் சில பள்ளிகளிலேயே இப்பணம் பெரும்பாலும் செலவிடப்பட்டது. இதன் விளைவாக ஆங்கில ஆதிக்கம் ஒரு நூற்றாண்டு கடந்தும் படிப்பறிவின் விழுக்காடு துளியும் வளரவில்லை. 1835-1931 வரை வயது வந்தோர் கல்வி 4.4 லிருந்தும் 7 விழுக்காடாக மட்டுமே உயர்ந்தது. ஓரளவு ஏற்பட்ட தொழில் மயத்தினால் கூட தொழிலாளி வர்க்கத்தின் பண்பாட்டுத்துறையில் பெருமளவில் வேலைக்குச் சேர்ந்த மகர், ஹோலிஸ், தேத்ஸ் ஆகியோரிடையே 1921ல் படிப்பறிவு வெறும் 1.5 விழுக்காடு தான்.

### முடிவுரை :

### ஏகாதிபத்தியமும் மேலை மார்க்சியமும்

மேலை மார்க்சியத்திலும், இப்பொழுது ஆங்கில அமெரிக்க மார்க்சீயத்திலும் மூன்று போக்குகள் தெளிவாக வெளிப்படுகின்றன. லெனினியத்திலிருந்து விலகி நிற்றல், அல்லது மறுதலித்தல், முதலாளித்துவ முறைக்கு மாற்றமடைந்தது ஐரோப்பிய உள்நாட்டுப் பிரச்சனை மட்டுமே என்றும், ஏகாதிபத்தியத் தால் அடிமையாக்கப்பட்ட நாடுகளுக்கு இதில் பங்கேதும் இல்லை என்று அடிப்படையிலும், ஆய்வரங்கங்களில், மற்றும் பண்பாடு, தத்துவம் அறிவுத்துறை அல்லது பொருளியல் காரணங்களின் பெயரால் அரசியலிலிருந்து விலகி நிற்றல். இம்மூன்றையும் ஒன்று படுத்துவதன் மூலம் வாரனின் புத்தகம், மட்ட மான ரசனையும் மோசமான வசைச் சொற் களும் நிரம்பி அறிவார்ந்த பல வாசகர்களை முகம் சுளிக்க வைத்தாலும், மேலை மார்க்சீ யத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இதுவரை மோதுவதற்கு மிகக் கடினமான தென்று கருதப்பட்ட லெனினின் ஏகாதி பத்தியக் கோட்பாடுகளைத் தாக்குகிறார். காலனியமாக்கிய நாடுகளை விட, காலனி யாக்கப்பட்ட நாடுகளே காலனியத்தால் அதிகப் பயன் அடைந்ததாக நிறுவுகிறார். ''முழுக்க முழுக்க பொருளியல் தத்துவமான உற்பத்திச் சக்திகளின் விதி'' என்ற பெயரால் ஏகாதிபத்தி யத்தை எதிர்த்து அரசியல் எதுவும் தேவை யில்லை என்று அறிவிக்கிறார்.

இவை எதுவும் தற்செயலான விபத்தோ, சிறிய விஷயங்களோ அல்ல, மார்க்சீய சிந்தனை களுக்கு லெனின் மூன்று முக்கிய அடிப்படை யான பங்களிப்பைச் செய்துள்ளார். முதலாவது முதலாளித்துவ அரசு பற்றிய தத்துவம். (வன்முறையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சி) இரண்டாவது புரட்சிகர அரசியல் பற்றிய தத்துவம் (புரட்சிகர முன்னோடிகளின் கட்சி, போராட்ட அரசியல், முதலாளித்துவ அரசை உடைத்தெறிதல், பாட்டாளி வர்க்க சர்வாதி காரம்) மூன்றாவது ஏகாதிபத்தியம் பற்றிய தத்துவம் (கொடுமையான மக்கி மடியும் முதலாளித்துவம், உலகளாவிய ஏகபோக மூலதன அமைப்பு, அதன் புரட்சிகர மாற்றம் - மையங்களில் அல்ல அதன் பலவீனமான கண்ணியான விளிம்பு நாடுகளில் தொடங் கும்...) கடந்த பத்து அல்லது இருபது ஆண்டுகளில் இவற்றில் முதல் இரண்டையும் எதிர்க்கும் போக்கு வெவ்வேறு காரணங்களுக் காக தனிப்பட்ட மேலை மார்க்சியக் கோட் பாட்டாளர்களிடையேயும், முக்கியமான ஐரோப்பிய பொதுவுடமைக் கட்சிகளிடை யேயும் தோன்றின. லெனினியத்தைக் கை கழுவாமல் பாராளுமன்ற வாதத்திற்குள் மூழ்க முடியாது என்பதே இதற்கு முதற்காரணம். இந்நிலையிலான திரிபுவாதத்திற்கு சாதகமான இரண்டு கூறுகள் இருந்தன. முதலாவதாக, பெர்ன்ஸ்டின் - தாவிட்ஸ்கி விவாதங்களிலிருந் தும், கிராம்சியின் சில பகுதிகளிலிருந்தும் ஏராளமான லெனினிய எதிர்ப்புக் கருத்துக் களை எடுத்துக் கொள்ள முடிவதுடன், சில



படிப்பகம்

www.padippakam.com

(Polisario) ஆதரிக்க மறுக்கும் ஸ்பெயின் பொது உடமைக்கட்சி, ஆப்பிரிக்க நாடுகளுக்கு பிரெஞ்சுப் படைகள் அனுப்பப்படுவதை எதிர்க்காமல் மிராஜ் போர் விமானத்தின் படத்தைத் தனது கட்சிப் பத்திரிக்கைகளில் பிரசுரித்து, பிரெஞ்சுப் பொருளாதாரத்திற்கு தொழிலாளர்களின் பங்களிப்பாகப் பெருமையடிக்கும் பிரெஞ்சுப் பொது உடமைக்கட்சி, இதற்கு சற்றும் குறையாத இத்தாலிய பொது உடமைக் கட்சி என்று வரிசையாக எடுத்துக் காட்டுகள் தர இயலும். 1976ல் அவை நடத்திய பெர்லின் மாநாட்டிற்குப்பின் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்ற தொடரே இவர்களது அகராதியிலிருந்து மாயமாய்ப்போனது. அதே சமயம் 'பாட்டாளி வர்க்க சர்வதேசியம்' என்ற தொடர் பிரிவினைவாதமாகத் தோன்றுவதாகக் கூறி அதனை வர்க்க உள்ளடக்கமற்ற, ''சர்வதேசீய ஒற்றுமை'' என்ற தொடராக இத்தாலிய பொதுவுடமைக் கட்சி மாற்றம் செய்து கொண்டது. ஐரோப்பிய யூனியனில் உரையாற்றிய பொழுது பெர்லிங்கர் (இத்தாலிய பொது உடமைக் கட்சி ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஏகாதிபத்தியத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் ''ஐரோப்பாவிற்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையே இருவருக்கும் பயன்தரக்கூடிய ஒத்துழைப்பின் அடிப்படையிலான ஒரு கட்டமைப்பை'' பற்றிப் பேசினார். இதற்கும் அமெரிக்க ஆளும் வர்க்கங்களுக்கு மிகப்பிடித்த சொல்லான ''பரஸ்பர சார்பிற்கும்'' பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை. இத்தகைய பொது உடமைக் கட்சி தன்நாட்டு முதலாளித்துவத்தை ஏகாதிபத்திய முதலாளித்துவங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டு நெடுங்காலம் ஆகி விட்டது.

ஐரோப்பாக் கண்டத்தின் மிகத்துடிப்பான ஏகாதிபத்திய நாடான பிரான்சின் பொது உடமைக் கட்சியோ, 1940ல் இந்தோசீனாவிலும், அல்ஜீரியாவிலும், ஜெர்மனைப் போலவே நாசிகாலச் சட்டங்களை உடனே இயற்ற வேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறது. ''சோசலிசத்தை நோக்கிய தேசிய வழியில் இப்படித்தான் செல்ல இயலும். 1979மே மாதத்தில் நடந்த பிரெஞ்சுப் பொது உடமைக் கட்சியின் பேரவையில், 'எடியேன் பாலிபார்' தலைமையிலான ஒரு குழு தம் நகல் ஆவணத்தில் இவ்வாறு விமர்சனம் செய்தது.

''கட்சியின் விவாதங்களில் நீண்ட நாட்களாக இரு முக்கிய உண்மைகள் குறிப்பிடப்படுவதில்லை; உண்மையில் திட்டமிட்டு மறைத்து வரப்படுகின்றன. பிரெஞ்சு ஏகாதிபத்தியம் மற்றும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான மோதல்களும், அவற்றின் தன்மைகளும் ஆகியவையே அவை இரண்டும். ஆக, பேரவையின் முதல் அறிக்கைகளில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைப் பற்றிய ஆய்வுகளைத் தேடி அலுத்துப்போய் விட்டோம். புதிய விதிகளின் முன்னுரையிலும் கூட அவை பற்றிய குறிப்புகள் மாயமாகிப் போய் விட்டன. மாறாக பிரெஞ்சு நாடு ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்படும் நாடாகக் காட்ட முயற்சிக்கப் படுகிறது. பிரெஞ்சு சமுதாய அமைப்பு, அதன் உற்பத்திக் கருவிகள், அதன் தொழிலாளர் சக்தி அனைத்தும் வரலாற்றில் ஏகாதிபத்திய சக்தியாக நம் நாடு இருந்ததற்கான தன்மைகளைப் பெற்றுள்ளன. அவ்வாறு வாதிடுவது, ஏகாதிபத்திய மூளை வளர்ச்சி உற்பத்திக் கருவிகளின் மீதும், மனித குலத்தின் மீதும் சுமத்திய 'அமைப்பியல் குறுக்கத்தைப் பற்றிய விமர்சனத்தையே கைவிடும் கொள்கைக்கு ஒப்பானதாகும். இது, வெளிநாட்டுச் சந்தைகளையும் பிடிக்கும் நோக்கத்துடன், மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளையடித்து வரும் கச்சாப் பொருட்களைச் சார்ந்திருக்கின்ற தனிப்பட்ட சில தொழில் பிரிவுகளை சோசலிசம் தலைகீழ் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்ற கூறுவது போன்றதாகும். இந்தக் கட்டத்தில், நாம் அடிக்கடி பெருமையடித்துக் கொள்ளும் வர்க்கப் பார்வை முற்றிலும் மறைந்து விட்டதென்றே தோன்றுகிறது.''

கட்சியின் ஏகாதிபத்திய சார்பு, நிறவெறிக் கொள்கைகளை எதிர்த்த பாலிபாரும் மற்றவர்களும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

வாரனின் கருத்துக்கள் நேரடியாக ஐரோப்பிய பொது உடமைக் கட்சிகளின் நடைமுறைகளிலிருந்தோ, நாம் மேற்கொள் காட்டிய விவாதங்களிலிருந்தோ உற்பத்தியானவை அல்ல. ஆனால், மார்க்சிஸ்டாகத் தம்மைக் கூறிக் கொள்ளும் இவர்களின் கருத்துக்களும் நடைமுறைகளுமே வாரனின் சிந்தனை போன்ற போக்குகள் உருவாவதற்கான சூழலை அமைத்துத் தருகின்றன. ●



படிப்பகம்

www.padippakam.com



இஸ்மாலிக்கு என்றுமில்லாத அளவுக்கு இன்று ரொம்பவும் தாள முடியாத சந்தோஷம். தார்ச்சாலைக்குப் போகிற செம்மண் புழுதியினூடேயுள்ள நீண்ட வண்டிப்பாதையில் நடந்து போய்க் கொண்டிருக்கையில் வேகமாக அவரைக் கடந்து போன ஜீப் வண்டி அள்ளி எரிந்து சென்ற மண்புழுதிக்குள் மறைந்துதான் போனார். ''தாயோளி புள்ள... அமத்திப் போறானான்னு பாரு. எளவெடுத்த பெய...! என்ற முனுமுனுப்பும் மட்டும் கேட்டது. சற்றைக்கெல்லாம் புழுதி தெளிவடைய, இஸ்மாலி கொஞ்ச தூரத்தில் நடந்துபோய்க் கொண்டிருந்தார். தார்ச்சாலையைக் கடந்து விட்ட ஜீப் வண்டியின் மோட்டார் உறுமல் மட்டும் காற்றில் மெல்ல தேய்ந்து கொண்டிருந்தது. தினசரியும் இரண்டு முறை நடக்கிற பாதைதான் என்றாலும் இன்று நடப்பதற்கு மிகுந்த உற்சாகமாகவும், ஒரு புதிய பாதையில் நடந்து போகிற உணர்வும் இருந்தது. பாதையோர எரிக்கலஞ்செடியில் வந்து அமர்ந்து கொண்டு கருவாட்டுவாலி வாலாட்டுகிற காட்சி அவர் என்றும் பார்க்கிற வழக்கமான ஒன்று தான். இன்று அந்த கருவாட்டுவாலியும், அது வாலாட்டுகிற தொணியும் புதிதாய் பார்ப்பதைப் போலிருந்தது. 'வெடுக்வெடுக்கென்று' அது வாலாட்டுகிறபோது தன்னுடைய சந்தோஷத்தில் அதற்கும் பங்கும் இருப்பதாய் கொடியசைத்துக் காட்டுவதாக நினைத்துக் கொண்டார். ''மனுசனுக்கு நெஞ்சுல வச்ச சுவாசத்தை அந்தக் குருவிக்கு வால்ல வச்சிருக்காம்பாரு அல்லா... சும்மா சொல்லக் கூடாது!'' தன்னுள்ளே பேசிக்கொண்டார். மற்ற நாட்களில் இவ்வழியாக நடக்கிற போது வரிசைப் பனைகளின் சாய்கோட்டு நிழலில் நின்று முகத்தை உயர்த்தி அங்குமிங்கும் திருப்பி, கையிலுள்ள துண்டால் துடைத்து, மேற்கிலிருந்து வீசும் காற்று முகம் வருடிப் போகும் வரை காத்திருந்து, இளைப்பாறி முடிந்ததும் தான் மீண்டும் நடப்பார். இன்று மனதிலிருந்த சந்தோஷம் எங்கும் நிற்கச் செய்யாமல் காற்று போல அவரை தள்ளிக் கொண்டிருந்தது. மனைவி மைமூன் பீவி அவர் சொல்லப் போவதைக் கேட்டு வானுக்கும், மண்ணுக்குமாய் குதித்துவிடத்தான் போகிறாள். தன் புருசன் தொழில் நிமித்தமாய் தினசரியும் போய் வருவதில் அவளுக்கு உடன்பாடில்லை.

''நம்ம ராரா (தாத்தா) வீட்டு பஸ்ஸா போயிட்டிருக்கு. தினசரியும் போய் வர்றதுன்னு எத்தின நாளுக்குத்தான் பஸ்காரனுக்கு தெண்டம் அளப்பியளோ? அந்த ஊரு



# வதை

மீரா கதிரவன்



படிப்பகம்

www.padippakam.com

திரும்பவும் இன்னிக்கு போவனும். இன்னிக்குப் பார்த்து பாரும், நம்ம அம்பட்டயன் மவன் கணேசப் பய வேற கடையை திறக்கல. வாறும் ஷேவ் பண்ணிரும்!''

இஸ்மாலி தலையைச் சொறிந்தார். வெற்றிலைக்கரை படிந்த பல்லின் இடுக்கு வழியே தயக்கமான சிரிப்பு வழிந்தது.

''என்னவே... தயங்குறியரு?''

''ஏட்டையா கோவிச்சுக்கக் கூடாது. நான், நம்மாளுக தவிர வேற யாருக்கும் பன்ற தில்லை!'' இதை எதிர்பாராத ஏட்டையாவுக்கு அதிர்ச்சியாகத் தானிருந்தது.

''மசுரை மழிக்கிறதுல என்னவே ஆளுக பார்க்க வேண்டிக் கெடக்கு!'' வக்கனையாகச் சிரித்தார்.

இஸ்மாலி அங்கு நிற்காமல் மம்முதுவின் வீட்டை நோக்கி வேகமாக நடக்கத் தொடங் கினார். மம்முதுவின் மகள் நஜிமா வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

''ஆத்தா வரச் சொல்லியிருந்தார்களாம்!''

''இருங்க கூப்பிடுதேன்!''

சட்டை போடாமல் தோளில் துண்டோடு வந்த மம்முதுவைப் பார்த்ததும் பெரிதாக சலாம் வைத்தார். ''அஸ்ஸலாமு அலைக்கும்!''

இருவரும் முற்றத்தில் பரவியிருந்த மாமரத்தின் நிழலில் உட்கார்ந்தார்கள். முடிவெட்டி முடித்து, தாடியை ஒதுக்கிவிட்டுக் கொண்டே எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருந்தார் இஸ்மாலி. கழுத்தை தூக்கிக் கொண்டு இஸ்மாலி சொல்வதையெல்லாம் 'ம்..ம்...'' என்று கேட்டுக் கொண்டிருந்தார் மம்முது.

''சரிவே... ஒம்புள்ளதான் படிச்சிருக்கானில்ல. நாளைக்கு வந்து என்னை பார்க்கச் சொல்லும். திருநெல்வேலி சதக்கத்துல்லா காலேஜ்ல ஏதா வது வேலைக்குச் சொல்லி அனுப்புறேன்!''

வீட்டிற்கு வந்து மனைவியிடமும், மகனிடமும் சொல்லி சந்தோஷப்பட்டார். துபாய் மொய்தீன் வந்து தன் மகனுக்கு நாளை மறுநாள் சுன்ன வைத்திருப்பதாகச் சொன்னபோது இஸ்மாலி யின் சந்தோஷம் இரட்டிப்பானது.

மறுநாள் உசேன், மம்மூதுவின் வீட்டிற்குச் சென்று நீண்ட நேரமாக வாசலில் காத்திருந் தான். வீட்டிற்குள் யாரும் இல்லாதது போலிருந்தது. திடீரென ''அம்மா... அம்மா...'' என யாரோ அழைக்கிற சத்தம் கேட்டு குரல் வந்த திசையிலேயே நடந்தபோது, வீட்டின் ஒரு சிறிய ரூமுக்குள் வந்து நின்றான். அறை யிருட்டாக இருந்த ரூமுக்குள் மேலிருந்து சொருவா* வழியாக சூரிய வெளிச்சம் ஒற்றைக் கோடாய் வீட்டிற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தது. வெளிச்சம் மறைவது கண்டு தலை நிமிர்ந்து பார்த்தபோது, நஜிமா வாயின் இரு புறங்களிலும் கைகளை குவித்துக் கொண்டு, சொருவா வழியாக சத்தமிடத் தொடங்கினாள். ''அம்மா... நான் தள்ளப் போறேன்!''

வீட்டிற்குள் நின்றிருந்த உசேனை கவனிக் காமல் நெற்கதிர்களை தள்ளத்தொடங்கினாள். மேலிருந்து சொருவா வழியாக விழுகிற நெற்கதிர்களை நீர் வீழ்ச்சி உயரத்திலிருந்து விழுவதைப் போலிருந்தது. நஜிமா, தன் கைகளை விரித்தும், குவித்தும் நெற்கதிர்களை தள்ளுகிறபோது, ஒரு பட்டாம்பூச்சி தன் சிறகை மெல்ல உயர்த்தி, உயர்த்தி இறங்குவதைப் போலிருந்தது உசேனுக்கு. மணிக்கட்டு வரை பூசிய மருதாணியின் அழகிலும், கலகலவென்ற கண்ணாடி வளையல்களின் சத்தத்திலும் மெய் மறந்து போய் நின்றான். வெளியில் சென்றிருந்த மம்முது விட்டிற்குள் வந்தபோது, சொருவா வையே இமைகொட்டாமல் பார்த்து நின்று கொண்டிருந்த உசேனின் முழங்கால்கள் நெல்குவியலுக்குள் புதைந்திருந்தது.

''நஜிமா... கீழே இறங்கி வாம்மா!'' என்று மகளை அழைத்த போதுதான் உசேன் தன்னிலைக்கு வந்தான்.

''யாருப்பா நீ? வீட்டுக்குள்ள எப்படி வந்த?''

''இஸ்மாலியோட மகன். வேல விசயமா உங்கள பார்த்துட்டு வரச் சொன்னாக!''

''அதெல்லாம் சரிப்பா. வீட்டுக்குள்ளே உனக் கென்ன வேலை? மம்மூதுவின் இந்த கேள்விக்கு உசேனால் பதில் சொல்ல முடியவில்லை. தொண்டைக்குள் ஏதோ சிக்கி விட்டதைப் போல் வார்த்தைகள் பாதியாக வந்தது.

---

★ சொருவா - மாடியில் காயப்போடும் நெல்லை எளிதாக வீட்டிற்குள் தள்ளுவதற்கு போடப்பட்டிருக்கும் துளை. 'மச்சு' என்ற பெயரும் வழக்கில் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

''எங்க போன சனியனே, வீட்டைத் தொறந்து போட்டுட்டு களவானிப் பயலுக வந்து எல்லேத்தையும் கண்டமானக்கி அள்ளிட்டுப் போகட்டும்னு போயிட்டியோ?'' அருகில் வந்து நின்ற மனைவியை திட்டியபோது உசேனுக்கு நறுக்கென்றது. படித்த கர்வத்தில் இரண்டு வார்த்தை பேசிவிட்டான்.

''எதிர்த்தா பேசுதா நாயே... வயசுக்கு வந்த புள்ள இருக்கிற வீட்டுக்குள்ள உனக்கென்னல வேலை''. சட்டைக் காலரைப் பிடித்து இழுத்து வந்து, முற்றத்தில் நிறுத்தி கீழே கிடந்த கருக்கு மட்டையால் விளாசத் தொடங்கினார். நடப்பது எதுவும் புரியாமல் தேம்பிய கண்களுடன் நின்றிருந்தாள் நஜிமா.

வீட்டிற்கு வந்து எல்லாவற்றையும் சொல்லி புலம்பி அழுதவனை ஆசுவாசப்படுத்த நினைத்தும், மகனோடு சேர்ந்து அழுதாள் மைமூன் பீவி. உசேனுக்காக வைத்திருந்த கஞ்சி பாத்திரத்திலேயே மூடியிருந்தது. சாப்பிடச் சொல்வதற்காக மகனுக்கு அருகே சென்று எழுப்ப நினைத்தவள், மூடிய கண்களிலிருந்து ஓரமாக பக்கவாட்டில் சன்னமாக வழிந்து கொண்டிருந்த கண்ணீரில் இன்னும் அவன் உறங்கவில்லை என்பதை புரிந்து கொண்டாள். ஊருக்குள், துபாய் மொய்தீன் வீட்டில் நாளை நடக்கவிருக்கும் சுன்னத்திற்காக ராத்திரி முழுவதும் ஓதிக்கொண்டிருக்கும் மவுலத்* பாடல்கள் மெல்ல கேட்டுக் கொண்டிருந்தது. இஸ்மாலியும், மைமூன் பீவியும் அழுதழுது களைப்பில் உறங்கிப்போன நடுச்சாமத்தில், தார்ச்சாலை வழியாக தொலைவான ஊருக்குச் செல்கிற கோச் வண்டி ஒன்று நின்று, கையில் சூட்கேஸுடன் நின்றிருந்த உசேனை ஏற்றிக் கொண்டு போனது.

மாலையும் கழுத்துமாய் ஒரு புதுமாப் பிள்ளையைப் போல் ஜோடிக்கப்பட்டிருந்தான் துபாய் மொய்தீன் மகன் அஜ்மீர். சுற்றியிருந்த வர்கள் கைகளையும் கால்களையும் இறுகப் பிடித்துக் கொள்ள, கால்களை உதைத்துக் கொண்டு திமிறினான். கத்தரியை எடுத்து அருகில் கொண்டு சென்றபோது, செவியோடு சேர்த்து ஒற்றை மிதி விழ கத்திரியோடு தூரமாகச் சென்று விழுந்தார் இஸ்மாலி. சுன்னத் செய்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அழுதுகொண்டே இஸ்மாலியை கெட்ட வார்த்தைகளில் திட்டிய அஜ்மீரின் சேஷ்டையை வந்திருந்தவர்கள் எல்லோரும் ரசித்துச் சிரித்தார்கள்.

தலவரி பிரிக்க வேண்டிய நாள் வரவும், கோணிப்பையை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வாசலிலும் ஏறி இறங்கினார். சில வீடுகள் கொடுக்கிற குறுணி நெல்லுக்காக குறைபட்டுக் கொண்டது.

''எம்பாடு இப்படின்னு நாலு பேர்க்கிட்ட கை நீட்டிரலாம். இந்த நாப்பொழப்பு புழைக்கக் கூடாது. அதுக்கு நாண்டுக்கிட்டு நின்னே செத்திரலாம்!'' வாழ்க்கையில் அதுவரைக்கும் வராத சுயவெறுப்பும், தாழ்வு மனப்பான்மையும் அன்று உண்டானது.

உடம்பில் அரைஞாண் கயிற்றைத் தவிர பொட்டுத் துணியுமில்லாமல் தெருவையே பராக்குப் பார்த்தவாறு நடந்து வந்தான் அஜ்மீர். தன் முன்னால் யாரோ வந்து நிற்பது கண்டு தலை தூக்கிப் பார்த்தான். தோளில் கோணிப் பையோடு இஸ்மாலி நின்று கொண்டிருந்தார். மிரட்சியும், பயமும் கலந்த அஜ்மீரின் கண் களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. உதடுகள் சுழித்து, முகம் கோணலாகி அழுதுவிடுவதைப் போலிருந்தான். இஸ்மாலி குனிந்து பார்த்து லேசாகச் சிரித்தார். பத்து நாட்களுக்கு முன்பு செய்திருந்த சுன்னத் கொஞ்சம் ஆறியிருந்தது. உள்ளங்கைகளுக்குள் உயிர் தலத்தைப் பொத்திக் கொண்டு சட்டென்று திரும்பி வேகமாக ஓட ஆரம்பித்தான்.

''எலே ... இஸ்மாலி ராரா வராறுலேய்!''

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த நான்கைந்து சிறுவர்களும் மட்டையைப் போட்டுவிட்டு ஆஜ்மீரோடு சேர்ந்து ஓடியதைப் பார்த்ததும், ''கொல்லென்று'' சிரித்த இஸ்மாலி, 'பொலபொலவென்று' கண்களில் வழிந்த நீரை துடைத்துக்கொண்டார்.

தலவரி பிரித்துக் கொண்டே நடந்து வந்த இஸ்மாலியை கவனிக்காத ஆமினா, வீட்டு வாசலில் வைத்து தன் பிள்ளைக்கு சோறூட்டிக் கொண்டிருந்தாள்.

''சைத்தானே ... ஒழுங்காத் திங்கியா என்ன. இப்ப பாரு உன்ன .. இஸ்மாலி ராராவைக்

★ மவுலத் பாடல்கள் : இறை தூதர்களை போற்றிப்பாடுவது



படிப்பகம்

www.padippakam.com

# ஆஃப்கானிஸ்தான்



# புதிய காலனிக்கான ஆக்கிரமிப்புப்போர்

**அ.ஜ. கான்**

''முதலாளித்துவத்தின் வளர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகிறதோ, மூலப்பொருள்களின் (இயற்கை வளங்களின்) பற்றாக்குறை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகக் கடுமையாக உணரப்படுகிறதோ, உலகெங்கும் மூலப் பொருள்களின் ஆதாரங்களுக்கான போட்டியும் வேட்டையும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிக உக்கிரமாகின்றனவோ, காலனிகளைப் பெறுவதற்கான போராட்டமும் அவ்வளவுக்கு அவ்வளவு மூர்க்கமானதாகி விடுகிறது.''

**வி.இ. லெனின்**

*(1916ல் எழுதப்பட்ட ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற நூலிலிருந்து - நூல் திரட்டு, தொகுதி - 27)*

முன்னாள் ஜனாதிபதி ரீகன் அவர்களால் 'விடுதலை போராளிகள்' என்று அழைக்கப்பட்டவர்கள் இன்றைய ஜனாதிபதி புஷ் அவர்களால் 'பயங்கரவாதிகள்' என அழைக்கப்படுவதற்கான காரணம் என்ன? என்கிற கேள்வியோடு ஆரம்பிக்கிறேன். செப். 11ம் தேதி தாக்குதலினால் மட்டுமே ஒசாமா பின் லேடன் அமெரிக்காவிற்கு பயங்கரவாதியாகிவிடவில்லை. இதற்கு முன்பே, 1995ம் வாக்கிலேயே அமெரிக்காவின் No. 1 எதிரியாக பின் லேடன் அறிவிக்கப்பட்டார். ஏன்? இதற்கான சரியான பதில் நமக்கு வேண்டுமெனில் கடந்த 20 ஆண்டுகால வளைகுடா நாடுகளின்



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றையும், அந்நாடுகளின் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளையும் சற்று படித்துத்தான் தீர வேண்டும்.

பனிப்போருக்குப் பிறகு, கிட்டத்தட்ட ரஷ்யாவின் அரசியல் பொருளாதார முதுகெலும்பை அமெரிக்கா அனைத்து வழிகளிலும் முறித்தபிறகு ஒற்றை ஏகாதிபத்தியமாக நிமிர்ந்து நின்று தனக்குத்தானே ஒரு புன்னகையைப் புரிந்து கொண்டது. இதன் அடுத்தகட்டமாக தான் ஒரு Super Power-ஆக மாறவேண்டும் என்ற அதன் நீண்ட காலத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தன்னைத் தயார்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்க ஆரம்பித்தது. சரி, இன்றைய நிலையில் ஒரு நாடு Super Power நாடாக மாற முடியுமா? முடியும் என அமெரிக்கா நம்பியது. எப்படி?

உலக நாடுகள் அனைத்தும் இயங்கிக் (Physically) கொண்டிருக்கிறது என நாம் கற்பனை செய்தால் அதன் இயங்கு சக்தி ஒன்றே ஒன்றுதான். அதுதான் எரிபொருள். திரவத் தங்கம், கறுப்புத் தங்கம் என்ற பரிமாணத்தைத் தாண்டி Petro Dollar என்ற வடிவமெடுத்த பெட்ரோலியமே இன்றைய உலக இயங்கு சக்தியாக மாறியுள்ளது எனில் மிகையல்ல, உண்மைதான்.

19-20ம் நூற்றாண்டுகளை இயங்க வைத்துக் கொண்டிருந்த மஞ்சள் பிசாசு என வர்ணிக்கப்பட்ட தங்கம் இன்று அதன் செயல்பாடு மதிப்பில் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டு விட்டது. காரணம் பெட்ரோல் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள்தான் இன்றைய உலக பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக்கும் சக்தியாக மாற்றப்பட்டுள்ளன. எனவேதான் உலக எரிபொருள், அதாவது பெட்ரோல் வளத்தையும் அதன் விற்பனையையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டால் உலக நாடுகளை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட முடியும் என அமெரிக்கா நம்புகிறது. இதைச் சாதிக்க வேண்டுமெனில் தனக்கு நிகராக இருக்கும் ரஷ்ய ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டும். அதனால்தான் முதற்கட்டமாக பனிப்போரை ஆரம்பித்து ரஷ்யா-வை வீழ்த்தியது. இரண்டு வல்லரசுகள் இருக்கும் பட்சத்தில் ஒரு Super Power உருவாக வாய்ப்பில்லை. எனவே, தன் அத்தனை சக்திகளையும் பயன்படுத்தி ரஷ்யாவின் அரசியல் - பொருளாதார - கலாச்சார அமைப்பை சீரழித்து அதன் முதுகெலும்பை ஒடித்துப் போட்டது. 1960-90 வரை ரஷ்யா ஒரு சோவியத் சமூக ஏகாதிபத்தியமாக இருந்தபோது அமெரிக்காவின் உலக மேலாதிக்கத் திட்டத்திற்கு அடிப்படையாக அமையப் போகும் மத்திய ஆசிய குடியரசு நாடுகளின் (துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜாக்ஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான்) எண்ணெய் வளப்பகுதியான காஸ்பியன் எண்ணெய் வளத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்தது. அதனால்தான் 1979ல் ஆப்கானிஸ்தானை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர தன் பொம்மை அரசை ரஷ்யா அங்கு பல இன்னல்களுக்கிடையே நிறுவியது. ஆனால் அமெரிக்காவோ பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., சி.ஐ.ஏ., சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளின் கூட்டோடு முஜாஹித்களை தயார் செய்து தனது எதிரியான ரஷ்யாவை ஆப்கனை விட்டு ஓடச் செய்தது. இந்த நடவடிக்கையின்போது வெளியே பிரபலமானவர்கள்தான் தலிபான்கள். இவர்களின் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் தனது 15 ஆயிரம் வீரர்களை பலிகொடுத்துவிட்டு 1989ல் தோல்வியுடன் திரும்பியது ரஷ்யா. இந்தத் தோல்விதான் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்திற்கு விழுந்த இறுதி மரண அடி. இந்தத் தோல்விதான் அமெரிக்கா உலகில் தன்னை ஒற்றை வல்லரசாக அறிவித்துக் கொண்டதற்கான அடையாளம். இந்தத் தோல்விதான் பனிப்போரில் அமெரிக்கா பறித்த கடைசிக் கனியுமாகும்.

சரி, இவைகளுக்கும் ஆப்கானிஸ்தான் போருக்கும், செப். 11 நிகழ்விற்கும், ஒசாமா பின் லேடன் வகை தீவிரவாதத்திற்கும் என்ன சம்பந்தம் என நீங்கள் கேட்கலாம். காரணம் ஒன்றே ஒன்றுதான். அது, காஸ்பியன் எண்ணெய் வளம்தான். அப்படியானால் அடுத்த கேள்வி எழும் காஸ்பியன் எண்ணெய்க்கும் ஆப்கானிஸ்தானுக்கும் என்ன சம்பந்தம்?

### ஆப்கானிஸ்தான்

அரை காலனிய - அரை நிலப்பிரபுத்துவ நாடான ஆப்கானிஸ்தான் 75 சதவீதம் மலைகளால் சூழப்பட்டது. இதில் 7 சதவீதம் நிலம் மட்டுமே விவசாயம் செய்ய தகுதியானதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

தற்கால ஆப்கன் வரலாறு என்பது 1800-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திலிருந்து தொடங்குகிறது. கோரசான் பேரரசின் பகுதியான ஈரானின் ஒருங்கிணைந்த பகுதியாக ஆப்கன் இருந்தது. 1750ல் ஈரானிலிருந்து பிரிந்து தனி நாடானது. 1919ல் பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெறுகிறது. பெரும்பாலும் பல்வேறு பழங்குடி மற்றும் தேசிய இனங்களைக் கொண்டது. தான் ஒரு ஆப்கன் என்ற உணர்வே அற்ற அவர்கள் தங்களை இன்றும் தான் இந்த பழங்குடியைச் சேர்ந்தவன், தான் இந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவன் என்றுதான் கூறிக் கொள்கின்றனர். எனவேதான், இன்று வரை அங்கு நடக்கும் அனைத்து உள்நாட்டுப் போர்களிலும் இன ஆதிக்கமும், பழங்குடி ஆதிக்கமுமே மேலோங்கி காணப்படுகிறது. ஒவ்வொரு ஆப்கனும் தன் பழங்குடி அடையாளமே (Tribal Identity) தங்களது தேசிய அடையாளமாக நினைக்கின்றான். சோவியத் சார்பு ஆட்சி வரும்வரை அங்கு பெரும்பான்மை இனமான புஸ்துன் இனமே ஆட்சி செய்து வந்தது. இவர்கள் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 40 சதவீதமும், தஜிக் 25 சதவீதமும், ஹசாரா 19 சதவீதமும், உஸ்பெக் 6 சதவீதமும் மற்றவர்களான பலூச், இஸ்மாய்லி, கிர்கிஸ், நூரிஸ்தானி, துர்க்மான் போன்றவர்கள் சிறு அளவிலும் உள்ளனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, குறிப்பாக ஸ்டாலின் ஆட்சிக்குப் பிறகு அதிகாரவர்க்க தரகு முதலாளிய வர்க்கமாக மாறிய ரஷ்யா அமெரிக்காவைப் போல தானும் ஒரு வல்லரசாக மாறத் துடித்தது. ஆப்கனை தன் காலனியாக மாற்ற முயற்சித்தது. இதனை எதிர்த்த ஷோலா ஜோவாய்த் என்கிற கம்யூனிஸ்ட்டுகள் (மாவோயிஸ்ட்டுகள்) கடுமையான எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இப்போராட்டம் தன்னெழுச்சியாக நாடு முழுவதும் வெடிக்க ஆரம்பித்தது. மாவோயிஸ்ட்டுகளின் தலைமையில் போராட்டம் வலுவடைந்ததைப் பார்த்து ரஷ்யா திகைத்து நிற்க, அமெரிக்கா நேரத்தை வீணடிக்க விரும்பாமல் ரஷ்யாவிற்கு எதிராக போராடி வந்த மதவாத ''இஸ்லாமிய சகோதர்கள்'' அனைவரையும் ஒன்றிணைத்து ஐ.எஸ்.ஐ. உதவியோடு பாகிஸ்தான் எல்லையில் ஆயுதம் மற்றும் பண உதவிகளை அளித்ததோடு தன் இராணுவ அதிகாரிகளைக் கொண்டு பயிற்சி அளித்தது. ஆம், இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது எதிரியான ரஷ்யாவை இஸ்லாத்திற்கே எதிரியாக காட்டி அதற்கு எதிரான ஒரு 'புனிதப் போரை' அவர்கள் பின்னின்று நடத்தியது; கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக புனிதப் போரை நடத்திய இந்த இஸ்லாமிய சகோதர்கள்தான் அன்றைய முஜாஹீத்கள் - இன்றைய தலிபான்கள்.


India Today

ஒவ்வொரு வருடமும் 1,25,000 மக்கள் கொல்லப்படுகின்றனர் ஆப்கனில். அதாவது ஒரு நாளைக்கு 340 பேர், அதாவது ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 14 பேர், அதாவது ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கு ஒரு ஆப்கானியர் என கொல்லப்படுகின்றனர். கடந்த 25 ஆண்டுகளில் 25 லட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு நாட்டின் மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் கொல்லப்பட்டதும், 30 சதவீதம் பேர் அகதிகளாக்கப்பட்டதும் வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை. முறையான பல்கலைக் கழகங்கள் இல்லை. சொல்லப்போனால் இரயில் போக்குவரத்தே அங்கு கிடையாது. கப்பல் போக்குவரத்து இல்லை. ஒழுங்கான சாலைகள் கிடையாது. பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமை இல்லை. வேலையிடங்களிலும் பெண்கள் அனுமதிப்பதில்லை. பிறகு, ஏன் வல்லரசு நாடுகள் ஆப்கனுக்கு இந்த முக்கியத்துவம் தருகின்றனர். ஆப்கனின் வளர்ச்சிக்கு உதவி செய்ய வந்தவர்களா? இல்லை. என்றுமே ஏகாதிபத்தியவாதிகள் மூன்றாம் உலக மக்களுக்காக இரக்கம் பட்டதில்லை. அவர்கள் உதவி செய்வது போல் நடிக்கும் ஒவ்வொரு அசைவிற்கும் பின்னால் அவர்களின் வர்க்க நலன்



படிப்பகம்

www.padippakam.com

ஒளிந்திருக்கிறது. ஆம், அவர்களின் கவனமெல்லாம் மூன்றாம் உலகில் இருக்கும் இயற்கை வளங்கள் மீதுதான். ஆனால் ஆப்கனில் இயற்கை வளம் இல்லை. பின் எதற்காக இந்தப் போர்?

இன்று சர்வதேச அளவில் ஆப்கானிஸ்தான் முக்கியத்துவம் பெறுவதற்கு ஒரேயொரு காரணம்தான் இருக்கமுடியும். அது என்னவெனில், நிலவியல் (Topography) ரீதியிலும் பூகோள (Geography) ரீதியிலும் காஸ்பியன் எண்ணெய் (Petrol) மற்றும் எரிவாயு (Natural Gas) எடுத்துக் செல்லப் பயன்படும் ஒரு மாற்றுப்பாதை (Bypass) யாக அமைந்திருப்பதுதான். இல்லையெனில் எங்கோ இருக்கும் அதிபர் புஷ் ஒசாமா பின் லேடனை உலகப் பயங்கரவாதியாக சித்தரித்து ஒழிக்க விரும்புவது எதற்கு? எல்லா செயல்களுக்கும் பின்னும் அதாவது ஒவ்வொரு வர்க்கத்திற்கு பின்னேயும் அதன் வர்க்க நலன் இருக்கிறது என்ற மார்க்சிய மார்க்சிய கோட்பாட்டை இங்கு நாம் கவனம் கொண்டால் ஏகாதிபத்தியங்களின் போலி வேடங்களை தெரிந்து கொள்ள முடியும். இப்போது கேட்டுக் கொள்ளுங்கள், பின் லேடன் ஏன் அமெரிக்க கட்டிடங்களை தகர்க்க வேண்டும்? பின் லேடன் வர்க்க நிலையில் ஒரு தரகு முதலாளிய வர்க்கம். எனவேதான் அவருக்குள்ளும் அவ்வர்க்கத்தின் நலன் செயல்படுகிறது. அவர் பயங்கரவாதி எனில் அமெரிக்காவை மட்டும் ஏன் தாக்க வேண்டும்? வளைகுடா நாடுகளில் தன் மேலாதிக்கத்தை நிறுவ அமெரிக்கா செய்து வரும் அட்டூழியங்களை உலகம் அறியும். இயற்கை வளத்தை கொள்ளையடிப்பது ஒரு பக்கம் என்றால் அம்மக்களை கொல்வது மறு பக்கம் என அதன் கொடுமைகளை மனசாட்சியுள்ள எந்த அரேபியனும் பொறுத்துக்கொள்ள மாட்டான். வளைகுடா போரிலிருந்து இன்று வரை அமெரிக்கா செய்துவரும் குற்றங்களை ஆதாரப் பூர்வமாக உலகப் பத்திரிக்கையாளர்கள் அனைவரும் எழுதிவிட்டனர். அதைப்பற்றி இங்கு விவரமாக எழுத வேண்டாம்.

ஆப்கனைப் பொறுத்தவரை அதன் ஆளும் வர்க்கங்கள் இனவெறி பிடித்து ஒருவருக்கொருவர் அடித்துக் கொல்வதுதான் மாபெரும் சோகம். இங்கு இருக்கும் பல்வேறு இனக்குழுக்களிடையே உள்முரண்பாடு நிலவுவதால் ஒருவர் தலைமையை மற்றவர் ஏற்றுக்கொள்வதில்லை. பெரும்பாண்மை இனமான புஸ்தூன்களை, தஜிக்-குகளும் ஹஜாரிஸ்-களும் தங்களின் முக்கிய எதிரியாக கருதுகின்றனர். இனக் குழுக்களுக்கிடையே திருமண உறவுகள், வணிகத் தொடர்புகள் தடை செய்யப்பட்டுள்ளன. சொல்லப்போனால், அகதி முகாம்களில் புஷ்தூன், ஹஜாரிஸ் குழந்தைகள் ஒன்றாய் விளையாடக் கூட முடியாத சூழல். சிலவேளை இதனால் பெரும் சண்டைகள் கூட நிகழும். பள்ளிவாசல்களில் ஒன்றாய் தொழுவதற்குக்கூட இவர்கள் விரும்புவதில்லை. அகதி முகாம்களில் நோய்கள் அதிகமாகி வாடும் (குழந்தைகள் உள்பட) மக்களுக்குக் கூட நோயின் தீவிரத்தின் அடிப்படையில் மருத்துவம் பார்க்கக்கூடாது. யாரை முதலில் பார்க்கவேண்டும் என அந்த இணக்குழுத் தலைவர் சொல்கிறாரோ அவரைத்தான் மருத்துவர் பார்க்கவேண்டும். இல்லையெனில் ஒரு நாள் முழுதும் புஷ்தூன் மக்களும், மறுநாள் முழுவதும் மற்ற இனத்தாரும் சிகிச்சைப் பெற வேண்டும். மருத்துவ முகாம்களில் கூட புஷ்தூன் பார்க்கும் நேரத்தில் மற்ற இனத்தார் தன்னோடுசேர்ந்து பார்ப்பதைக் கூட அனுமதிப்பதில்லை இந்த புஷ்தூன் அதிகார வர்க்கம்.

இப்படிப்பட்ட சூழல் நிலவும் சமுதாயத்தில் எப்படி ஒரு தேசிய அடையாளத்தைக் கொண்டு வரமுடியும்? ஆப்கனில் ஒரு நபரைப் பார்த்து நீங்கள் யார் என்றால் அவர் பட்டென்று சொல்வார், நான் புஷ்தூன், நான் ஒரு தஜிக் என்று. அங்கு இனக்குழு உணர்வே (tribalism) முக்கியம். ஆப்கன் என்ற தேசிய அடையாளத்தை (National Identity) என்றுமே ஏற்றுக் கொண்டதில்லை. ஒவ்வொரு இனக்குழு தலைவரும் தான் மட்டுமே ஆப்கன் அதிபராகும் தகுதி படைத்தவர் என்ற உணர்வு கொண்டவர்கள். இந்த யுத்த நிலப் பிரபுக்கள் வசமே இந்த 7 சதவீத நிலங்களும் உள்ளது. எனவேதான் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் மையப்படுத்தப்பட்ட ஒரு அரசாங்கத்தை நிறுவ முடிவதில்லை. 5 வருடம் ஆட்சி செய்த தலிபான் கூட ஆயுத பலம் அவர்களிடத்தில் அதிகமாக இருந்ததினால்தான் மற்ற இனங்களை அடக்கி ஆள முடிந்தது. ஆப்கானிஸ்தானில் என்று ஒரு நிலையான ஆட்சி அமைகிறதோ, (அதாவது



படிப்பகம்

www.padippakam.com

பெட்ரோலியக் குழாய்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படாதவாறு யார் பாதுகாப்பு தருகிறார்களோ) அன்றுதான் நாங்கள் மத்திய ஆசியப் பகுதியில் முதலீடு செய்வோம் என எண்ணெய்க் கம்பெனி முதலாளிகள் திட்ட வட்டமாக அறிவித்துவிட்டனர். எனவேதான் இனக்குழுத் தலைவர்களிடையே இன்னமும் பூசல் நிலவுகிறது. எந்த ஏகாதிபத்தியவாதி களுக்கு யார் ஆதரவு தருவது என.

ஆனால் சோவியத் ஆதரவு பெற்ற நஜிபுல்லா அரசு இருந்தபோது குறைந்தபட்சம் தொழிற் சாலைகள் 17-லிருந்து 187 ஆக உயர்ந்தது. பெண்களுக்கு வெளியே செல்ல சுதந்திரம் இருந்தது. முறையான கல்வி அளிக்கப்பட்டது. மருத்துவமனைகள் நிறையதொடங்கப்பட்டது. சினிமாத் தியேட்டர்கள் திறக்கப்பட்டு. அங்கு இந்திப் படங்கள் நிறைய பார்த்து ஆப்கான் மக்கள் சிறிது மகிழ்ச்சியடைந்தனர். பெரும் சாலைகள் போடப்பட்டு வணிகத் தொடர்புகள் அதிகப்படுத்தப்பட்டது. இதை யெல்லாம் கம்யூனிசத்தை எதிர்க்கும் மதவெறி யாளர்கள்கூட ஒப்புக்கொள்கின்றனர். 1996ல் தலிபான் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் அனைத்தும் தலைகீழாக மாறியது. குறிப்பாக பெண்களுக்கான அனைத்து அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டது. ஒரு உதாரணத் திற்கு சொல்லப்போனால், நகங்களுக்கு வண்ணப் பூச்சு (Nail Polish) தீட்டுவது கூட மாபெரும் குற்றமாக அறிவித்து இதுவரை 6 பெண்களுக்கு விரல்கள் வெட்டப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. பெண்களுக் கான சுதந்திரத்தையும் ஜனநாயக அடிப்படை உரிமைகளையும் அளித்துவிட்டால் பிறகு நிலப் பிரபுத்துவத்தை தக்கவைக்க முடியாது என்ப தால் அங்கிருக்கும் இனக்குழுக்கள் இதை ஆதரிக்கின்றார்கள். அதனால்தான் இதையெல் லாம் அனுமதித்த ரஷ்ய சார்பு ஆட்சியாளர்களுக்கும் அவர்களுக்கு பின்னால் இருந்த ரஷ்யாவிற்கும் எதிராக புனிதப் போரைத் தொடுத்தனர் இந்த 'இஸ்லாமிய சகோதரர்கள்'. இன்று அதே புனிதப்போரை அமெரிக்காவுக்கு எதிராக தொடுத்துள்ளனர். ஆனால் இதே அமெரிக்கா தான் இந்த இஸ்லாமிய தீவிரவாதத்தை ஆயுதத் தையும், டாலரையும் கொடுத்து வளர்த்தது. பிறகு ஏன் தலிபான்கள் அமெரிக்காவை எதிர்க்க வேண்டும்? இங்குதான் தரகு முதலாளிகளின் வர்க்கநலன் வேறுபடுகிறது. இப்பகுதியின் இறுதியாக ஈராக்கின் புகழ்பெற்ற திரைப்பட இயக்குனரான மோசின் மக்மல்பஃப் கூறிய வரிகளோடு முடிப்போம்.

''250 வருடங்களுக்கு முன்பு ஆப்கானிஸ்தான் ஈரானிலிருந்து பிரிக்கப்படாமலிருந்தால் இன்று எண்ணெய் வருமானத்தில் அது தன் தலை விதியை வேறு விதமாய் அமைத்துக் கொண்டிருந்திருக்கும்''.

**அமெரிக்காவின் எண்ணெய் அரசியல்**

''ஒரு ஆப்பிளைத் திருடினால்,
உன்னைத் திருடன் என்பார்கள்.
ஒரு நாட்டைத் திருடினால்,
உன்னைப் பேரரசன் என்பார்கள்.''

பழைய பேச்சு

முன்பே வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளத்தை ஏறக்குறைய தன்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிட்ட அமெரிக்கா, வளை குடாப் போரின் விளைவாக அந்நாடுகளின் அரசியல் பூகோள - இயற்கை வளத்தின் மீது நூறு சதவீத ஆதிக்கத்தை உறுதிப்படுத்தி கொண்டு விட்டது. இந்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த அது கூறும் காரணம், 'எந்த நேரத்திலும் ஈராக்-கால் ஆபத்து வரலாம் என்பதே. இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு தந்ததும், சௌதி அரேபியாவின் தரகு முதலாளிய ஆளும் வர்க்கம் அதன் ஏவல் ஆளாக மாறியதும் அரேபிய மண்ணில் தன் இராணுவத் தளத்தை நிறுவிக் கொண்டதற்கான நியாயப்பாட்டை உலக மக்கள் மத்தியில் வைப் பதற்கு சாதகமாகிவிட்டது அமெரிக்காவிற்கு.

**''காஸ்பியின் பகுதி முழுவதும் அளப்பரிய ஹைட்ரோ கார்பன் வளங்கள் உள்ளது, இவ்வளத்தைக் குறிப்பாக காஸ்பியன் கடற் பகுதி அதிகம் பெற்றுள்ளது. அஜர்பைஜான், உஸ்பெக்கிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் கஜாக்ஸ்தான் போன்ற நாடுகளில் சரிசமமாக 236 டிரில்லியன் கியுபிக் அடி இயற்கை எரிவாயு உள்ளது என நிரூபிக்கப் பட்டுள்ளது. இப்பகுதியின் மொத்த எண்ணெய் இருப்பு 60 லிருந்து 200 பில்லியன் பீப்பாய் உள்ளது. இதில் 60 பில்லியன் பீப்பாய் எண்ணெய் எடுத்தாலே ஒட்டு**



படிப்பகம்

www.padippakam.com

மொத்த ஐரோப்பிய நாடுகளின் தேவையை இட்டதட்ட 11 வருடங்களுக்கு சப்ளை செய்ய முடியும்.''

ஜான் மெரஸ்கா
துணைத் தலைவர்.
யூனோகால் எண்ணெய்க் கம்பெனி
(இவர் அமெரிக்க சர்வதேச உறவு கமிட்டிக்கு அனுப்பிய அறிக்கையிலிருந்து நவம்பர் - 1999.)

இதுதாங்க, இன்றைய..மன்னிக்கனும் கடந்த 20 வருடகால, அதாவது 2 வளைகுடாப் போரிலிருந்து இன்றைய ஆப்கன் போர் வரையிலான அமெரிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கான அடிப்படைக் காரணம்.

ரஷ்யா - முதல் சோவியத் சோசலிசக் குடியரசு ஆனதால் காலனி நாடுகளின் விடுதலையை அங்கீகரித்தது, மூன்றாம் உலக நாடுகளுக்கு தார்மீக உதவி செய்தது, இரண்டாம் உலகப் போரில் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையில் பாசிசத்தை வென்றது போன்றவற்றால் கவரப் பெற்ற மூன்றாம் உலக நாடுகள் - இதனால் காலனி நாடுகள் ஒவ்வொன்றும் விடுதலை பெற்றது - அதனால் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கு மேற்கு ஐரோப்பாவிலிருந்து கிழக்கு வியட்நாம் வரை பரவியது. குறிப்பாக சீனப்புரட்சி. மூன்றாம் உலக நாடுகளையே சுரண்டி வாழந்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவிற்கு இச்சூழல் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. மூன்றாம் உலக நாடுகள் முற்றிலும் விழித்துக் கொள்வதற்கு முன்பாக தார்மீக பலத்தை தரும் சோவியத் ரஷ்யாவை வீழ்த்தி விட எடுத்த முயற்சிதான் பனிப்போர். இதற்கேற்றார்போல ஸ்டாலின் தலைமைக்குப் பிறகு வந்த அதிகாரவர்க்க தரகு முதலாளிய கும்பலின் நடவடிக்கைகளும் அமெரிக்காவிற்கு சாதகமாக அமைய 20 வருடங்களுக்குள் சோவியத் ரஷ்யாவை முற்றிலுமாக சீரழித்தது. இப்பனிப் போருக்காக அமெரிக்கா கொட்டிய கோடிக் கணக்கான டாலர்கள் வீண் போகவில்லை.



India Today

மத்திய ஆசிய நாடுகளான துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜாக்ஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளும் சோவியத் ரஷ்யாவின் கூட்டமைப்பில் இருந்தன. இந்த ஐந்து நாடுகளையும் தன் சார்பு நாடுகளாக மாற்றிவிட்டால் காஸ்பியன் எண்ணெய் மிக எளிதாக அமெரிக்கக் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். பனிப்போருக்குப் பின் அடுத்தகட்டமாக இந்த 5 நாடுகளையும் அமெரிக்க - சிஐஏ கூட்டுச் சதியால் தனித்தனி குடியரசுகளாக அறிவிக்க வைத்தது அமெரிக்கா. இந்தக் காலகட்டத்தில் மட்டும் அமெரிக்கா இந்நாடுகளின் தேசிய விடுதலைப் போரை ஆதரித்தது என்பதைக் கவனிக்க வேண்டும். இப்பகுதியின் பாகு (Baku) எண்ணெய் வயல்களிலிருந்து சென்ற எண்ணெய்தான் இரண்டாம் உலகப் போரில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு பக்க பலமாக இருந்ததையும் இங்கு நாம் நினைவு கூரவேண்டும். அதனால்தான், ஹிட்லர்கூட இந்த எண்ணெய் வயல்களைச் கைப்பற்ற முயற்சித்தான் என்பதையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

எப்படியோ அமெரிக்காவின் நீண்டகாலக் கனவு சோவியத் ரஷ்யா சிதறுண்டவுடன் நிறைவேற ஆரம்பித்தது. படிப்படியாக முன்பே தனக்கு ஏவல் நாடுகளாக மாறிவிட்ட இஸ்ரேல், துருக்கி, பாகிஸ்தான் மூலமாக உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் அஜர்பைஜான் நாடுகளை தன் பக்கம் சேர்த்துவிட்டது. குறிப்பாக, முக்கிய பெரும் எண்ணெய்க் கிணறுகள் கஜாக்ஸ்தானிலும், அஜர்பைஜானிலும் மட்டுமே இருப்பதையும் நாம் உணர வேண்டும். என்னதான் மத்திய ஆசிய நாடுகள் அமெரிக்கசார்பு நிலை எடுத்தாலும் அங்கு ஆளும் அதிகார வர்க்கம் ரஷ்ய சார்பு நிலை எடுப்பதையும், அந்நாடுகளின் அரசு அமைப்புகள் அனைத்திலும் இன்றும் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கு இருப்பதையும் மறுக்க முடியாது. ரஷ்யாவின் செல்வாக்கையும், அதன் பொருளாதாரத்தையும் அழித்தாலும் இன்னமும் அது



படிப்பகம்

www.padippakam.com

இராணுவரீதியில் பலம் வாய்ந்த ஒன்றாகத்தான் இருக்கிறது.

அமெரிக்கா மத்திய ஆசிய நாடுகளைத் தன் பக்கம் இழுத்துவிட்டாலும், அடுத்த பிரச்சினை அங்கிருந்து எண்ணெய் வளத்தை வெளியே எப்படி கொண்டு வருவது என்பதுதான். 1999, நவம்பரில் முன்னாள் ஜனாதிபதி கிளின்டன் துருக்கி உள்ளடக்கிய நான்கு நாடுகளோடு இஸ்தான்புல்-லில் ஒரு கூட்டறிக்கையில் கையெழுத்திட்டார். இது அமெரிக்க ஏகாதி பத்தியம் சாதித்த ஒரு குறிப்பான விஷயம்தான். மிரட்டல் மற்றும் பணத்தைக் கொண்டு துருக்கி, ஜார்ஜியா, அஜர்பைஜான் மற்றும் கஜாக்ஸ்தான் ஆகிய நான்கு நாடுகளை 1200 மைல் எண்ணெய்க் குழாய்த் திட்டத்திற்கு உடன்பட வைத்த இத்திட்டம் தான் பாகு - கெய்ஹான் எண்ணெய்க் குழாய்த்திட்டம். மத்திய ஆசியாவின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவது மட்டுமல்ல அமெரிக்காவின் நோக்கம். காஸ்பியன் எண்ணெய் மீதான கட்டுப்பாட்டைத் தன் கீழ் கொண்டு வருவது தான் அதன் முக்கிய நோக்கம். இதனால் ஜெர்மனி, ஜப்பான் போன்ற எண்ணெய் வளம் குன்றிய, மற்றும் தனக்கெதிரான வல்லரசு நாடு கள் உட்பட மூன்றாம் உலக நாடுகள் அனைத் தும் இராணுவ ரீதியாக தன்னைச் சார்ந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்ற ஆசை யில்தான் இந்தப் போரை ஆரம்பித்துள்ளது. இந்த எண்ணெய் அரசியல் (Oil Politics) எவ்வளவு முக்கியமானது என்பதை உணர வேண்டு மெனில் பிரெஞ்சு அரசின் எண்ணெய் கமிஷனர் கூறிய வார்த்தைகளைப் படித்தாலே போதும்:

**''யார் இந்த எண்ணெய் வளத்தை சொந்த மாக்கிக் கொள்கிறார்களோ, அவர்களுக்கு இந்த உலகமே சொந்தமாகிவிடும், ஏனெனில் இந்தக் கன எண்ணெய் மூலம் கடலை ஆள முடியும், மிகச் சுத்திகரிக்கப்பட்ட இந்த எண்ணெய் மூலம் வான்வெளியை ஆள முடியும், பென்சின் மற்றும் பளபளக்கும் இந்த எண்ணெய் மூலம் நிலத்தை ஆள முடியும். மேலும் பெட்ரோல் மூலம் அடையக் கூடிய, கொழுத்த செழிப்பான லாபத்தால் தன் சக மனித உயிர்களை பொருளாதார ரீதியாகவும் ஆள முடியும்.''**

- ஹென்றி பெரஞ்சர்
ஃபிரெஞ்சு எண்ணெய்க் கமிஷனர்.

எண்ணெய் வளத்தின் முக்கியத்துவம் இன்று நமக்கு ஓரளவு புரியஆரம்பித்துவிட்டது. ஆனால் இயற்கை வளங்களை தேடி தேடி அலையும் ஏகாதிபத்தியவாதிகளுக்கோ 60 வருடங்களுக்கு முன்பாகவே புரிய ஆரம்பித்து விட்டது! சரி விஷயத்திற்கு வருவோம். எண்ணெய் வளம் கொண்ட நாடுகளைக் கைப்பற்றியாகிவிட்டது. அதனை வெளியே கொண்டுவரும் திட்டமும் தயாராகிவிட்டது. அமெரிக்காவின் இந்த எண்ணெய்க் குழாய் வழித் திட்டம் வளைகுடாவில் ஆரம்பித்து மேற்கு நோக்கிச் சென்று அஜர்பைஜான் வழியாக ஆர்மினியாவைச் சுற்றிக்கொண்டு மறுபடியும் ஜார்ஜியா-வினுள் நுழைந்து தென்மேற்கு பக்கமாய்ச் சென்று துருக்கி கெய்ஹானை அடைகிறது. ஆனால் துருக்கியை அடைவதற்கு முன்பு குர்திஸ்தானின் பெரும் பகுதியில் இக்குழாய் பயணப் பட்டாக வேண்டும். இங்குதான் ஒரு சிக்கல் உள்ளது. 5 நாடுகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்து மிக நீண்டகாலமாகவே குர்திஸ் தேசிய இனப் போராட்டம் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையில் நடந்து வருகிறது. இப்பகுதியைத் தாண்டித் தான் கிழக்கு மெடிட்டேரியன் பகுதியில் அமைந்துள்ள கெய்ஹான் பகுதிக்கு குழாய் சென்றடைய வேண்டும். இந்தக் குழாய்த் திட்டம் எண்ணெய்க் கம்பெனி முதலாளிகளுக்கு லாபகரமானதுதான். ஆனால் கிளின்டன் அரசு இக்குழாய்த் திட்டத்தின் பின்னால் போர் முக்கியத்துவமும் சேர்ந்துள்ளது என இத்திட் டத்தின் இன்னொரு பரிமாணத்தையும் சுட்டிக் காட்டியதால், இத்திட்டம் காகித அளவிலேயே நின்றுவிட்டது.


இதன்பிறகு ஈரான் ஒரு வழித்திட்டத்தை முன் மொழிந்தது. அதுதான் பாகு-கார்க் வழித் திட்டம். ஆனால் முந்தைய திட்டத்திற்கு ஆகும் செலவான 4 பில்லியன் டாலரைவிட இரண்டு மடங்கு அதிகம் ஆவதால் எண்ணெய் விற்பனையாகி கிடைக்கப் போகும் லாபத்தைக் கணக்கிட்டுப் பார்த்து எண்ணெய் கம்பெனி முதலாளிகள் இத்திட்டத்தை ஏற்கவில்லை. இதற்கிடையில் 1998 நவம்பரில் ரஷ்யா, கஜாக்ஸ்தான் மற்றும் செவ்ரான் எண்ணெய்க் கம்பெனிகள் 2 பில்லியன் டாலர் செலவில் டெங்கிஸ் - சிலிருந்து ரஷ்ய துறைமுகமான நோவோராசிஸ்க்-கிற்கு ஒரு குழாய் வழித்



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்திற்கு ஒப்புக் கொண்டன. இந்தச் சூழலில் அமெரிக்க ஆளும் வர்க்கம் எல்லா எண்ணெய்க் கம்பெனி முதலாளிகளுக்கும், இந்த எண்ணெய்க் குழாய் வழித் திட்டங்களைத் தாங்களே தீர்மானித்துவிட முடியாது, இத்திட்டங்களுக்குப் பின்னே பூகோள ரீதியிலான போர்த் தந்திரப் பிரச்சினைகளும் அடங்கியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டியது. அதாவது உலக இயற்கை வளங்களை யார் கட்டுப்படுத்துவது என்ற தனது மேலாதிக்கக் கொள்கையைத் தான் இப்படி மறைமுகமாகச் சொன்னது.



ஆப்கன் வழி குழாய்த் திட்டம்

இப்படி காரணங்கள் காட்டி அனைத்து திட்டங்களையும் அமெரிக்கா நிராகரித்தது. அடுத்தது, ரஷ்யா டெங்கிஸ் வழித் திட்டம் நிறைவேறினால் ரஷ்யாவின் செல்வாக்கு காஸ்பியன் பகுதியில் அதிகமாகும் என கணக்கிட்டது அமெரிக்கா. இந்நேரத்தில் செச்சின்யா தனிநாடு போராட்டத்தின் காரணமாக ரஷ்யாவின் இத்திட்டமும் காகித அளவிலேயே நின்றுவிட்டது. செச்சின்யா போராட்டத்தால் ரஷ்யத் திட்டம் நிறைவேறாததால் ரஷ்ய எண்ணெய்க் கம்பெனி முதலாளிகள் பாகு-விலிருந்து எண்ணெய்-யை இரயில் மூலம் தாகிஸ்தான் வழியாக கொண்டுவர முயற்சித்தனர். ஆனால், செச்சின்யா போராட்டம் தாகிஸ்தானிலிருந்து செச்சன்யா வரை பரவியதன் காரணமாக இதையும் செயல்படுத்த முடியவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த ரஷ்யா கொடூரமான முறையில் இப்போராட்டத்தை நசுக்கியது. இதனால் இரண்டு லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். 4 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். சின்னஞ் சிறிய நாடு சின்னாபின்னப் படுத்தப்பட்டது. செச்சின்யா தனிநாடுகோரும் போராளிகளுக்கு அமெரிக்கா உதவிய தற்கான வெளிப்படையான ஆதாரம் கிடைக் காமற் போனாலும், காஸ்பியன் எண்ணெய்க் கான அமெரிக்கத்திட்டத்திற்கு இப்போராட்டம் மிகவும் சாதகமாக அமைந்துவிட்டது.

அடுத்ததாக, 99 ஏப்ரலில் பாகு-விலிருந்து ஜார்ஜியா துறைமுகமான சுப்சா-விற்கு செல்லும் ஒரு புதிய வழித் திட்டத்திற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது. இவ்வழித் திட்டம் ஏற்கனவே போடப்பட்ட செச்சின்யா, தாகிஸ்தான் வழியாகச் சென்றது. செச்சன்யா மீது மீண்டும் ரஷ்யா தன் கட்டுப்பாட்டைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் இத்திட்டத்தின் மூலம் அஜர்பைஜான் எண்ணெய்-ஐ கொண்டு வந்துவிட முடியும். இத்திட்டம் சிறியது என்றாலும் கெய்ஹான் திட்டம் அமலுக்கு வரும்வரை இலாபகரமானது என முதலாளிகள் நினைத்தனர். இப்படிப்பட்ட சூழலில் கெய்ஹான் வழித்திட்டம்தான் நடைமுறைக்குச் சாத்தியமானது என அமெரிக்கா வற்புறுத்தியதால் பெரும் பணத்தை செலவழித்த எண்ணெய்க் கம்பெனி முதலாளிகள் வேறுவழியின்றி ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. பிறகுதான் நான் முன்பே குறிப்பிட்ட 1999-ஆண்டு நவம்பர் கூட்டறிக்கை அடிப்படையில் OSCE அமைப்பால் இஸ்தான்புல்-லில் கூட்டப்பட்ட மாநாட்டில் பிரதேச அரசுகளை ஏகாதிபத்திய எண்ணெய்க் கம்பெனிகளின் குழாய்த் திட்டத்திற்கு பாதுகாப்பையும், பொருளாதர உதவியையும் அளிக்கவேண்டும் என கிளின்டன்வற்புறுத்திய பிறகு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் 2000த்திற்குள் மூலதனத்தைத் திரட்டவும், 2004ற்குள் பணி நிறைவடைய வேண்டும் எனவும் நிர்ணயிக்கப்பட்டது. மேற்கண்ட திட்டம் முழுமையாக



படிப்பகம்

www.padippakam.com

நிறைவேற்றப்பட வேண்டுமெனில் காக்கசஸ் நாடான ஜார்ஜியாவை மேற்குலகச் சார்பு நாடாக மாற்றவேண்டும். ஆனால் அந்நாட்டின் அதிபர் எட்வர்ட் செவர்நாட்சே ஏற்கனவே கோர்பசேவ் அரசில் அயலுறவு மந்திரியாக இருந்தவர். எனவே இன்னும் அவர் ரஷ்ய சார்பு நிலையிலேயே தன் நாட்டை வைத்திருக்க விரும்புகிறார். இங்கும் ஜார்ஜிய தனிநாடு விடுதலைப் போர் தீவிரமாக நடந்துவருகிறது. இது ரஷ்யாவுக்கு சாதகமான விஷயம். சுருக்கமாகச் சொன்னால் ஜார்ஜியா வில் கனன்று கொண்டிருக்கும் தனிநாடு போராட்டம் ரஷ்ய ஏகாதிபத்திய நலன்களுக்கு உகந்ததாகவும், செச்சின்யா தனிநாடு போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு உகந்ததாகவும் அமைந்துள்ளன.

மேற்கண்ட குழாய்த் திட்டங்களுக்கு இப்படி பல்வேறு இடைஞ்சல்களை ஏகாதிபத்தி வாதிகள் எதிர்கொண்டிருப்பதால், வேறொரு புதிய வழித் தடத்தை தேடினார்கள். இன்னொரு புதிய திட்டம் தயாரானது. அதுதான் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து சீனாவுக்குக் கொண்டு செல்லும் திட்டம். ஆனால் இது கிட்டத்தட்ட 3000 கி. மீட்டருக்கு குழாய்ப் பதிக்க வேண்டும். இதில் குறைந்தபட்சம் 2000 கி. மீட்டருக்கு மக்கள் வாழும் சீனக் கடற்கரையோரம் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் போட்டாக வேண்டும். இதையாவது செய்து விடலாம் என எண்ணி யூனோகால் எண்ணெய்க் கம்பெனி குழு ஒன்று பீஜிங் சென்று சீனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. சீனாவும் தனக்கு எண்ணெய் தேவைப்படுகிறது என்பதால், எதிர்காலத்தில் எவ்வித பிரச்சினையும் எழதாவாறு இத்திட்டத்தை மேற்கொள்ள ஆதரவு தர ஒத்துக் கொண்டது. ஆனால் ஒரு கேள்வி எழுந்தது எண்ணெய்க் கம்பெனி முதலாளிகளுக்கு. அதாவது, செலவழிக்கப்படும் தொகைக்கு திரும்ப நமக்கு கிடைக்கபோகும் வருமானம் எவ்வளவு?

இவவாறாக, பல குழப்பங்களுக்கு மத்தியில் ஏகாதிபத்தியவாதிகளும், எண்ணெய்க் கம்பெனி முதலாளிகளும் தவித்துக் கொண்டிருக்கையில் ஒரேயொரு வழித் தடம் மட்டுமே சிக்கனமான தாகவும், குறைந்த தொலைவு கொண்டதாக வும், உலகச் சந்தைக்கு ஏற்றதாகவும் இருந்தது. அதுதான் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து நேரடியாக இந்தியப் பெருங்கடலுக்கு கொண்டு போகும் திட்டம். மற்றவழித் திட்டங்களைவிட குறைவான தூரம், அதாவது 1040 கி.மிட்டர் மட்டுமே கொண்டது. மத்திய ஆசியப் பகுதி யான சார்ட்சு-விலிருந்து ஆரம்பித்து வடக்கு துர்க் மெனிஸ்தான் மற்றும் ஆப்கன் வழியாகச் சென்று ஆப்கனின் தென் கிழக்குப் பகுதியான பாகிஸ்தான் கடற்கரையோரமாகச் (இங்குதான் ஏற்றுமதி முனை Export terminal ஒன்று நிறுவப் பட்டு பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்குமான சப்ளை வழிக் குழாய்கள் அமைக்கப்பட வுள்ளன) சென்று இந்தியப் பெருங்கடல் முனையை அடைகிறது.

440 கி.மீட்டர் தூரக் குழாய் மட்டுமே ஆப்கன் பகுதியில் பதிக்கப்படப்போகிறது. 2.5 பில்லியன் டாலர் மட்டுமே செலவாகக் கூடிய இத்திட்டதின் மூலம் ஒரு நாளைக்கு 10 லட்சம் பீப்பாய் எண்ணெய்-ஐ கொண்டு வந்துவிட முடியும். இது மட்டுமின்றி பிராந்திய அரசியல் நலனும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளது. ஆசியக் கண்டத்தில் கச்சா (Crude Oil) எண்ணெய் இறக்குமதியாளர்கள் இத்திட்டத்தால் மிகுந்த லாபத்தை அடைவார்கள். மேலும் போக்கு வரத்து வருமானத்தினால் ஆப்கன் தன் பொருளாதரத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியும். கருங்கடல் வழித் திட்டத்தைவிட ஆப்கன் வழித்திட்டம் எண்ணெய்க் கம்பெனிகளுக்கு எண்ணெயின் சந்தை மதிப்பு கூடுதலாக கிடைக்கும் என்று சமீபத்திய உலக வங்கி ஆய்வில் கூறப்படுள்ளது. அதாவது சைபீரிய எண்ணெய் ஆசியாவிற்குச் செல்லும்போது முதலீட்டு வருவாய் மதிப்பு (Netback value) பீப்பாய் ஒன்றுக்கு இரண்டு டாலராகவும், கஜாக்ஸ்தான் எண்ணெய் ஆசியாவிற்குச் செல்லும்போது முதலீட்டு வருவாய் மதிப்பு பீப்பாய் ஒன்றுக்கு ஒரு டாலராகவும் இருக்கும் என கூறுகின்றனர்.

இதைத் தவிர இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய்க் குழாய் ஒன்றை பாகிஸ்தான் மற்றும் இந்தியா வரைக் கொண்டு செல்லும் திட்டம் வேறு தனியாக உள்ளது. பாகிஸ்தானி லிருந்து இந்தியாவிற்கான 400 மைல் திட்டத் திற்கு 600 மில்லியன் டாலர் ஆகும் என்றுகூட கணக்கிட்டுவிட்டனர். இப்பொழுது நினைத்துப் பாருங்கள் காஷ்மீர் பாகிஸ்தானுக்கும் இந்தியா விற்கும் எவ்வளவு முக்கியமாய்ப்படுகிறது



படிப்பகம்

www.padippakam.com

என. ஒருவேளை ஆப்கன் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு விடுகிறது எனில் அமெரிக்கா Super power என்பதைத் தவிர வேறு வழியில்லை. காரணம் காஸ்பியன் எண்ணெய் மற்றும் எரிவாயுவை மேற்கே எடுத்துச் சென்றால் ஐரோப்பியச் சந்தையையும், கிழக்கே திரும்பினால் இந்தியா, ஜப்பான் உள்பட கிழக்காசிய நாடுகளின் சந்தையையும் மிகச் சுலபமாக கைப்பற்றிவிட முடியும். மாபெரும் தேவையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் கிழக்கு, மேற்குச் சந்தைகளைக் கைப்பற்ற இந்த இந்தியப் பெருங்கடல் வழி ஏகாதிபத்தியவாதிகளுக்கு மிகப் பெரும் லாபகரமானதாக அமைந்துவிடும்.

ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்ற ஆப்கனில் ஒரு நிலையான அரசு அமையவேண்டும். குறிப்பாக அமெரிக்க சார்பு அரசு அமைய வேண்டும். எண்ணெய்க் கம்பெனி முதலாளிகள் இனி ஆப்கன் இனக்குழுத் தலைவர்களை நம்பத் தயாரில்லை. எனவேதான் ஆப்கனில் தனக்குச் சார்பான ஒரு பொம்மை அரசை அமைக்க அமெரிக்க பலகோடி டாலர் செலவு செய்து 20 வருடமாக பல்வேறு சதி வேலைகளை அரங்கேற்றி வருகிறது. தவிரவும் இந்தியா உள்பட கிழக்காசியாவுக்கான இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானும் அமைந்துள்ளன. அதனால்தான் பாகிஸ்தானை அமெரிக்கா இன்றும் பகைத்து கொள்ளாமல் செல்லப் பிள்ளையாக தட்டிக் கொடுத்து வருகிறது. அமெரிக்கா என்றைக்கும் பாகிஸ்தான் பக்கம்தான் நிற்கும். இன்னொரு முக்கிய விஷயம் என்னவெனில் அமெரிக்கப் பரிந்துரையில் தொடர்ந்து கொடுக்கப்படும் கடன் தொகையில்தான் பாகிஸ்தான் வாழ்க்கையை ஓட்டுகிறது. கடன் உதவி இல்லையெனில் பாகிஸ்தான் வாழ இயலாதபடி அமெரிக்கா அதன் பொருளாதாரத்தை தன்னைச் சார்ந்து நிற்க வேண்டிய அளவுக்கு கொண்டு வந்துவிட்டது.

சரி, மீண்டும் நாம் விஷயத்திற்கு வருவோம். இச் சூழலில் பின்லேடன் செப் - 11 ம் தேதி நிகழ்வை நிகழ்த்த வில்லையென்றாலும், ஆப்கன் ஆக்கிரமிப்பிற்கு வேறொரு காரணத்தை அமெரிக்காவே உருவாக்கிக் கொண்டிருக்கும். ஏனெனில், எண்ணெய்க் கம்பெனி முதலாளிகளின் நெருக்கடி ஒரு பக்கம், மறுபக்கம் தன் மேலாதிக்க வெறிக்கு இப்பகுதியில் தான் செலவழித்த 20 வருடங்களும் டாலர்களும் அதிகம் என நினைத்தது. ஆக, மத்திய ஆசியா நிலத்தால் சூழப்பட்டிருப்பதால் (Land Locked) அங்குள்ள எண்ணெய் வளத்தை குழாய் மூலம் மட்டுமே அதுவும் அரசியல் ஆபத்துகள் சூழ்ந்த பகுதிகள் வழியாகத்தான் கொண்டு வரமுடியும் என்கிற நிலை உள்ளது. எனவே, இந்த குழாய்களை யார் கட்டுப்படுத்துகிறார்களோ அவர்களே இந்த எண்ணெய் வளத்தையும் கட்டுப்படுத்த முடியும். இவ்வளவு சிரமம் நிறைந்த ஆப்கன் வழியே ஏன் குழாய் அமைக்க வேண்டும், பக்கத்தில் ஈரான் இருக்கிறதே அது வழியாக கொண்டுவரலாமே என்று கேட்கலாம். செய்யலாம், ஆனால் ஈரான் மீது அமெரிக்கா தடை (Sanction) விதித்திருக்கிறதே.

**வளர்த்த கடா-க்கள் மார்பில் பாய்ந்தன**

*80-களில் ரஷ்யா சிதறுண்டவுடன் சீனியர் புஷ் இப்படி அறிவித்தார்!*

**''நாம் புதிய உலக ஒழுங்கிற்கு (New world order) நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம், காட்டுமிராண்டித்தன ஆட்சியை ஒழித்து சட்டத்தின் ஆட்சியைக் கொண்டு வருவோம். அடுத்த நூறு ஆண்டுகளுக்கான எதிர் காலத்தை நாம் தீர்மானிக்கப் போகிறோம்''**

அந்த நூறு ஆண்டுகளை எதன் அடிப்படையில் ஆளப் போகிறோம் என்பது புஷ்-ஷிற்கு மிக நன்றாக தெரியும். அந்த அடிப்படை வேறொன்றுமில்லை, எண்ணெயும் எரிவாயும்தான். தன்னுடைய நலன்களுக்கு பணிய மறுக்கும், இல்லையெனில் எதிராகப் போகும் எந்த ஒரு நாட்டையும் எந்த ஒரு தனி மனிதனையும் அழிக்காமல் விடமாட்டோம் என்பதைத்தான் அவர்கள் குண்டுமழையாகவும், ரசாயன ஆயுதங்களாலும் உலகநாடுகளையும் பொது மக்களையும் மிரட்டி வருகின்றனர். இதுதான் அமெரிக்காவின் அறிவிக்கப்படாத அயலுறவுக் கொள்கை. இரண்டு வளைகுடா போர்களிலும் எத்தனை லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள்? அமெரிக்க ஆளும் வர்க்கமும் சிஐஏ-வும் சேர்ந்துதானே சதாம் ஹுசைனை வளர்த்தவர்கள். ஆனால் தனக்கு கீழ்படிய மறுத்தால் அல்லது தன் நலனுக்கு ஒத்துழைப்பை தரா விட்டால் என்ன நடக்கும் என்பதை வளைகுடா நாடுகளுக்கு உணர்த்தும் ஓர் எச்சரிக்கையாகவே ஈராக்கை அழித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையில் குர்திஸ்தான் மக்கள் தங்கள் தேசிய விடுதலைக்காகப் போராடும்போது அவர்களைக் கடுமையாக ஒடுக்கிய சதாமின் நடவடிக்கைகளுக்கு சபாஷ் போட்ட அதே அமெரிக்கா, தனக்கு ஒத்துவர வில்லை எனத் தெரிந்ததும் அதே குர்தீஸ் போராளிகளில் ஒரு பகுதியினருக்கு ஆயுதத் தையும், டாலரையும் கொடுத்து சதாமுக்கு எதிராகப் போராட அமெரிக்கா சொல்ல வில்லையா? ரீகன் அரசு மத்திய அமெரிக்காவில் கான்ட்ராஸ்-ஐயும் தென் ஆப்பிரிக்காவில் யுனிடா-வையும் உருவாக்கி பல ஆயிரம் மக்களை கொலை செய்தார்களே. இப்படி உலகம் முழுவதும் நடக்கும் தேசிய விடுதலைப் போராட்டங்களை தன் நலனுக்காக ஒடுக்கு வதும் ஆதரிப்பதும் அதன் இரட்டை வேடத்தைக் காட்டவில்லையா? இதேபோலத்தான் ஆப்கனில் கம்யூனிஸ்ட்டுகளின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க அங்கிருந்த மதவெறிக் குழுக்களையும் மற்றும் தங்களுக்குள்ளேயே அதிகார வெறிக்காக அடித்துக் கொண்ட யுத்த நிலப்பிரபுக்களையும் ஒன்றிணைத்து கம்யூனிஸ்ட்டுகளை கொலை செய்தார்கள்!

இப்பகுதியில் கம்யூனிஸ்ட்டுகளையும் ரஷ்யா வின் ஆதிக்கத்தையும் முற்றாக துடைத்தழிக்கத் தானே பின்லேடனையும் முஜாஹித்களையும் உருவாக்கினார்கள். அதனால்தானே தலிபான் செய்த அத்தனை அட்டூழியங்களையும் கண்டு கொள்ளாமல் இருந்தார்கள் இன்றைய பயங்கர வாத ஒழிப்புத் தலைவர்கள். பாமியானில் புத்தர் சிலையை உடைத்தபோது கூட மௌனம் சாதித்தார்களே. எதற்கு? ஏகாதிபத்தியங்களுக்கு மக்கள் நலன் முக்கியமல்ல. தன்னுடைய லாபந்தான் முக்கியம். செப். 11-ம் தேதி ஜூனியர் புஷ்-ஷின் முகம் கிட்டத்தட்ட ஒரு நரியின் முகத்தை ஒத்திருந்தது. அது அமெரிக்க மக்கள் கொல்லப்பட்டார்களே என்ற தேச பக்தியின் கோபம் அல்ல. இவ்வளவு சிரமப் பட்டு ஆப்கனைக் கைப்பற்றும்போது, கடைசி யில் வெண்ணெய் திரளும் நேரத்தில் பின் லேடன் காரியத்தைக் கெடுத்துவிட்டானே என்கிற குரூரக் கோபமே அவரின் ஒவ்வொரு தொலைக்காட்சி பேச்சிலும் காணப்பட்டது. ஏனெனில் அமெரிக்க அதிபர் - அதிபர் மட்டு மல்ல, அமெரிக்க அமைச்சர்கள் - அமைச்சர்கள் மட்டுமல்ல. அவர்கள் எண்ணெய் மற்றும் இராணுவத் தளவாடக் கம்பெனிகளின் பங்கு தாரர்கள். அமெரிக்காவின் கொலை வெறி யாட்டங்களின் வரலாறு 1798-ல் ஆரம்பித்து இன்றைய ஆப்கன் வரை கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது. இப்பக்கங்கள் போதாது. மேலும் இவைகளைப் பற்றி வணிகப் பத்திரிக்கையிலிருந்து, மார்க்சிய லெனினிய இயக்கங்கள் மற்றும் உலக நலன் விரும்பும் அத்தனைப் பத்திரிகையாளர்கள் ஆதாரங்களோடு அமெரிக்காவின் உண்மை முகத்தை உலகுக்குக் காட்டிவிட்டனர். வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக பார்ப் போம். மேலும் புதிய கலாச்சாரம் டிசம்பர் இதழில் விரிவாகவே இதைப் பற்றித் தொகுத் துள்ளனர்.

எனவே, இங்கு நாம் விவாதிக்க வேண்டிய விஷயம் வேறு. அமெரிக்கா வளர்த்த கடா-க்கள் (சதாம் உசேன், பின்லேடன்) திரும்ப அதன் மார்பில் பாய்ந்தது ஏன்? முதலாளித்துவ அமைப்பு மக்களை ஒடுக்கிச் சுரண்டி வாழ் வதும், அதன் உச்சகட்டமான ஏகாதிபத்திய மானது உலக நாடுகளை ஒடுக்கிச் சுரண்டி வாழ்வதும் அதன் இயல்பு. இதில் அது தன் சொந்தநாட்டு மக்கள் என்றெல்லாம் பிரித்துப் பார்க்காது. அதற்கு எல்லா மக்களும் ஒன்று தான். வளைகுடாப் போரில் அமெரிக்கா பயன் படுத்திய யுரேனியக் குண்டுகளினால் ஈராக் மக்கள் மட்டுமல்ல. 50 ஆயிரம் அமெரிக்க வீரர் களும் பாதிக்கப்பட்டனர். நாடு திரும்பிய அமெரிக்க வீரர்கள் மட்டுமின்றி அவர்களின் குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டனர். குடும்பத் தார் மட்டுமின்றி அவர்களுக்குப் பிறக்கின்ற சந்ததிகளும் பிறவிக் குறைபாடுகளுடன் பிறக்க வாரம்பித்துவிட்டன. இதையெல்லாம் பார்த்த புஷ் அவர்களுக்கு தன் சொந்த மக்களாயிற்றே என இரக்கம் வந்துவிட்டதா? கேவலத்திலும் கேவலமாக, இவ்விஷயங்களை ஐக்கிய நாடு களின் சபையில் யாரும் பேசக்கூடாது என்று தன் அதிகாரத்தால் தடுத்தாரே? இதுதான் அமெரிக்க அதிபரின் தேசபக்தியா?

1995ற்குப் பிறகு பின்லேடன் தனக்கு எதிராக போகிறான் என்று தெரிந்ததும், தனது செல்லப் பிள்ளையை சற்று பயமுறுத்தி வைக்கவே சூடான் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தி அந் நாட்டின் மருந்துக் கம்பெனிகளையும் (Parmaceutical) பொதுமக்களையும் தெரிந்தே



படிப்பகம்

www.padippakam.com

கொன்றார்களே. கடும் கண்டனத்திற்குப் பிறகு இராணுவ அதிகாரிகளும் ஒத்துக்கொண்டார்களே. ஆம் மருந்துக் கம்பெனிகள்தான் என்று. ஓசாமா மறைவிடம் எனத் 'தெரியாமல்' தாக்கிவிட்டோம் என்றார்கள். 'தெரியாமல்' நடந்து போனதால் அங்கு இறந்துபோனது ஆடு மாடுகள் அல்ல. நூற்றுக்கணக்கில் மனிதர்கள். அமெரிக்காவின் இந்த மிரட்டலைக் கண்ட சூடான் உடனடியாக பின்லேடனை வெளியேற்றிவிட்டது.

பின்லேடனின் இயற்பெயர் ஓசாமா பின் முகம்மது பின் ஆவாத் பின்லேடன். ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் தன் தந்தை இழந்தபோது தனக்கு வந்த குடும்பச் சொத்தின் மதிப்பு மட்டும் 360 கோடி ரூபாய். அப்போது பின்லேடனுக்கு வயது 13 தான். அவரின் தந்தை அரேபியாவின் கோடீஸ்வரர்களில் ஒருவர். சிவில் என்ஜினியரான பின்லேடன் சவுதி அரேபிய ஆளும் வர்க்கம் அமெரிக்கச் சார்பினால் கலங்கப்பட்டு விட்டதைப் பார்த்து வெறுப்படைந்தார். வளைகுடாப் போரின் போது அமெரிக்கத் துருப்புகளை அராபிய மண்ணில் இறங்க அனுமதிக்கக் கூடாது எனக் கடுமையாக எதிர்த்தவர். இதனால் 1991ல் அரேபிய அரசு அவரை வெளியேறச் சொல்லி விட்டது. தன்னுடைய அரேபியக் குடியுரிமையை வேண்டாம் எனத் தூக்கியெறிந்துவிட்டு சூடான் சென்றார்.

சரி. சிஐஏ வும் அமெரிக்காவும்தான் அவரை வளர்த்தவர்கள் என்கிறீர்கள். பிறகு ஏன் அமெரிக்காவை எதிர்க்க வேண்டும்? பின்லேடன் இஸ்லாமிய சன்னி பிரிவைச் சேர்ந்தவர். அதன் உட்பிரிவான வஹாபி வகை இஸ்லாமியக் கொள்கைக் கொண்டவர். இதுவே உண்மையான இஸ்லாம் என்றும் இதையே நிலைநாட்டவேண்டும் என்று நினைத்தவர். சோவியத் ரஷ்யாவின் கம்யூனிசக் கொள்கையும், அமெரிக்காவின் சீரழிவுக் கலாச்சாரமும் உண்மையான இஸ்லாத்தை அழித்துவிடும் என்று அவர் நினைத்திருக்கலாம். எனவே, முதலில் சோவியத் ரஷ்யா மீது புனிதப் போரை அறிவித்து அதனையும் அதன் எடுபிடி அரசுகளையும் அம்மண்ணிலிருந்து விரட்டினார். அடுத்தது அமெரிக்கா. எனவே தன் இரண்டாவது கட்ட புனிதப் போரைத் துவக்கியிருக்கலாம்.

அல்லது, அது இப்படியும் இருக்கலாம். இயல்பாகவே தரகு முதலாளிய வர்க்கத்தைச் சேர்ந்தவர். OPEC நாடுகளின் பெட்ரோலிய சந்தைதான் இன்று பெரும் அளவு செல்வாக்கில் உள்ளது. இது பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் வளைகுடா நாடுகளின் அமைப்பாகும். (Organization of Oil Exporting Countries) இன்று மத்திய ஆசிய நாடுகளின் காஸ்பியன் எண்ணெய் உலகச் சந்தைக்கு வந்துவிட்டால் OPEC நாடுகளின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் அவர் நினைத்திருக்கலாம். எனவே ஆப்கனை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின்கீழ் போகாமல் இருக்க அமெரிக்காவைத் தாக்கியிருக்கலாம். இக்கருத்திற்கு ஏற்றாற்போல, ஏற்கனவே உலக எரிபொருள் சந்தையில் வளைகுடா நாடுகளின் ஆதிக்கத்தைக் குறைக்க அமெரிக்கா பல்வேறு நிலைகளில் எதிர்நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதில் ஒரு பகுதிதான் ஈராக் மீதான பொருளாதாரத்தடை. இத்தடையின் முக்கிய அம்சம், OPEC நாடுகளின் சர்வதேச சந்தைக்கோ, அண்டை நாடுகளுக்கோ ஈராக் ஒரு லிட்டர் பெட்ரோலைக் கூட விற்கக்கூடாது என்பது தான்.

எனவே, பின்லேடனின் அமெரிக்க எதிர்ப்பை வெறும் பயங்கரவாதம் என்பவற்றோடு சுருக்கிப் பார்த்துவிட முடியாது. அப்படிப் பார்த்தால் உலகம் முழுவதும் கோடிக்கான மக்களையும், நூற்றுக்கணக்கான நாடுகளையும் அழித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காதான் No. 1 பயங்கரவாதி. செப். 11ம் தேதி நிகழ்விற்குப் பிறகு ஆப்கன் தனக்கு இன்னொரு வியட்நாமாக மாறிவிடுமோ என அமெரிக்கா நினைத்தது உண்மைதான். காரணம் ஓசாமாவும், தலிபானும் அமெரிக்க இராணுவத்தால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள். இது மட்டுமின்றி அதி நவீன Stringer ஏவுகணை போன்ற ஆயுதங்கள் சோவியத் ரஷ்யாவை அடிக்க அமெரிக்கா அவர்களுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளது. ஆனால், அமெரிக்க அத்தனை இளிச்சவாயன் இல்லை. இப்படி நடக்கு என்று தெரிந்துதான் ஏற்கனவே தலிபானுக்கு எதிராக இருக்கும் வடக்குக் கூட்டணி மற்றும் அதில் அங்கம் வகிக்கும் ரஷித் தோஸ்தும் குல்புதீன் ஹிக்மத்யார் போன்ற யுத்த நிலப்பிரபுக்களை தன் கைப்பாவைகளாக மாற்றி வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டது. இதில் வடக்கு கூட்டணித் தலைவர் அகமது மசூத் பெரும் செல்வாக்குப் கொண்டவர். போரில் பஞ்சசீர் சிங்கம் என்று பெயர் பெற்றவர். அத்தனை போர்த்தந்திர வீரர். அதனால்தான் தாலிபான் உடனடியாக அகமது மசூத்-ஐ கொன்றது. அதுமட்டுமின்றி இவர்கள் தான் 15 ஆயிரம் ரஷ்ய வீரர்களை கொன்றொழித் தவர்கள். எனவேதான், இன்று வடக்குக் கூட்டணியைக் கொண்டு தலிபானை வீழ்த்துவது அமெரிக்காவிற்கு எளிதாயிற்று. விளைவு, ஆப்கன் முழுதுமே தரைமட்ட மாக்கப்பட்டு விட்டது.

இப்பொழுது, அமெரிக்கா அறிவிக்கிறது ஆப்கன் புணரமைப்புத் திட்டத்தை, மிகக் கேலிக்கூத்தான அறிவிப்பு. ஏகாதிபத்திய அறிவிப்புகள் அனைத்தும் மக்களை ஏமாற்று வதற்குத்தான். ஏகாதிபத்தியவாதிகள் கொடுங் கோலர்கள், அவர்கள்தான் தலைமைப் பயங்கரவாதிகள் என்று ஏன் நாம் சொல் கிறோம்? சிறு உதாரணத்தைப் பார்ப்போம். ஆப்கன் போரின்போது ஒரு பக்கம் க்ளஸ்டர் குண்டையும், மறுபக்கம் உணவுப்பொட்டலங் களையும் போட்டார்கள். அமெரிக்கா போட்ட 'க்ளஸ்டர்' குண்டும் மஞ்சள் நிறம், உணவுப் பொட்டலங்களும் மஞ்சள் நிறம். அதுமட்டுமின்றி 'க்ளஸ்டர்' வகைக் குண்டுகள் வடிவமற்றது. உணவுப் பொட்டலமென்றுத் திறந்தால் குண்டுதான் வெடிக்கும். இப்படி




Anti-war protesters on a march from Union Square to Times Square in New York City.

மூன்றாமுலக மக்களைக் கொல்வது மட்டுமே தனக்குக் கீழ்ப்படியாத நாடுகளுக்கு அமெரிக்கா கொடுக்கும் தண்டனை. ஆனால் வெளியே அறிவிப்பது, நான் பயங்கரவாதிகளின் இருப் பிடங்களை மட்டும்தான் அடிக்கிறேன் என்று. பயங்கரவாதிகளின் இடங்களில் மட்டும்தான் குண்டு போடுகிறேன் என்று நீங்கள் சொன்னால் ஹிரோசிமா, நாகசாகி பயங்கரவாதிகளும், இராணுவத் தளமும் இருந்த இடமா?

ஆப்கன் நாட்டு புணரமைப்புத் திட்டம் (Reconstruction Program) ஒரு கண் துடைப்பு தான். வியட்நாம் புரணமைப்புத் திட்டத்தில் 1973ல் கையெழுத்திட்டு உறுதிமொழியளித்தது. ஆனால் என்னவாயிற்று? ஒரு பைசாகூட தரவில்லை. அடுத்தது, லாவோஸ் - கம்போடியா மீது அமெரிக்கா வீசிய குண்டுகள் கிட்டத்தட்ட இன்னொரு வியட்நாமாகக் காட்சியளித்தது. அங்கும் ஒரு புணரமைப்புத் திட்டத்தை அறிவித்தது. ஒரு கட்டிடம் கூட கட்டவில்லை. அடுத்தது கிரினாடா மற்றும் பனாமா மீது தனது தாக்குதல்களை நடத்தியது அமெரிக்கா. இதற்கு அமெரிக்க நீதிமன்றம் இழப்பீட்டைத் தர ஆணையிட்டும் இதுவரை ஒன்றும் தரவில்லை. அடுத்தது, ஈராக், 40 நாள் குண்டு மழையில் மின்சாரம், தண்ணீர், வாழ்விடம் என அனைத்தும் தரைமட்ட மாக்கப்பட்டது. தான் கண்டுபிடித்த அத்தனை இரசாயன ஆயுதங்களையும் (Chemical Weapons) போட்டது அமெரிக்கா. ஆனால் இதுவரை புனரமைப்பிற்கு என என்ன செய்தார்கள்? அடுத்தது சூடான். மிக ஏழை நாடு. அதன் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அந்நாட்டின் 75 சதவீத மருந்து தயாரிப்பையும், கட்டிடங் களையும், மக்களையும் அழித்தார்கள். இது வரை எந்த இழப்பீட்டை அளித்தனர்? அடுத்தது யூகோஸ்லாவியாயில் அமைதியை நிலை நாட்டுகிறேன் என 78 நாட்களாக NATO படையின் குண்டுகள் வீசப்பட்டு அழித்தார் களே, என்ன செய்தார்கள் புனரமைப்பிற்கு? இன்று ஆப்கனை அழித்த பிறகு ஜார்ஜ் புஷ் அறிவிக்கிறார். Afghan Reconstruction Program-ஐ

எனவே, இன்றைய சூழலில் உலகத்திற்கும், உலக மக்களுக்கும் எதிரியாக இருக்கும் அமெரிக்கா பயங்கரவாதியா, மதவாத அடிப் படையில் தனக்கான எதிரியை மட்டும் அழிக்க நினைக்கும் பின்லேடன் தீவிரவாதியா?



படிப்பகம்

www.padippakam.com

என்பதை வரலாற்றின் அடிப்படையில்தான் பார்க்கவேண்டுமே தவிர அமெரிக்காவையே தாக்கி விட்டான், எனவே பின்லேடன்தான் மாபெரும் பயங்கரவாதி என நாமும் வாதிட்டால் உலகத்தின் எதிரி அமெரிக்கா என்கிற தலைமைப் பயங்கரவாதிக்கு நாம் மறைமுக ஆதரவு அளிக்கிறோம் என்று பொருள். எல்லோரும் பயங்கரவாதிகள்தான். ஆம் யாரெல்லாம் மக்கள் நலனுக்கு எதிராக செயல்படுகிறார்களோ அவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளே. அதனால்தான் 'பயங்கர வாதம்' என்பதற்கும் 'பயங்கரவாதி' என்பதற்கும் அமெரிக்கா இன்று வரை வரையறை செய்யவில்லை. அப்படி அது வரையறை செய்யும் பட்சத்தில் உலக மக்களின் அத்தனை சுட்டு விரல்களும் 'உண்மையான பயங்கரவாதி அமெரிக்காவே' என தனக்கு எதிராகவே திரும்பும் என்பது அமெரிக்காவிற்குத் தெரியும்.

எனவே, ஆப்கன் மீதான அமெரிக்காவின் தாக்குதல் ஒரு புதிய காலனிக்கான தாக்குதலே. என்னை அடித்தான் அதனால் திருப்பி அடித்தேன் என்கிற சிறுபிள்ளைவாதம் அல்ல இப்போர். அந்த வகையில் தலிபானின் அமெரிக்க எதிர்ப்புப் போர் ஒட்டுமொத்த மூன்றாம் உலக நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் ஒரு பகுதியே. இன்று அது தலிபானின் வடிவத்தில் வெளிப்பட்டுள்ளது, அல்லது தலிபான் அதனை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளது. ஆனால், சிலர் புஷ்-ஷீம் பயங்கரவாதிதான், பின்லேடனும் பயங்கர வாதிதான் என பொது அபிப்ராயம் சொல்கிறார்கள். ஒரு வரலாற்று நிகழ்வை எப்படிப் பார்ப்பது? இன்று உலக மக்களின் பிரதான எதிரி யார்? சந்கேமில்லை அமெரிக்காதான். அப்படியெனில் அமெரிக்கா என்கிற ஒற்றை வல்லரசின் பயங்கரவாதங்கள் அனைத்தும் ஒரு சிறு மதவாதப் பயங்கரவாதத்தோடு சமப் படுத்தி ஆப்கன் மக்களின் காலனி எதிர்ப்புப் போராட்டத்தின் மதிப்பை சிறுமைப்படுத்துவது, அரசியல் சிறுபிள்ளைத்தனமாக ஆகிவிடாதா? எல்லாம் ஒன்றுதான் என்று பார்ப்பதின் அரசியல் உள்நோக்கம் என்ன? அந்த வகையில் 21ம் நூற்றாண்டில் பின்லேடனின் அமெரிக்க எதிர்ப்புப் போர், ஏனைய பிற மூன்றாம் உலக புதிய காலனி நாடுகளின் காலனி எதிர்ப்பினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்கிற வகையில், ஆப்கனின் இந்த அமெரிக்க எதிர்ப்பு யுத்தத்திற்கு ஒரு முற்போக்கான பாத்திரத்தை வரலாறு அளித்துள்ளது.

ஏகாதிபத்தியம் ஒரு காகிதப் புலி என்பதை செப்.11 ம் தேதி நிகழ்வு நமக்கு மீண்டும் உணர்த்தியுள்ளது. ஆனால், என்றைக்குமே எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் அல்லது ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டமும், ஒரு தனிநபரை அழிப்பதாலேயோ, அல்லது மதவாதத்தின் அடிப்படையிலோ வெற்றியடைய முடியாது. அப்படி நடக்குமெனில், இன்றைக்கு தலிபானுக்கு ஏற்பட்ட விளைவு தான். எந்தவொரு பிற்போக்கு ஆட்சியையும், எந்தவொரு ஏகாதிபத்தியத்தையும் மக்கள்திரள் சார்ந்த போராட்டத்தின் மூலமாகத்தான் ஒழிக்க முடியுமே தவிர தனிக்குழுவோ, தனி நபரோ போராட்டத்தை வெற்றியடையச் செய்ய முடியாது. உதாரணத்திற்கு, பாசிச ஹிட்லரை வென்றது யார்? வியட்நாமிய ஆக்கிரமிப்பாளன் அமெரிக்காவை தோற்கடித்தது யார்? கம்யூனிஸ்ட் கட்சிகள் தலைமையில் திரண்ட மக்கள் தானே! வரலாற்றைப் படியுங்கள்.

இறுதியாக, 'ஆஃப்கானிஸ்தான் - முஜாஹித்களின் தியாக வரலாறு' என்ற நூலை எழுதிய மு. குலாம் முகம்மது அவர்களை முன்வைத்து ஒட்டுமொத்த இஸ்லாமிய சகோதரர்களுக்கும் ஒரு அன்பான வேண்டுகோளோடு இக் கட்டுரையை முடித்துச் கொள்கிறேன். இவர் தான் எழுதிய 152 பக்க நூலில் சி.ஐ.ஏ. பற்றியோ அதற்கு உதவிய பாகிஸ்தானைப் பற்றியோ, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்களைப் பற்றியோ ஒரு வார்த்தை கூட இல்லை. உலகமே, ஏன் பாகிஸ்தானே ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ள ஒரு பெரும் விஷயத்தை இவரால் எப்படி மறந்து அல்லது தவிர்த்து எழுதமுடிகிறது? ஏன்? இவர்கள் சிஐஏ.வைத் தவிர மற்றவர்கள் இஸ்லாமியர்கள் என்ற இன உணர்வா? அல்லது கடவுள் இல்லை என்கிற கம்யூனிசத்தின் ஒரு பகுதியை மட்டுமே எடுத்துக் கொண்டு ஒட்டுமொத்த சோசலிச அமைப்பே இஸ்லாத்திற்கு விரோதி என்ற மதவாத உணர்வாலா? சகோதரர் குலாம் முகம்மது அவர்களே! கம்யூனிசமோ, சோசலிசமோ அல்லது மார்க்சிய-லெனினிய இயக்கங்களோ கடவுள் இல்லை என்று சொல்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைதான். ஏனெனில் அது ஆதிக்க வர்க்கங்களின் சுரண்டலை நியாயப்படுத்தும் அமைப்பாக மத நிறுவனங்களும், கடவுள் கொள்கைகளும் இருப்பதால். எனவேதான் அவர்கள் அதனை விஞ்ஞானப் பூர்வமாக எதிர்க்கிறார்கள். மேலும் சரி-தவறு, நீதி - அநீதி, எதிரி யார் நண்பன் யார் என்பதை பகுத்தறிந்து வாழும் சிந்தனை முறையை அது மழுங்கடித்து விடுகிறது என்பதால். அதே நேரத்தில் எந்தவொரு கம்யூனிஸ்ட்டோ, எந்தவொரு மார்க்சிய-லெனினிய இயக்கங்களோ கடவுளை ஒழிக்க புறப்படவில்லை. ஆனால், ஒவ்வொரு முஸ்லீமையும் ஒரு கையில் வாளையும் மறுகையில் குரானையும் ஏந்திக்கொண்டு 'ஜிகாத்' என்ற புனிதப் போரை கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக தயார்படுத்துகிறீர்கள். ஆனால் இதற்கு மாறாக எந்த ஒரு கம்யூனிஸ்ட்டும் தனக்கு எதிரியாக ஒரு முஸ்லீமையோ, கிறித்துவனையோ, இந்துவையோ அறிவிக்கவில்லையே.

சகோ. குலாம் முகமது அவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவ மதவாத நிறுவனங்களும் தங்களுக்கு பிரதான எதிரி கம்யூனிசமே என அறிவிக்கிறது. இஸ்லாத்தையும், இஸ்லாமியர்களையும் இந்திய மண்ணிலிருந்து துடைத்தழிக்கப் புறப்பட்டிருக்கும் RSS மற்றும் இந்துமதவாதக் கும்பல்களும் தங்களுக்கு பிரதான எதிரி கம்யூனிசமே என அறிவிக்கின்றன. அதேபோல இஸ்லாமிய மதவாத நிறுவனங்களும், மதவெறி பிடித்த முஸ்லீம்களும் தங்களுக்கும் பிரதான எதிரி கம்யூனிசமே என்கிறீர்கள். அப்படியானால் மதவாதத்தினரான நீங்கள் அனைவரும் எங்கோ ஒரு புள்ளியில் ஒன்றாய் சந்திக்கிறீர்கள். அப்புள்ளி எதுவென நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். ஆனால் மதவாதம் ஒட்டுமொத்த மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வை என்றுமே சொல்லமுடியாது. குறைந்தபட்சம் இஸ்லாமிய சகோதரர்களை ஒரு மதத்திற்கு இன்னொரு மதம் எதிரியல்ல என்பதை உணரவிடுங்கள். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ அனைத்து சகோதரர்களுக் கும் அதாவது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் வேறொரு எதிரி இருப்பதைப் பார்க்க அவர் களை அனுமதியுங்கள்.

ஆதாரங்கள்:


1. Limbs of no body - Mohsen Makhmalbaf - monthly Review Nov.2001
2. Revolutionary Worker - Issue: 1124, 1035, 1125
3. Oil. Dollars & Politics - Burchard Brentijes
4. The Taliban Phenomenon - Kamal matinuddin
5. Rogue State - William Blum
6. Testimony - John J. Maresca
7. We are the war criminals - Robert Fisk
8. Rebuilding Afghanistan - W. Blum
9. Cutting through the darkness in Afghanistan - M.N. Cham, A world to win, Issue No.24
10. Crs Issue Brief - Ellen C. Collier, Specialist in U.S. Foreign Policy - Thru internet


## காரிருள் பயணியும்... கம்பளி போர்த்திய அகதியும்...

**பாலை நிலவன்**

*எல்லாம் பறிக்கப்பட்ட காலத்தில்*
*எஞ்சி நிற்கும் துயரங்களை*
*கோப்பைகளில் நிறைக்கும்போது*
*கசப்படைந்து வழிகிறது உடல்*
*ஒரு கோப்பை ஆனந்தாதீதத்தை*
*யாசிப்பவனுக்கு*
*சவம் நெய்கிறது பேரண்டம்*

*மரத்தடியில் அமர்ந்திருக்கும்*
*முதிர்ந்தவனிடம் பேசிக்கொண்டு நகரலாம்*
*காரிருளுக்கு...*
*கம்பளி போர்த்திய அகதியொருவன்*
*இராக்காலத்தில் சுருட்டு புகைக்கிறான்*
*அவன் புகையை இழுக்கும்போது*
*அண்டம் கருகுகிறது*
*புகையை வெளியே விடும்போது*
*சாலைவாசிகள் பிரேதங்களாகிறார்கள்*
*அவன் சுருட்டை நசுக்கி எறிந்தபோது*
*என் தலையைக் காணவில்லை*
*வருத்தத்தின் ஆகாரம் புசித்து*
*எனக்காக வைத்திருந்த ஒரு*
*தலையையும்...*
*புகைத்துவிட்டுப் போகிறான்*
*கம்பளி போர்த்திய அகதி*




படிப்பகம்

www.padippakam.com

# பின் நவீனத்துவம் ரஷ்யாவிற்கு வந்த பொழுது...

விளாடிமீர் பிலேன்கின்

தமிழில் : மோகன்
இண்டர்நெட் கட்டுரை



'ஒரு சமுதாயத்தில் குவிந்துவிட்ட முரண்பாடுகளை அதன் முற்போக்கு சக்திகள் தீர்க்காவிட்டால், அந்த வேலை பிற்போக்கு சக்திகளால் செய்து முடிக்கப் படுகிறது' என்று கார்ல் மார்க்ஸ் ஓரிடத்தில் குறிப் பிட்டுள்ளார். இந்த கட்டத்தில் வரலாறு அதன் தவறான திசையில் வளர்கிறது. இதேபோன்ற ஒன்று ரஷ்யாவிலும் நடத்தேறியுள்ளது. சோவியத் சமுதாயத் தில் எந்த முரண்பாடுகளுக்கு அதன் தொழிலாளர்கள் தீர்வு காணத்தவறிய பொழுது, ரஷ்ய அதிகார வர்க்கம் அவற்றைத் தனக்குச் சாதகமான முறையில் தீர்த்து வைத்துள்ளது. இந்தப் பின்னடைவின் விளைவாக மக்கள் திரளின் பொருளாதார, பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் மாபெரும் பின்னடைவைச் சந்தித் துள்ளன. இதற்கு சோவியத் உழைக்கும் வர்க்கம் மாபெரும் விலை கொடுத்துள்ளது. உடலும் பண்பும் சீரழிந்து, அரசியல் சரணாகதிக்கும், அடிப்படைத் தேவைகளுக்கே ஆலாய்ப்பறக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. ஆயினும் முடிச்சு வெட்டப்பட்டு விட்டது; முட்டுச்சந்திலிருந்து விடுபட்டு, வரலாறு மீண்டும் நகரத்தொடங்கி விட்டது-அதன் தீய பக்கத்தை நோக்கி!

பெர்லின் சுவர் விழ்ந்து பத்தாண்டுகள் கடந்த பின்னர் வரலாற்றுப் பொருள் முதல்வாதிகள் காணும் யெல்த்சினின் ரஷ்யாவை ஒரே சொல்லில் மீண்டும் ஒரு ''ஜாரிசமீட்பு'' என்று விவரிக்கலாம். 1917 அக்டோபரில் தத்துவத் திலும், நடைமுறையிலும் மனித குலத்திற்கே முன்னோடியாக மாறிய ரஷ்யா இன்று அவ் விரண்டிலும் தனது கடந்த காலத்தினும் பின் தங்கிய நிலைக்குப் போய்விட்டது. வரலாற்றின் கடிகாரத்தில் ரஷ்யாவின் 1989, பிரெஞ்சு நாட்டின் 1789 அல்லாமல் வேறென்ன? அதன் ஆகஸ்ட் 1991, 1848 பிப்ரவரியின் கேலிக்கூத் தல்லவா? அதன் 1993 அக்டோபர் எழுச்சி, 1848 ஜுன் பாரீஸ் கலகத்தின் குருதி வழியும் நையாண்டி தானே! முதலாளித்துவப் புரட்சியின் போது அவ்வர்க்கம் முழங்கிய கொள்கைகளை அதனால் நிறைவேற்ற இயலாது என்பதை, பாரீஸ் நகரத் தொழிலாளர்களைப் படுகொலை செய்தபின்பே, அதாவது அறுபதாண்டுகளுக்குப் பின்பே, புரிந்து கொள்ள முடிந்தது. உலக ளாவிய மனித மதிப்பீடுகளைவிட கவசப் படைகளே முக்கியமானவை என்பதை ரஷ்ய சமுதாயம் உணர்ந்து கொள்ள ஆகஸ்ட் 1991லிருந்து, அக்டோபர் 1993 வரையிலான இரண்டு ஆண்டுகளே போதுமானதாயிருந்தது. இது கேலிக்கூத்தின் கேலிக்கூத்து, நையாண்டி செய்யப்படும் நையாண்டி. ரஷ்யாவின் நவீன வரலாறே கடந்த கால வரலாற்றுக் கட்டங் களின் பாவைக்கூத்தாக மாறிவிட்டதா? மேற் கத்திய பின்நவீனத்துவத்தின் மட்டரக வடிவ மான ரஷ்யப் பின்நவீனத்துவத்தின் கற்ப னைக்குப் பொருத்தமான நிழற்கூத்தாக மாறிவிட்டதா? ஆனால் இந்தப் பைத்தியக் காரத்தனத்திற்கு அடியில் ஒரு தெளிவானமுறை உள்ளது. இந்த ரஷ்ய வரலாற்று நாடக நடிகர்கள் வேஷத்தை மாற்றிக் கொள்வதிலும் ஒரு விதி கடைப்பிடிக்கப்படுகிறது. அவர்கள் உடைகளையும் மேடை அமைப்பையும்



படிப்பகம்

www.padippakam.com

பின்னோக்கிய கால வரிசைப்படி மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தெருவில் எளிமையான ஜனநாயக மேலாடைகளில் தொடங்கி கிரெம்ளின் அரங்குகளில், சீமான் சீமாட்டிகளுக்கேற்ற அலங்கார ஆடைகளுக்கு முன்னேறுகின்றனர். பத்தாண்டுகளுக்கு முன்பு, ''முடிவு வழியை நியாயப்படுத்துகிறது'' என்று போல்ஷ்விக்குகள் கருதுவதாக ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த அதே போலி நெறியாளர்கள் இன்று ரஷ்யாவில் 'நாகரிகத்தை' காப்பாற்ற ஒரு ரஷ்ய பினோசெட்டை வேண்டுகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், ரஷ்ய ஆளும் கும்பல் தனக்குப் பொருளாதார சுதந்திரமும் அதற்குப் பரிசாக சமுதாயத்தில் அனைவருக்கும் அரசியல் மீட்சியும் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தது. ஆனால் இன்று அது அரசியல் மீட்சியல்ல - ரஷ்ய சமுதாயத்திற்கு அரசியல் அடிமைத்தனமே பொருத்தமானது என்ற முடிவிற்கு வந்துள்ளது. ஏனெனில் அதன் எதிரி அறுதிச் சிறுபான்மையான நிலப்பிரபுத்துவச் சமுதாயம் அல்ல, அறுதிப் பெரும்பான்மையான நவீன ரஷ்ய சமுதாயத்தின் கூலித் தொழிலாளர்கள். அவர்களின் பின்னே விரிந்திருப்பதும் புனித வரலாறல்ல, ரஷ்ய மற்றும் சர்வதேச பாட்டாளி வர்க்கப் போராட்ட வரலாறு. அதனால்தான் ரஷ்ய முதலாளித்துவ ஆளும் கும்பல் தனது நவீன எதிரியைச் சந்திக்க தனது புராதன எதிரியை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. முதலாளித்துவ மிலியுக்கோவால் தூக்கியெறியப்பட்டு ரோமோனோவ் உயிர்த்தெழுப்பப்பட்டு முதலாளித்துவ யெல்ச்சினால் பிரம்மாண்டமாக்கப்படுகிறார். அழகியல் தேடும் அப்பாவிகளுக்கு ரஷ்யா ஒரு வரலாற்று நிழற்கூத்து நாடகமாகத் தோன்றலாம். மார்க்சீயர்கள் இதனை சாவு மணி அடிக்கப்போகும் தருணத்தில் உயிர்த்தெழுந்து விட்ட முதலாளித்துவம் என்று தர்க்கரீதியாக விளக்குகின்றனர்.

முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்குபவர்கள், ரஷ்யாவின் கொள்ளைக்கார முதலாளித்துவத்தை அதன் புனிதத்தந்தையான, மேற்கத்திய, குறிப்பாக - அமெரிக்க முதலாளித்துவத்தின் கடந்த கால கொள்ளைக்காரப் பின்னணியைச் சுட்டிக்காட்டி நியாயப்படுத்துகின்றனர். அவர்கள் குறிப்பிட மறந்த ஒன்றும் உள்ளது. நாம் ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் கடந்த காலத்தை மட்டுமல்ல எதிர்காலத்தையும் காண்கிறோம். ஏனெனில், உலக முதலாளித்துவ சிந்தனையாளர்கள் அனைத்து வரலாறுகளும் முடிந்து போகின்ற காலமென்று வரையறுத்துள்ள காலகட்டத்தில்தான் ரஷ்ய முதலாளி வர்க்கம் தனது வரலாற்றைத் தொடங்க விழைகிறது. ''ஃபாஸ்ட்'' ஆணையிட்டதுபோல் ரஷ்ய முதலாளித்துவ வர்க்கமும் வெற்றிக் களிப்பில் ''காலமே அசையாது நில்'' என்று வீணே அலறிப் பார்க்கிறது. காலம் முன்செல்லத் தவறினால், பிறகு பின்செல்லத் தொடங்கும், அதுவும் அதன் தீய கூறுகளில். இந்தப் பொருளில் முதலாளித்துவம் இன்று ரஷ்யாவில் தன் கொள்ளைக்கார கடந்த காலத்தை மட்டுமல்லாது, காட்டுமிராண்டித்தனமான எதிர்காலத்தையும் காண்கிறது. முதலாளித்துவ அமைப்பின் தொடக்கத்தையும் முடிவையும் காண்கிறது. முதலாளித்துவ வர்க்க உலகிற்கு அதன் வரலாற்றின் எதிர்மறையான கூறுகள் அனைத்தையும் காட்டும் கண்ணாடியாக இன்றைய ரஷ்ய சமுதாயமும், அரசும் விளங்குகின்றன. மார்க்ஸ் கூறுவதுபோல அவை உரிமைகளை விட்டுவிட்டு அடிமைத்தனத்தை மட்டும், ஆக்கபூர்வ கூறுகளை விட்டுவிட்டு உற்பத்தி சக்திகளின் அழிவுகளை மட்டும், சமூக உறவுகளில் பண்புகளை விட்டுவிட்டு மிருகத்தனத்தை மட்டும், பண்பாட்டை விட்டுவிட்டு காட்டுமிராண்டித்தனத்தை மட்டும் வெளிப்படுத்துகின்றன. ரஷ்யாவின் இந்த நிலைமைகளின் மீது போர் தொடங்க வேண்டுமா? இந்த நிலைமைகள் தொலைதூர, கடந்த காலத்திற்கும் அடியில் உள்ளன. விமர்சனங்களுக்கெல்லாம் எட்டாத ஆழத்தில் உள்ளன. ரஷ்யாவில் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் பணி எதிரியோடு வாதிடுவது அல்ல அழித்தொழிப்பதே ஆகும்.

## I

பின் நவீனத்துவத்தைப் பற்றிய குறிப்புகள் எழுதுவதற்கு அண்மையில் வெளிவந்த இரண்டு கட்டுரைத் தொகுப்பு நூல்கள் காரணமாகும். ஒன்று சார்லஸ் ஜென்ஸ் - ஜேசன் ரிக்பை அட்டைப்படம் வடிவமைத்த ''சோவியத்திற்குப் பிந்திய கால ஓவியமும் கட்டடக்



படிப்பகம்

www.padippakam.com

கலையும்'' (1994 அகாதமி பதிப்பு) மற்றது ''குறியீட்டிற்குள் மீண்டும் நுழைதல்'' (எல்லன்பெர்ரி - அனீசா மில்லர் பொகாகா ஆகியோரால் தொகுக்கப்பட்ட 1995-ஆம் ஆண்டு மிச்சிகன் பல்கலைக்கழக பதிப்பு) பண்பாட்டுத் துறைகளைப்பற்றி பொது வாகவும், ரஷ்ய கலைத்துறையின் புதிய கூறுகள் பற்றிக் குறிப்பாகவும் பேசும் பல்வேறு கட்டுரைகளை தாங்கியுள்ள இந்த இரு தொகுப்புகளிலும் சுமார் 40 ஆசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் ரஷ்ய நாட்டவர். என்றாலும் மேற்கத்திய கலைஞர்களும் விமர்சகர்களும் இடம் பெற்றுள்ளனர். இக்கட்டுரைகளில், பெரும் பாலானவற்றின் - குறிப்பாக ரஷ்ய ஆசிரியர் களின் கட்டுரைகளில் விமர்சனத்தன்மை அவ்வளவு உயர்வானதல்ல என்றாலும் அவற்றின் முக்கியத்துவம் வேறொரு அம்சத்தில் உள்ளது. ரஷ்ய புதிய தாராளவாத படைப்பாளி அறிவு ஜீவிகளின் அழகியல், கருத்தியல் மற்றும் அறிவியல் பற்றிய முழுமையான சித்திரத்தை அளிக்கும் இத்தனை கூட்டுக்குரல்கள் இதற்கு முன் வேறெங்கும் ஒலித்ததில்லை. மேலும் இந்தத்தொகுப்பு மேலை பின் நவீனத்துவத்திற்கும் அதன் ரஷ்ய ஆதரவாளர்களுக்கும் இடையே நிலவும் உறவின் புதிய மட்டத்தை உணர்த்துவதுடன் ரஷ்ய ஆதரவாளர்களின் திட்டங்களை வெளிப் படையாகப் பேசுவதன் மூலம் அவர்களின் அரசியல், சமூக இயல்புகளை தெளிவாக உணர உதவுகிறது. இறுதியாக, ரஷ்ய பின் நவீனத் துவம் என்ற ஒரு புதிய பண்பாட்டு நிறுவனம் உருவாகிக்கொண்டிருப்பதை இத்தொகுப்பு அழுத்தமாகத் தெரிவிக்கிறது. சோவியத்திற்குப் பிந்தைய ரஷ்யாவில் மேலை முதலாளித் துவத்தில் பொருளியல், பண்பாட்டு, அரசியல் நிறுவனங்களை ரஷ்ய மண்ணில் நட்டு ரஷ்ய மயமாக்கும் முயற்சியே இது எனலாம்.

உலகளாவிய முதலாளித்துவத்தின் விளிம்பு நாடுகளிலும் அரை விளிம்பு நாடுகளிலும் திணிக்கப்படும் மேற்கு நாடுகளின் மேலாண் மையைப் பயிரிடும் மற்ற நிறுவனங்களைப் போலவே ரஷ்ய பின் நவீனத்துவத்திலும் மேல் நாட்டு நிபுணர்கள் (ஸ்லாவிய அமெரிக்க கும்பல்), மேல்நாட்டு உயர்தத்துவம் (பிரெஞ்சு பின் அமைப்பியல்) மற்றும் மேலை கட்டமைப்புடன் தாராளமான தொடர்பு (மேலை பதிப்பகங்கள், பத்திரிக்கைகள், படிப்புதவித் தொகைகள், நிதிக்கொடைகள், சர்வதேச கூட்டங்கள், மின் அணு ஊடகங்கள்) அனைத்தும் உண்டு. இதன் ரஷ்யப்பிரிவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த கலைஞர்களும் விமர்சகர்களும் உள்ளனர். கம்யூனிச எதிர்ப்பு, புதிய தாராளவாதம், கலையிலும் இலக்கியத் திலும் எதார்த்தவாத எதிர்ப்பு ஆகியவை மட்டுமே இவர்களை ஒன்றிணைக்கும் பண்பு கள். ரஷ்ய பின் நவீனத்துவ கலை உண்மையில் எவ்வளவு பின் நவீனத்துவமானது என்ற கேள்வி ஏற்கனவே எழத்தொடங்கி விட்டது. இந்த ஐயம் நியாயமானதே. ஆயினும் இரண்டாம் பட்சமானதே. அழகியல் தொடர்புடைய இந்த நுட்பமான பிரச்சனைகளையெல்லாம் இத்தொகுப்பின் கட்டுரையாசிரியர்களுக்கு, (மேல் நாட்டினர், ரஷ்யர்கள் அனைவருக்கும்) இப்பொழுது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் அவர்கள் அரசியல் தத்துவங்கள் மற்றும் பண்பாட்டு அரசியல் ஆகியவை பற்றியே முழுக்க முழுக்க கவனம் செலுத்துகின்றனர். நானும் இந்தக் களத்தில்தான் அவர்களோடு விமர்சன ரீதியாக மோத விரும்புகிறேன். முதலாவதாக ரஷ்ய அரசியலிலும் பண் பாட்டிலும் மேலைநாட்டு குறுக்கீடுகள் பற்றிய சார்லஸ்ஜென்க்ஸின் கருத்துகளை விவாதிக்கப் போகின்றேன். பின்பு, இத்தொகுப்பின் ரஷ்ய எழுத்தாளர்கள் அனைவரையும் இணைக்கும் பண்பாகவும், ரஷ்ய பின்நவீனத்துவத்தை நிறுவனமாக்க உதவும் சமூக அரசியல் நிலைமைகளுக்கும் அடிப்படையிலான யதார்த்தவாத எதிர்ப்பைப் பற்றி விவாதிக்க உள்ளேன்.

## II

பின்நவீனத்துவ மதிப்பீடுகளில் சில பொது வான அடிப்படை கருத்துக்களையும், அவற்றை ரஷ்யாவிற்கு சார்லஸ் ஜென்க்ஸ் பயன்படுத்தும் முறையைப் பற்றியும், முதலாவதாக சில கேள்விகளை எழுப்பப் போகிறேன். சார்லஸ் ஜென்க்ஸ் இந்த முதல் தொகுப்பின் முக்கிய மான கட்டுரையை எழுதியதுடன் முகப்பு அட்டைக்கு ஒளிப்பட வடிவமைப்பும் செய்த தன் மூலம் இத்தொகுப்பிற்கு மேலைநாட்டு மதிப்பையும், அதிகாரத்தையும் தருகிறார். பின்



படிப்பகம்

www.padippakam.com

நவீனத்துவ கட்டடக் கலைத்துறையின் முன்னோடி நிபுணரும் அசைக்க முடியாத பின் நவீனத்துவவாதியுமான ஜென்க்ஸ் வரலாற்றுக் காலகட்டங்களைக் கணிப்பதில் மிகுந்த ஆர்வமும், ஆனால் பரிதாபமான திறமையும் உடையவர் என்பது நீண்டகாலமாகத் தெரிந்த விஷயமே. 1972-ஆம் ஆண்டு ஜுலை 15ம் நாள் சரியாக பிற்பகல் 3.32 மணியளவில் புனித லூயி நகரில் ஏழைகளுக்கான ப்ருயிட்- ஈகோ வீட்டு வசதித் திட்டம் தகர்க்கப்பட்டதோடு நவீனத் துவம் இறந்துபோனதாக அறிவித்தார். அந்த நற்செய்தியும் ஓரளவு மிகைப்படுத்தப்பட்டதே. ஏனெனில் நோயாளியானாலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு விடாப்பிடியாகப் போராடும் நவீனத்துவத்தை ஜென்க்ஸ் கடிகாரமும் கையுமாக விடாது கவனித்துக் கொண்டிருந்தார்.

1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மாஸ்கோ ட்ரெட்யாகோவ் கலையரங்கில் நடந்த பின் நவீனத்துவமும் தேசிய கலைகளும் பற்றிய சர்வதேச மாநாட்டிற்கும் கண்காட்சிக்கும் ஜென்க்ஸ் சென்றிருந்தார். இந்த மாநாடு நடந்து கொண்டிருந்தபோதுதான் யெல்த்சினின் கலகமும் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக அக்டோபர் 3, 4 தேதிகளில் ஒஸ்டாங்கினோ தொலைக்காட்சி நிலையப் படுகொலைகளும், அதன்பின் சுப்ரீம் சோவியத் கட்டடங்களை ராணுவம் குண்டுவீசித் தாக்கியதும் நடந்தது. இந்த ரத்தம் சொட்டிய நிகழ்ச்சிகளை சி.என்.என். (CNN) நேரடியாக ஒளிபரப்பியது. அருகில் இருந்த புகழ்பெற்ற காவுட்ஸ்கி வீதியிலிருந்து அரசு ஆதரவாளர்களும் இந்த நாடகத்தை நேரடியாகக் கண்டனர். ஜென்க்ஸ்-ஐப் பொறுத்தவரை அது நழுவிட முடியாத அரிய சந்தர்ப்பம். பின் நவீனத்துவ வாதிக்கு அத்துணை பொறுத்தமில்லாத - மதபோதகரைப் போன்ற அமைதியான குரலில் அன்று ஜென்க்ஸ் இப்படி அறிவித்தார்: ''மாஸ்கோ, அக்டோபர் 4, 1993 காலை 10.10 நவீனத்துவம் இறந்துவிட்டது.''

எனக்குத் தெரிந்தவரை சாதாரணமாக ஜென்க்ஸின் எழுத்துக்களைக் கூர்ந்து கவனித்து வரும் பத்திரிகைகளும் விமர்சன வட்டாரங் களும் கூட இதே தலைப்பில் ஜென்க்ஸ் எழுதிய சிறிய கட்டுரைகளைப் பற்றி கருத்துக்கள் எதையும் வெளியிடவில்லை. இது துரதிருஷ்ட வசமானது. ஏனெனில் சமுதாயம் சமநிலையில் இருக்கும்பொழுது வெளிவராமல் மறைந் திருக்கும் சில பின்நவீனத்துவ கூறுகள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் விளம்பர மயமான மேல்நாட்டுச் சூழலில் அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் பின் நவீனத்துவக் கூறுகள் சமுதாயம் கொந்தளிப்பான கட்டத்தை அடையும்பொழுது பீறிட்டு வெளிவருகின்றன. ரஷ்யா இன்று அத்தகைய நிலையில் உள்ளது. அறிவு ஜீவிகளின் எந்த ஒரு குறுக்கீடும் அவர்கள் விசுவாசத்தையும் சிந்தனை திசையையும் காட்டும் பரிசோதனையாகிறது. ரஷ்ய எல்லைக்குள் நுழைந்து இந்தப் பரி சோதனைக்கு ஜென்க்ஸ் தன்னை உட்படுத்திக் கொண்டதும் சாதாரணமாக 'தத்துவ முடிவு களைத்' தவிர்க்கும் பின் நவீனத்துவம் தனது 'முற்போக்கு ஜனநாயக' வேடத்தையும் நாசூக்கையும் உதிர்த்துவிட்டது. மேட்டிமைத் தனமாக 'பின்' என்ற அடைமொழியை விட்டுவிட்டு குழப்பமற்ற 'எதிர்ப்பு' என்ற அடைமொழியை சேர்த்துக் கொண்டது. சாதாரண பொதுவுடமை எதிர்ப்பையும், தனது நவீனத்துவ எதிர்ப்பையும் சரிசமமாக்கியது.

மற்ற எந்த நாட்டையும்விட நவீனத்துவத் தாலும், நவீனத்துவ மாதிரிகளாலும் மிகவும் தொல்லையடைந்த நாடு ரஷ்யா என்பது ஜென்க்ஸின் கருத்தாகும். ''சீனா தவிர்த்த வேறெந்த நாட்டையும் விட மிருகத்தனமான அதன் பொருள்முதல்வாதம் தெளிவாக முறைப்படுத்தப்பட்டிருந்தது. குறிக்கப்பட்ட பகுத்தறிவு வாதமும், எந்திரமயமான கருத்துக் களும் ஆழமாக ஊடுருவியிருந்தன.'' ரஷ்ய பண்பாட்டைப் பற்றி இத்தகைய ஆழமான சிந்தனை ஜென்க்ஸின் வரலாற்றுக் கடமை பற்றிய கருத்துக்களை மேலும் வலுப்படுத்தி யதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. காட்டுவாசி களை அவர்களது முட்டாள்தனமான பொருள் முதல்வாதத்திலிருந்து எப்படியாயினும் - சிலுவையிலோ தேவைப்பட்டால் வாள் முனையிலோ - மீட்டெடுக்கும் லட்சியதாகம் படைத்த ஸ்பானிய பாதிரியார் போலவே ரஷ்யாவை இருளிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் லட்சியதாகம் படைத்த பின் நவீனத்துவத்திற்கு யெல்த்சினின் டாங்குகள் மற்றுமோர் பயனுள்ள கருவியாக ஜென்க்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

கருதுகிறார். கடைசி சுப்ரீம் சோவியத் மீதான வன்முறைத் தாக்குதலையும் அவர் ''அக்டோபர் கலகம்'' அல்லது ''இரண்டாவது அக்டோபர் புரட்சி'' என்று அழைக்கும் எழுச்சி நசுக்கப்பட்டதையும், ''ரஷ்யா முழுவதும் உள்ள பிற்போக்கு நவீனத்துவவாதிகளுக்கு தங்களது கதை முடிந்துவிட்டது தெரியும். பின் நவீனத்துவ முறை இன்று பவனி வரத் தொடங்கிவிட்டது. மரணங்களின் மீது கால் பதித்து மரண ஊர்வலங்களை இடிக்கப்பட்ட கட்டடங்களால் அடையாளம் காட்டி உலா வருகிறது'' என்று மிரட்டலாக அறிவிக்கிறார். (நம் ஊர் அரைகுறை பின்நவீனத்துவ வாதிகளான அ. மார்க்ஸ் போன்றவர்களும் இப்படித்தான் மிரட்டப் பார்த்தனர் - மொழிபெயர்ப்பாளர்)

ஜென்க்ஸின் பித்தலாட்ட தத்துவ அரசியலில் நவீனத்துவம் என்றால் சோசலிசம், சோசலிசம் என்றால் அதிகார வர்க்கத்தின் மேலாண்மை, அதிகாரவர்க்க மேலாண்மை என்றால் பிற்போக்கு - பின் நவீனத்துவத்தின் மாபெரும் சிறப்புகளாக அவர்கள் இதுவரை பெருமை யடித்துக் கொண்டிருந்த பன்முக மதிப்புகள் வேறுபாடின்றி பிணைவு போன்ற மயிர்பிளக்கும் வாதங்கள் மற்றவர்களிடம் வெளிப்படை யாகவும் மென்மையாகவும் நடந்து கொள்ளுதல், மைய விலகல் தத்துவங்கள், கேலிகள், சுயகேலிகள், ஜென்க்ஸின் பங்களிப்பான அனைத்தும் தழுவிய தன்மை, இது அல்லது அது என்பதற்குப் பதிலாக இரண்டும் அதற்கு மேலும் என்ற கருத்துக்களெல்லாம் இன்று அடையாளம் தெரியாமல் மறைந்துவிட்டன.

அக்டோபர் துயரத்தை ஜென்க்ஸ் குத்தலாகக் கையாளும் விதத்திலிருந்து பின் நவீனத்துவ விமர்சகர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டிய பின் நவீனத்துவ தத்துவத்தின் ஆழமற்ற தன்மை சமுதாய நிகழ்வுகளை அறிவுபூர்வமாகப் புரிந்துகொள்வதை திட்டமிட்டு புறக்கணித்தல், அழகியலுக்கும் அரசியலுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறைத்துவிடப் பார்க்கும் ஆர்வம் ஆகிய கூறுகள் இன்று வெட்ட வெளிச்சமாகின்றன. ரஷ்யாவில் ஜென்க்ஸின் இந்த துணிச்சலான பாய்ச்சல் வேறொன்றையும் உணர்த்துகின்றது. பின் நவீனத்துவத்தின் மூலம் அப்பட்டமான வன்முறையைக் கண்டும் நம் உணர்வுகள் துடிக்காமல் மரத்துப்போகச் செய்வது மட்டுமல்லாமல், அவ்வன் முறையைப் பயன்படுத்தும் சக்திகளின் சுயரூபத்தைப் பற்றி கவலைப்படாமல், வன்முறையைப் பயன்படுத்துவதை மட்டும் மகிழ்ச்சியோடு அனுமதிக்கிறது. இறுதி சுப்ரீம் சோவியத்தின் தகர்ப்பிற்கு பின் உள்ள சக்திகளைப் புரிந்து கொள்வதற்கு அதற்கு இணையான கட்டடக்கலை ரீதியான, வரலாற்று ரீதியான எடுத்துக்காட்டுகளாக பெர்லின் நகரில் 1933 ஆம் ஆண்டு ரீச் ஸ்டாக் கொளுத்தப்பட்டதையும், சிலி நாட்டு சாண்டியாகோவில் 1973ஆம் ஆண்டு குடியரசுத்தலைவர் மாளிகை சுற்றி வளைக்கப் பட்டு, பீரங்கிகளால் தகர்க்கப்பட்டதையும் நினைவு கூறலாம். இந்த ஒப்புநோக்குடன் பிற்போக்கு நவீனத்துவத்திற்கு கட்டடக்கலை உவமையாக சிலி மற்றும் ரஷ்ய பின் நவீனத் துவவாதிகள் சித்திரவதைக்கும், கூட்டங் கூட்டமாகக் கொன்று குவிப்பதற்குமாக பயன்படுத்திய அரங்கத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நான் ஜென்க்ஸை இவ்வாறு கடுமையாக விமர்சிப்பதை சிலர் ஜென்க்ஸிக்கு ஒருவேளை ரஷ்ய அரசியல் பற்றிய அறிவில்லாதிருக்கலாம் என்ற காரணத்திற்காக மறுக்கலாம். (கம்யூனிச எதிர்ப்பாளர் ருஷ்டோக்கியை நவீனத்துவவாதி என்று அழைப்பதற்கும், அரசியலமைப்புச் சட்டத்தை காப்பாற்ற முயல்வதை 'கலகம்' என்று முத்திரை குத்துவதற்கும் ஒருவர் அறிவிலியாகத்தான் இருக்க வேண்டும்.) ஆனால் கட்டடக்கலையின் உலகப் புகழ் பெற்ற நிபுணரான ஜென்க்ஸ் எவ்வாறு சுப்ரீம் சோவியத்தை தகர்ப்பதற்கான ஆணை பிறப் பிக்கப்பட்ட இடத்தின் கட்டடக்கலை குறியீட்டைக் காணாதிருக்க இயலும்? உலகம் முழுவதும் லட்சக்கணக்கானவருக்கு நன்கு தெரிந்த ரஷ்ய - ஜெர்மன் கலை வடிவிலான க்ரெம்ளின் மாளிகையாயிற்றே! யெல்த்சின் கும்பலால் பாதுகாக்கப்படும் புதிய ரஷ்ய முதலாளித்துவ கும்பலுக்காக தற்பொழுது அந்த நிலப்பிரபுத்துவ கட்டட வடிவம் போன்ற சிறிய நினைவுச் சின்னங்கள் ரஷ்ய வீதிகளில் விற்கப்படுகின்றன. ஜென்க்ஸின் வகைப் படுத்தலின்படி, கடைசி சுப்ரீம் சோவியத்தும் அதன் கட்டடமும் நவீன காலத்தைக் குறித்தன



படிப்பகம்

www.padippakam.com

என்றால், பின்பு யெல்த்சினின் க்ரெம்ளின் மாளிகை எதன் சமூக - வரலாற்றுக் குறியீடாக வருகிறது? இந்த கும்பலின் பின்னேயுள்ள வர்க்கத்தையா, அதன் கட்டடக்கலை விருப்பத் தையா?

கட்டடக்கலை கனவுகள் போன்ற சிறிய விஷயங்களை ஒருபுறம் ஒதுக்கிவைப்போம். அக்டோபர் கலகம் இந்த மறுசீரமைப்பு கும்பலின் பாசிச உருவத்தை முதல் முறையாக அம்பலப்படுத்தியது. இனப் படுகொலைப் போராக அது செசென்யாவில் வெடித்தபோது, அதன் சுயரூபம் வெட்ட வெளிச்சமாகியது. ஆலைத் தொழிலாளிகளை உடலாலும் உள்ளத் தாலும் ஒடுக்கி வைத்தல், அரசியல் எதிரிகளை துணை ராணுவ கும்பல்களை ஏவித்தாக்குதல் ஆகியவற்றை இக்கலகம் தொடங்கிவைத்தது. இதன் மூலம் நாட்டை கொள்ளையடிப்ப தற்கும், சிறிய ஆளும் கும்பலின் கையில் நாட்டின் பொதுச் சொத்துக்களை சட்டவிரோத மாக குவிப்பதற்கும், ஏகபோக நிதி-தொழில் மூலதனம் உருவாவதற்கும் வழி வகுக்கப் பட்டது. பாசிச அரசியலின் செவ்வியல் வடிவங்கள் இவை. ஜென்க்ஸ் இவற்றை அரசியல் வடிவங்களாக காட்டுகிறார். ''பழைய பாசிசத்தின் மேல் பின் நவீனத்துவத்திற்கு உள்ளதாகக் கூறப்படும் அருவருப்பை தீவிரமாக கேள்விக்குள்ளாக்க வேண்டிய தில்லை என்று பலர் கூறிய கருத்துக்களை இன்று ஜென்க்ஸின் புதிய கருத்துக்களோடு சேர்த்து மீளாராய்ச்சி செய்ய வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

இதற்கு மாறாக யெல்த்சினின் ரஷ்யாவின் சமூக யதார்த்தத்தைக் கலை வடிவில் கொண்டுவரும் ஓவியர்களுக்கு எடுத்துக்காட்டாக, ஜென்னடி ஜிவோட்டோ'வை குறிப்பிடலாம். முன்னோடிப் பாரம்பரியத்திலும் (அவன்த்-கார்ட்) மிகை யதார்த்த வடிவத்திலும் கலகத்திற்கு முன்பு வரை ஓவியங்கள் தீட்டிவந்த ஜிவோட்டோவ் இப்பொழுது ஒரு அரசியல் கலைஞராகி விட்டார். ஜெர்மானிய உணர்வு வெளிப்பாட்டு வடிவில் (எக்ஸ்பிரஸ்ஸனிசம்) இந்த ஓவியர்கள் கலகத்திற்குப் பிந்திய ரஷ்ய முதலாளித்துவ கும்பலை முழுமையும் விபச்சாரமயமாகிப் போன, ஊழல் மயமான, சமூகவிரோத கொள்ளைக் கும்பலும், அரசு எந்திரமும் ஒன்றோடு ஒன்றாக பின்னிப் பிணைந்து மக்கள் மீது மிருகத்தனமாக வன்முறையைப் பயன் படுத்துகின்ற சமூகமாகச் சித்தரிக்கிறார்.

இனி, ரஷ்யப் பின்நவீனத்துவத்திற்கும், அந்நாட்டின் அண்மைக்கால சமூக பொருளியல் மாற்றங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை அலசப் போகிறேன். இவை பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன அல்லது மேலோட்ட மாகவே குறிப்பிடப்படுகின்றன. ரஷ்ய மீட்சி மற்றும் அதன் சமூக முரண்பாடுகளின் நடுவே வைத்து பின்நவீனத்துவத்தைப் பார்க்கும் பொழுதுதான் அதன் சுய புராணத்தை தோலுரித்து ஏன் அது இன்றைய ரஷ்ய புதிய தாராளவாத அறிவு ஜீவிகளின் பண்பாட்டு அரசியலில் மேலும் மேலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். ரஷ்யா மற்றும் சோவியத் பண் பாட்டின் முக்கிய பாரம்பரியமாக கலை இலக்கியங்களும் எதார்த்தவாதமும் சமூக உணர்வும் சமூக வெளிப்பாடும் நிரம்பி யிருந்தன. இதனை உடைத்துக் கொண்டு வருவதில் எவ்வாறு பின் நவீனத்துவம் ஆர்வம் காட்டுகிறது என்பது அதனைப் புரிந்துகொள்ள உதவும் முதற்படியாகும். இனி வரும் பத்தி களில், ''குறியீட்டில் மீண்டும் நுழைதல்'' தொகுதியை பயன்படுத்தப் போகிறேன்.

இத்தொகுதியின் மரபு எதிர்ப்புக் கருத்துக்களை நெருங்கிய தொடர்புடைய இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ''ஆஸ்ச்விஸிற்குப் பின் கலை'' என்ற அடோர்நோவின் ஆய்வை மையமாகக் கொண்ட ''குலாக் கருத்துக்கள்'' என்று அழைக்கப்படத் தகுந்த பிரிவு இதில் முதலாவதாகும். ஸ்டாலின் காலத்திய பயங் கரங்களைப்பற்றி மறுசீரமைப்புக்குப்பின் வெளிவந்த எண்ணற்ற நூல்களின் அடிப் படையில் சோவியத் கலைஞர்கள் மனிதனின் நிலமைகளைப்பற்றி பொதுவாகவும் சோவியத் சமூகத்தைப்பற்றி குறிப்பாகவும் மீளாய்வு செய்யத் தொடங்கினர். இந்த மரபு சோவியத் மற்றும் ரஷ்ய செவ்வியல் பாரம்பரியத்தின் அடிப்படையிலிருந்து வந்ததே ஆயினும், பின்பு அந்த மரபை காலத்திற்கு ஒவ்வாத தென்றும் போதுமானதல்லவென்றும் குறை கூறித் தூக்கியெறிந்தது. இரண்டாவது பிரிவோ ''மாபெரும் நாட்டுப்பற்று மிக்க போர்'', ''சோவியத் மனிதன்'', ''வர்க்கப் போராட்டம்'', ''மக்கள்'' போன்ற பொதுமைக் (மொத்தத்துவ)



படிப்பகம்

www.padippakam.com

கருத்துக்களை உருவாக்குவதன் மூலம் பழங்கலை பண்பாட்டு அடையாளங்களைத் தருவதற்கு முயல்கிறது என்று எதார்த்தவாத மரபைத் தாக்குகிறது. ஆனால், எதார்த்தத்தின் மீது, அதாவது சமுதாயத்தின் மீது, ரஷ்ய மற்றும் சோவியத் இலக்கியங்கள் வழிவழியாக அக்கறை கொண்டிருந்தது தவறான வழிகாட்டல், ரஷ்யப் பண்பாட்டுக்கும் சமுதாயத்திற்கும் அது நல்லதல்ல என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அண்மைக்காலங்களில் எதார்த்தவாத மரபு செயல்பட்ட விதத்தை கூர்ந்து கவனித்தால், நாம் மேற்கூறிய இரு பின் நவீனத்துவ பிரிவினரும் அதிலிருந்து உடைத்துக்கொண்டு சென்றதற்கு நிலையான காரணங்கள் எதையும் காண இயலாது. பின் நவீனத்துவவாதிகளே ஏற்றுக்கொள்வதுபோல், அவர்களுக்கு உண்மைகளை வெட்ட வெளிச்சமாக்கிய அனைத்து இலக்கியப் படைப்புகளும் ரஷ்ய இலக்கியத்தின் எதார்த்தவாத மரபை - குறிப்பாக நெடுங்கதை மரபைச் சேர்ந்தவையே. மனித வரலாற்றிலேயே மிகக் கொடுமையான அனுபவங்களைப் பதிவுசெய்த இந்தப் படைப்புகள் நமது விமர்சகர்களிடமிருந்து முழுமையான செல்வாக்கை செலுத்தியிருப்பதும், தங்களது சமுதாயத்தை நன்கு வளர்த்துக் கொள்ள உதவிய ஒளியாக விளங்கியதும் உண்மை என்றால், பின்பு அதை எதிர்ப்பதற்கு பதில் இவர்கள் எதார்த்த வடிவத்தின் நீடித்திருக்கும் சக்தியைப் பாராட்டி புதிய ஜன நாயகப் பண்பாட்டிற்கு அதனைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். உண்மையில் எதார்த்த வாதக் கலை மனிதாபிமான, தாராளவாத விழுமியங்களை (மதிப்பீடுகளை) தனித் தன்மையுடன் பேரளவில் பரப்புவதில் தனக்குள்ள ஒப்பற்ற அழகியல் திறமையை நிரூபித்துள்ளது. புகழ்பெற்ற மரபு வழி எழுத்தாளர்களான வாசிலி க்ரோஸ்மேன், சொல்ஸினீட்சன், ரைபாகாவ், டுபின்ட்சேவ் போன்றவர்களின் எழுத்துக்கள் நமது விமர்சகர்களின் சிந்தனையை செழுமைப் படுத்தியது மட்டுமல்லாமல், ரஷ்ய மக்கள் திரள்மீதும் பெரும் செல்வாக்குச் செலுத்தியதன் மூலம் கோர்ப்பச்சேவின் சீர்திருத்தங்களுக்கு மக்கள் ஆதரவைப் பெற்றுத்தந்தன. இப்பொழுது நாம் தவிர்க்க முடியாமல் இன்னொரு கேள்வியும் கேட்டாக வேண்டும். இந்த சாதனையில் கால் தூசியையாவது பின்நவீனத்துவ கலையால் சாதிக்க முடிந்ததா? 'காபாகோவின்' 'கொம்யூனல்காஸ்', பெட்ருஷேவ் ஸ்கலாசின் ''கொடிய உரைநடை'' 'டிராகோ மோஸ் சென்கோ'வின் ''நெடுங்கவிதை'' ஆகியவை மக்கள் திரளை சமுதாயப் பணிக்குத் தூண்டு வதாகவோ, அவர்களது மன சாட்சியையும் அரசியல் உணர்வுகளையும் தட்டி எழுப்பு வதற்காகவாவது செய்ய இயலுமா? ஜனநாயக வடிவமுடைய யதார்த்தவாத கலையால் மட்டுமே இதைச் சாதிக்க முடியும், சாதித்தது. ரஷ்யாவின் பின்நவீனத்துவத்திற்கோ ஜனநாயகம் என்பதே ஒத்துவராது. மேலை மரபிலிருந்து கடன் வாங்கிய நவீனத்துவ எதிர்ப்புடன் கடுமையான எதார்த்தவாத எதிர்ப்பையும் சேர்த்ததே ரஷ்ய பின் நவீனத்துவ அழகியல் மற்றும் கருத்தியலின் சிறப்புத் தன்மையாகும்.

மரபுவாதிகளின் மீதான இந்தக் கண்மூடித் தனமான தாக்குதலுக்கு உண்மையான காரணம் அவர்களது யதார்த்தவாத நெடுங்கதையின் அழகியல் குறைபாடு அல்ல. இந்த இலக் கியங்களின் உதவியோடு சாதிக்கப்பட்ட சமூக மாற்றங்களின் உண்மைநிலை அவ்விலக்கி யங்களின் தாராளவாத மனித நேயத்திற்கு எதிராக உள்ளதால் ஏற்படும் சங்கடமே. கட்சி பழமைவாதிகளை எதிர்த்துநின்ற கம்யூனிச எதிர்ப்புக் குறுங்குழு அதன் மறுசீரமைப்புக் காலங்களில் *(1985 - 1991)* இந்தக் கருத்தி யலையே தனது ஆஸ்தான கருத்தியலாகப் பயன்படுத்தியது. இந்தக் கருத்தை கோர்ப்ப சேவ் சுருக்கமாக பொருள் முதல்வாத, வர்க்கம் சார்ந்த புரிதல்களுக்கு அப்பாற்பட்ட, அதற்கு மாறான 'பொதுவான மனித விழுமியங்களின் முதன்மை' என்ற முழக்கத்தின் மூலம் குறிப் பிட்டார். 1989 இல் பழைய ஆட்சியாளர்களை எதிர்த்து, பொதுமக்களின் லட்சியவாதியினர் போராடிய அதே கொடியின்கீழ்தான், 1989 இல் முதலாளித்துவ சார்பு கும்பல் தாராளவாத அறிவு ஜீவிகளுடன் கூட்டாக நின்று அரசு அதிகார வர்க்கத்தை, சர்வாதிகாரத்தை எதிர்த்தது. இந்த அப்பாவித்தனமான ஒத்த தன்மை உண்மையில் ஒருமுறை மட்டும் நிகழ்ந்த விபத்தல்ல.

''சாதாரண மனித மதிப்பீடுகள்' என்று பசுமை யான, தூய எளிமையான களத்தில் நின்று கொண்டு ஸ்டாலின் குற்றங்கள், அதிகாரி



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கத்தின் அநியாயங்கள் ஆகியவற்றை விவரிக்கும் எதிர்ப்புணர்வுப் பண்பாடு மொத்தமும் கோர்ப்பச்சேவின் தாராளவாத சீர்திருத்தங்களுக்கு மிகப் பொருத்தமாய் இருந்தது. இதன் அடிப்படைகளை கேள்வி கேட்கவோ, அதன் எதிர்கால அரசியல், சமூக விளைவுகளை உணர்ந்துகொள்ளவோ திறனற்ற, அரசியல் அனுபவமோ அரசியல் அடையாளமோகூட இதுவரை இல்லாத மக்கள் திரள் இந்த நீதி போதனைகளை எளிதில் ஜீரணித்தது. ரஷ்ய தாராளவாத அறிவு ஜீவிகளுக்கோ இது அவர்கள் தெய்வீக நிலைக்கு உயர்ந்த தருணம். ரஷ்ய படைப்பாளி அறிவுஜீவிகள் தாம் அனைத்து சமூக வர்க்கங்களுக்கும் அப்பாற்பட்ட உயர்ந்த நிலையை எட்டிவிட்டதாக ஒட்டுமொத்த ரஷ்ய சமூகத்தின் மனசாட்சியாக தாங்கள் மாறிவிட்டதாகவும் அறிவித்துக் கொண்டனர். ஆனால், இந்த தாராளவாத கோலாகலங்களெல்லாம் கொஞ்ச நாட்களே நிலைத்தன. 1990 க்குப்பின் உண்மையான வரலாற்றுச்சக்திகளான உழைக்கும் வர்க்கமும், புதிய முதலாளித்துவ வர்க்கமும் அரசியல் களத்தில் குதித்த பின், அறிவுஜீவிக் கூட்டத்தால் இரண்டில் ஏதாவது ஒன்றைத்தான் பின்தொடர முடியும் என்ற கட்டாய நிலை ஏற்பட்டது. அனைவருக்கும் பொதுவான நலன்களின் காவலனாகத் தன்னை இனியும் காட்டிக் கொள்ள இயலவில்லை.

அக்டோபர் கலகத்தின் பொழுது உண்மை வெளிப்பட்டது. அண்மைக்கால வரலாற்றில் அறிவுஜீவிகள் கொள்கையளவில் இதுபோன்ற ஒரு அந்தர்பல்டி அடித்ததை கண்டிருக்கவே முடியாது எனலாம். அக்டோபர் நிகழ்ச்சிகளை கூர்ந்து கவனித்து வந்த போரிஸ் காகர்லிட்ஸ்கி குறிப்பிடுகிறார்.

''பிரபல செய்தித் தாள்களிலும் பத்திரிகைகளிலும் மக்களுக்கு எதிரான அசிங்கமான பிரச்சாரங்களும் ரத்தவெறி பிடித்த அறைகூவல்களும் நிறைந்திருந்தன. ஒரு காலத்தில் ''தூசி படிந்த ஹெல்மெட் அணிந்த'' அரசு அதிகாரிகளை பெருமிதமாக குறிப்பிட்ட கவிஞரும் மனிதாபிமான ''புலாட் ஒஹுஜாவா'' கூட அக்டோபர் 4 ஆம் நாள் துப்பாக்கிச் சூடு தமக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்ததாகவும் ஆயுதமற்ற மக்கள் மீது தனக்குத் துளியும் இரக்கம் ஏற்படவில்லையென்றும் விவரித்தார்.

உலகு தழுவிய மனிதநேயக் கடமையாற்றும் தாராளவாத மனிதாபிமானம், சாதாரண மனித மதிப்பீடுகளைப் பிரதிபலித்தல் போன்ற கருத்துக்களின் பணி முடிந்து போனது. அவை இடத்தைக் காலி செய்தாக வேண்டும். ரஷ்ய அறிவுஜீவிகளின் இளைய தலைமுறைப் பிரதிநிதி ஒருவரது மேற்கோளின்மூலம் 'அறிவு ஜீவிகளின் தீய மரபிலிருந்து' கருத்தியல் முறிவு ஏற்படும் தருணத்தை காகர்லிட்ஸ்கி படம் பிடித்துக் காட்டுகிறார்.

பட்டினியால் மடியும் ஒரு பிச்சைக்காரப் பெண்ணைப் பார்த்து நவநாகரீகப் பத்திரிக்கையாளரான வெரோனிகா குட்சில்லோ எழுதுகிறார் ''மக்களின் முன் அறிவுஜீவிகளின் குற்றங்களாகக் காட்டப்படும் இந்த ஒப்புமைகள் அனைத்தும் எனக்கு எரிச்சலூட்டுகின்றன. இந்தப் பரிதாபகரமான ஒன்றையும் (பிச்சைக்காரியையும்) ஒரு வேடிக்கையான மிருகத்தைக் காண்பது போலவே காண்கிறேன். இதில் எனக்குக் குற்ற உணர்வு எதுவும் ஏற்படவில்லை. நானோ எனது நண்பர்களோ அவ்வளவு கீழே ஒருபொழுதும் விழ மாட்டோம் என்று நீங்கள் நிச்சயமாக நம்பலாம்''.

ரஷ்ய தாராளவாதத்தின் மனித நேயமும் அதற்கு உகந்த இலக்கிய வடிவமான எதார்த்தவாத நெடுங்கதை வடிவமும் யெல்த்சின் ஆட்சியில் வெளிப்படையான முதலாளித்துவ மீட்சி தொடங்கியதிலிருந்து நெருக்கடிக்கு உள்ளாயின. வர்க்கப் போரின் முதல்கட்ட மோதல் தொடங்கி யெல்த்சினின் கலகம், ஓஸ்டாண்டிகோ படுகொலைகள், ரத்தவெள்ளத்தில் தள்ளப்பட்ட கடைசி சுப்ரீம் சோவியத் ஆகியவற்றோடு அவையும் முடிவுக்கு வந்தன. அன்றிலிருந்து மீட்சி கட்டுப்பாடற்று முன்னேறத் தொடங்கியது. இரக்கமற்ற சக்திவாய்ந்த புதிய முதலாளித்துவ வர்க்கம் உருவாகியது. இந்தக் கட்டத்தில்தான் பண்பாட்டு அரங்கில் ரஷ்யப் பின் நவீனத்துவம் முன்னணிக்கு வந்தது. புதிய தாராளவாதத்திற்கு இணையான பண்பாட்டு வடிவமாக நிறுவனமயமாக்கப்பட்டது.

வரலாற்றில் இணையான காட்சிகள் தட்டுத் தடுமாறி வருகின்றன. அக்டோபர் 1993 இல்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி வர்க்க மறுஎழுச்சி எதுவும் ஏற்பட வில்லை. அரசியல் ரீதியாக முதலாளித்துவ சார்பு அதிகார வர்க்கத்தின் பல்வேறு குழுக் களுக்கும், அரும்பத் தொடங்கிய முதலாளித் துவ வர்க்கத்திற்கும் இடையே மீட்சியை முன்னெடுத்துச் செல்லும் வழிபற்றிய போராட் டமே அது. தங்களது சொந்தக் கொடியின்கீழ் போராட்டத்தில் குதிக்கும் வலிமை அன்று புதிய முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இல்லை, தொழிலாளர்களுக்கும் இல்லை. ஆயினும் மின்னல் காட்சிபோல, ''பொதுவான மனித நேய மதிப்பீடுகளின்'' பின்னே மறைந்திருந்த சமூக எதிர்ப்புணர்வுகளின் ஆழம் 1848 ஜுன் மாதம் பாரிசில் வெளிப்பட்டது போலவே மீண்டும் மறைக்க இயலாதவாறு அக்டோபர் சம்பவங்களால் மாஸ்கோவில் வெளியானது. பல்வேறு இலக்கியக் கோட்பாட்டாளர்கள் 1848 இல் பிரெஞ்சு இலக்கியத்தில் அதன் கடந்தகால இலக்கிய வடிவங்கள் அனைத்தும் சமரசம் செய்து கொண்டதால் ஏற்பட்டதாகக் கூறும் ''பிரதிநிதித்துவ நெருக்கடி'' போன்ற ஒன்று தாராளவாத மனிதாபிமானத்தின் மறைவால் ரஷ்யாவிலும் வெடித்தது. மக்கள் தொடர் பிற்காக எழுதும் சாத்தியக்கூறே அன்று 'இயற்கையான' அல்லது 'பொதுவான'' உண்மைகளாக அறிவொளிவாதத்தால் அறிவிக் கப்பட்டு, நல்ல சமுதாயத்தின் அடிப்படை விதிகளாக பிரெஞ்சுப் புரட்சியால் அங்கீகரிக் கப்பட்ட கருத்துக்களைச் சார்ந்தே இருந்தது. ஆனால் 1848 இல் பாட்டாளி வர்க்க எழுச்சியை முதலாளித்துவ வர்க்கம் கொடூரமாக அடக்கிய பொழுது இந்த வீதிகளின் முகமூடி கிழிந்து அவை வர்க்கம் சார்ந்த தத்துவங்களே என்பது வெட்ட வெளிச்சமாகியது. அதன் விளைவாக நிறுவனமயமாக்கப்பட்ட இலக்கியத் துறைக்கு எழுந்த நெருக்கடியை ரோலாண்ட் பார்த் ''பூஜ்ய மட்டத்தில் எழுதுதல்'' என்ற தத்துவ மாக்கினார். எழுத்தாளர்கள் இனி ''ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும்'', அல்லது ''மனித குலத்திற்கும்'' எழுதுவதாக காட்டிக்கொள்ள முடியாது. ஏனென்றால் அச்சொற்களே அர்த்தமிழந்து விட்டன. அதனால் எழுதுவதன் நோக்கமும், முடிவும் எழுத்தே என்று தன்னுள்ளேயே ஒடுங்குகிறது. எழுத்தாளர் எதார்த்தத்தை மையமாகக் கொள்ளாமல் அதிலிருந்து விலகி மொழிநடையையே எழுத்தின் சரியான, ஒரே முடிவாகக் கொள்கிறார்.

ரஷ்ய நவீனக் கலையிலும் இதேபோன்ற மாற்றத்தையும், தத்துவத்தையும் இன்று காண்கிறோம். எதார்த்தவாதிகளையும், சமூக உண்மை நிலை பற்றிய அதன் அக்கறை களையும் ஏகமனதாகத் தூக்கி எறிந்ததை நான் முன்பே குறிப்பிட்டேன். உண்மையில், இன்றைய, புதிய, எதார்த்தவாத எதிர்ப்பு மற்றும் மொழி ஆராதனை வடிவங்களை அவை உண்மையான சமூகச் சூழலிலிருந்து விலகிச் செல்லும் தன்மைகளிலிருந்தே வளப் படுத்தலாம். 'அரூபவிலகள்', 'சுய குறிப்பு டைய மொழி விளையாட்டுக்கள்', 'வெற் றெழுத்துக்கள்' ஆகியவை அவற்றில் சில. ஆனால் பிரெஞ்சு எழுத்தாளர்களுக்கும், ரஷ்ய எழுத்தாளர்களுக்கும் இடையேயான இந்த வரலாற்று ஒற்றுமையில் ஒரு மிகப்பெரிய வேறுபாடு உண்டு. பிரெஞ்சு எழுத்தாளர் களுக்கு உண்மையிலேயே அது ஒரு புதிய அனுபவம். வரலாற்றுத் திருப்பு முனையால் தண்டிக்கப்பட்டவர்கள், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை எச்சரிக்கை செய்யும் கடந்த கால அனுபவம் எதுவும் பெற்றிருக்கவில்லை. அவர்களது அதிர்ச்சிகள் பெரும்பாலும் உண்மையான, நம்பிக்கையிழப்புகள், நியாய மானவை. அதுவரை மறைத்து வைக்கப் பட்டிருந்த, சமூக எதார்த்தத்தின் அரசியல் - சமூக அடிப்படைக் காரணிகளை உணர்ந்து கொள்ளும் வேதனையான தேடுதல் அனுபவம். ரஷ்ய அனுபவமோ இதற்கு மாறானது. ரஷ்ய மீட்சி என்ற மாபெரும் வரலாற்று நகைச்சுவை நாடகம், அதன் படைப்பாளி அறிவு ஜீவி களுக்கு இந்த உண்மையான வரலாற்று அனுபவத்தை மறுக்கிறது. அவர்களது சக பிரெஞ்சுக்காரர்களைப் போலல்லாமல், 'பொதுவான மனித நேயம்' என்ற கொடியின் கீழே உண்மையில் மறைந்திருந்தது. என்ன என்பது ரஷ்ய அறிவு ஜீவிகளுக்குத் தெரிந்தே யிருந்தது, கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இந்த தீய நம்பிக்கையின் எடுத்துக்காட்டாக அலட்சியமான வெளிப்படைத் தன்மையுள்ள ஒரு மேற்கோளைக் காண்போம்.

''தாராளவாத மனிதநேய'' ஆதரவாளரும், 'புக்கர் பரிசு' பெற்றவரும், புகழ்பெற்ற



படிப்பகம்

www.padippakam.com

'ஓசோனிக்' பத்திரிக்கையின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவருமான ''அலெக்சாண்டர் டெரக்கோவ்'' அழிந்துவரும் நூலகங்களுக்கு ஆதரவாக 1992 இல் எழுதிய ஒரு கட்டுரையில் சோசலிசத்திற்கு முடிவுகட்ட முடிவெடுத்துவிட்ட கட்சியின்இடைநிலைத்தலைவர்களுக்கும் தந்தை நாட்டின் சிந்தித்துணரும் திறனுள்ள மகன்களுக்கும் (அதாவது படைப்பாளி அறிவு ஜீவிகளுக்கும்) இடையே உருவாகியுள்ள ஒரு புதிய புனித ஒப்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். புதிய ஆட்சியாளர்களுக்கு ஆதரவு தந்தது மக்கள் திரளல்ல, நூலகங்களே என்று அவர்களை எச்சரிக்கிறார்.

''புதிய புனித ஒப்பந்தத்தின் பொருள் அமைதியானதும், எளிமையானதும் ஆகும். உங்களது லட்சங்களையும், மாளிகைகளையும், உல்லாசப் படகுகளையும், அதிகாரத்தையும், தங்கக் கழிப்பறைகளையும், தாராளமாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், நூலகங்களின் பச்சை விளக்குகளை, இசை அரங்குகளை, கலைகளின் சுதந்திரத்தை, அருங்காட்சியகங்களின் அமைதியை நீங்கள் பாதுகாக்க வேண்டும். பணமும் அதிகாரமும் உங்களுடையது. முடிவற்ற ஆன்மா, நீதி, கல்வி இவை நூலகத்திற்கு. முதலாளித்துவ வர்க்கத்திற்கு வெற்றி தேடித் தந்த புதிய ''புனித ஒப்பந்தம்'' இது தான். இதுவரை இது ஒரு தரப்பில் மட்டுமே மதிக்கப்படுகிறது.''

அறிவுஜீவிகள் வரலாற்றிலிருந்து பாடம் கற்கும் திறனும் ஆர்வமும் உடையவர்களாக இருந்திருந்தால் இந்த சோக முடிவை முன் கூட்டியே எதிர்பார்த்திருக்க முடியும். 1990 ஆம் ஆண்டு சீர்திருத்தங்களால் உதிரிகளாகவும், ஒட்டாண்டிகளாகவும் மாற்றப்பட்டுவிட்ட ரஷ்ய எழுத்தாளர்களும், அறிவு ஜீவிகளும் இன்று அவல நகைச்சுவை நிலைக்குத் தள்ளப்பட்டு, பிரெஞ்சு எழுத்தாளர்களைப்பற்றி சாத்ரே எழுதியுள்ளதை நினைத்துப் பார்க்கின்றனர். சாத்ரே கூறினார், ''எழுத்தாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றி முழக்கம் அவர்களது வாழ்நிலையையே மேலிருந்து கீழ்வரை உலுக்கியெடுத்ததோடு, இலக்கியத்தின் சாரத்தையே கேள்விக்குள்ளாக்கியது. அவர்களது கடும் முயற்சியால் கிட்டிய பலன், தங்களது அழிவை தாங்களே தொடங்கி வைத்ததுதான் எனலாம்.

புதிய ''புனித ஒப்பந்தம்'' நடைமுறைக்கு வரவில்லை. ஆன்மீக ஒளி புகைந்து அணைந்து போனது. முடிவற்ற ஆன்மா 1990 அக்டோபரில் இரண்டே நாட்களுக்குள் முடிந்து போனது. தாராளவாத அறிவுஜீவிகள் மண்ணில் புதைந்து பின் புதிய தாராளவாதிகளாக மறுபிறப் பெடுத்தனர். இப்புதிய தாராளவாத அறிவுஜிவிகளுக்கு அவர்களை முன்பு கருத்தியல் ரீதியாகக் கவர்ந்த தாராளவாத மனிதநேயம் எவ்வாறு தொல்லையாகிப் போனதோ அதேபோல், எல்லா வகை எதார்த்தவாதங்களும் அழகியல் ரீதியில் தொல்லையாகிப் போயின. ''குறியீட்டுக்குள் மீண்டும் நுழைதல் ''தொகுப்பில் பேராசிரியர் பெர்ரி குறிப்பிட்டுள்ளதுபோல் இன்று, ''சுவீகரித்துள்ள கருத்தியல் வாதங்கள் வெற்றுத்தன்மையை வெட்டவெளிச்சமாக்கும் கலையும் நவீனத்துவ முன்னோடிகள் முடிக்காமல் விட்டுச் சென்றுள்ள பணிகளை முடித்து வைக்க ஏற்புடைய கருத்தியலும்'' அவர்களது தேவைகளாகும். ஜென்க்ஸின் விறுவிறுப்பான பின் நவீனத்துவம் அவ்விரண்டையுமே அள்ளித் தருகிறது. பின்நவீனத்துவ அழகியலும் கருத்தியலும் பழைய அழகியலையும் கருத்தியலையும் புதைப்பதில் மீண்டும் மீண்டும் தோல்வியடைவதால் வலிமையான வேறு மருந்துகளைப் பயன்படுத்த ஜென்க்ஸின் பின் நவீனத்துவம் தாராளமாக அனுமதிக்கிறது.

**பின் குறிப்பு**

இந்தக்கட்டுரையை எழுதி மூன்றாண்டுகள் கழிந்த பின், ரஷ்யப் பின்நவீனத்துவம் கிட்டத்தட்ட இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. இதற்கு ரஷ்ய பின்நவீனத்துவத்தின் ஆன்மீக வறுமையை விட ரஷ்ய படித்த வர்க்கத்தவரின் அரசியல் சார்பையும் கருத்தியல் பார்வையையும் மாற்றிய ரஷ்ய சமூகப் பொருளாதாரத்தின் விரைவான சீரழிவே முக்கிய காரணம் எனலாம்.

1990-ஆம் ஆண்டிலிருந்து ரஷ்ய அரசின் வரவு செலவு (பட்ஜெட்) பத்து மடங்கு சுருங்கி நியூயார்க் நகர வரவு செலவை விட குறைந்து போய்விட்டது. நவீன ஆலை உற்பத்திகள்



படிப்பகம்

www.padippakam.com

ரஷ்யாவில் இன்று அநேகமாக துடைத் தெறியப்பட்டு விட்டன. உயர் தொழில் நுட்ப ஏற்றுமதிகள் இன்று அதன் மொத்த ஏற்று மதியில் ஒரு விழுக்காடே. ரஷ்ய பொருளா தாரம் இன்று கச்சாப் பொருட்கள் ஏற்று மதியையே நம்பியுள்ளது. ஏகாதிபத்திய மையத்திற்கும் நவகாலனீய விளிம்பு நாடு களுக்கும் இடையிலான வேலைப் பிரிவினையில் இன்று சுருங்கி வரும் ரஷ்ய தொழிலாளர் பட்டாளத்தின் பெரும் பகுதியினர் குறைந்த மதிப்பீட்டையே உற்பத்தி செய்யும் துறைகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் ரஷ்யர்கள் 40 விழுக்காடாகும். நாற்பது லட்சம் ரஷ்யக் குழந்தைகள் வீடற்றவர்களாகி உள்ளனர். 1990-ஆம் ஆண்டின் பிறப்பு வீதம் இன்று பாதியாய்க் குறைந்து, இறப்பு விகிதமோ பாதி அதிகரித்தும் மக்கள் தொகை விரைவில் அருகிப் போகும் அபாயத்தில் ரஷ்யா உள்ளது.

தேசிய கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்டுள்ள சரிவு இவற்றிற்குச் சற்றும் குறைந்ததல்ல பாலர் பள்ளிகள் 27 விழுக்காடு குறைந்ததுடன், அதில் படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையிலும் 43 விழுக்காடு சரிவு ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 இலட்சம் குழந்தைகள் பள்ளிக்கும் செல்லாமல் உள்ளனர். புத்தக வெளியீடு 400 விழுக்காடு குறைந்துள்ளது. நாடக, கலை அரங்குகளுக்கு வருவோரின் எண்ணிக்கை சரிபாதியாகக் குறைந்து விட்டது. அறிவியல் ஆய்விற்கு நாட்டு மொத்த வருமானத்திலிருந்து ஒதுக்கப்படும் தொகை போர்ச்சுகல், சிலி போன்ற நாடுகள் ஒதுக்கும் தொகையைவிடக் கூட 0.32 விழுக்காடு குறைவாகும். பொருளா தாரம் தனியார் மயமாக்கப்பட்டதால் உழைக் கும் வர்க்கமும், விவசாயிகளும் ஒட்டாண்டிக ளானதற்குச் சற்றும் குறைவில்லாமல் அரசு மான்யங்கள் ரத்து செய்யப்பட்டதால் படித்த வர்க்கமும் இன்று பஞ்சத்தில் வாடுகிறது. ரஷ்ய முதலாளித்துவம் என்ற வீரம் செறிந்த புதிய உலகத்தின் தேவைகளை விட எண்ணிக்கையில் மித மிஞ்சிப் போய்விட்ட அறிவு ஜீவிகள், இன்று பெருந்திரளாக பாட்டாளி மயமாக்கப் படுகின்றனர், உதிரிகளாக்கப்படுகின்றனர் என்று கூட சொல்லலாம். முன்னாள் இயற்பியலாளர்களும், கணித மேதைகளும், மொழியியல் வல்லுனர்களும், வரலாற்று அறிஞர்களும், எழுத்தாளர்களும், மருத்துவர் களும் இன்று சிறு வியாபாரிகளாக மாறி யுள்ளனர். 'கலை அரங்குகளில் அமைதியை யும்'' நூலகங்களின் பச்சை விளக்குகளையும்' இழந்து விட்டு இன்று சந்தடி மிகுந்த கடை வீதிகளில் தாங்கள் விருப்பத்திற்கெதிராக மக்களோடு மீண்டும் ஐக்கியமாக்கப்பட்டு விட்டனர். கலை வரலாற்றுத்துறையில் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற ஒருவர் இன்று இஸ்ரேலிய ராணுவ விபச்சார விடுதிகளிலோ அல்லது, ப்ரூக்ளின் நகர ஆடை அவிழ்ப்பு மதுபானக் கடையிலோ ''பாஸ்டர்நாக்'' அல்லது' ''அக்மடோவா''வை ஒப்பித்துக் காட்டி வயிற்றைக் கழுவலாம். ஆனால் இருபது வருட அனுபவம் நிறைந்த ஆசிரியை தொடர்ந்து அரைப்பட்டினியால் வகுப்பில் அடிக்கடி மயங்கி விழலாம். இல்லையேல் தன் வகுப்பு மாணவர்களிடம் தேர்வில் வெற்றி பெறச் செய்ய குறிப்பிட்ட தொகை கேட்டு வசூல் வேட்டையில் இறங்கலாம். ''குமாஸ்தாக்களின் துரோகம்'' ரஷ்ய அறிவு ஜீவிகளின் சுய அழிவில் (கருத்தளவில் மட்டுமல்ல) முடிந்து போனது. அந்த ''புதிய புனித ஒப்பந்தம்'' உண்மையில் இருபுறமும் கூரான ஏமாற்று வித்தைதான். வரலாற்றில் நியாயம் கிடைப்பது அரிது. ஆனால் கிடைக்காமலே போய்விடு வதும் இல்லை.

அறிவு ஜீவிகள் கூட்டம் திரளாக பாட்டாளி வர்க்கமாக்கப்பட்டு விட்டதால், பின்நவீனத் துவ முன்னோடிகள் உட்பட அனைத்து மரபு வழி இலக்கிய அறிவு ஜீவிகளின் கருத்தியல் செல்வாக்கும் அதிகாரமும் அநேகமாக மாயமாகி விட்டது. இந்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்டி வந்த ''தடித்த புத்தகங்கள்'' என்று அழைக்கப்பட்ட பதிப்பு கள் 1989-91-ஆம் ஆண்டுகளை விட 100 மடங்கு சிறியதாகி விட்டன. அவை தங்களை தாராள மாக ''சுதந்திர வெளியீடுகள்'' என்று தம்பட் டம் அடித்துக்கொண்டதைக் கண்டு யாரும் ஏமாந்துவிட வேண்டாம். அவை தம் வாசகர் களை என்றோ இழந்து விட்டன. எதிர் புரட்சிக்கு அவை ஒரு காலத்தில் ஆற்றிய சேவைகளுக்கு கைமாறாகக் கிடைத்த அரசு மான்யங்களையும், திருட்டுத்தனமான மேலை



படிப்பகம்

www.padippakam.com

நாட்டு உதவித் தொகைகளையுமே நம்பி யிருந்தன.

''குரோஸ்மேன்'' அல்லது 'சோல்யுனீட்சினின்' புதினங்களால் ஒரு சராசரி ஆசிரியரோ, பொறியாளரோ துடித்தெழுந்து சோவியத் சர்வாதிகாரத்திற்கு எதிராக தெருவிலிறங்கி முழக்கமிடும் காலங்களெல்லாம் நிரந்தரமாக மறைந்து போயின. நாட்டின் போர்க்குண தொழிற்சங்கங்களில் எல்லாம் ஆசிரியர் தொழிற்சங்கங்களே முதன்மையானவை என்பது இதைப் புரியவைக்கும். நிர்வாகத் தினரை அடைத்து வைத்தல், சாலை மறியர்கள், பிணைக்கைதிகளைப் பிடித்தல் ஆகியவை இவர்களது சாதாரண நடைமுறைகளாகும். 1998-ஆம் ஆண்டு ''ரயில் விபத்தின் பொழுது சுரங்கத் தொழிலாளர்களும், ஆசிரியர்களும், மருத்துவர்களும் இணைந்து சைபீரிய குறுக்கு இருப்புப்பாதையை அடைத்தனர். மரபு வாதிகளின் தாராளவாத மனிதாபிமானத்தைப் பற்றியோ அல்லது ரஷ்ய பின்நவீனத்துவ வாதிகளின் பண்பாட்டுத் தழுவல் பற்றியோ இவர்களுக்கு துளியும் அக்கரையில்லை. இந்தப் புதிய அறிவு ஜீவிகள் என்ன இருந்தாலும் ''இருத்தல்'' தான் ''தன் உணர்வுக்கு'' முற்பட்டது என்பதை கஷ்டப்பட்டு கற்றுக் கொண்டு வருகின்றனர்.

அதோடன்றி, ரஷ்ய பின்நவீனத்துவம் அதன் மிக மதிப்பு மிக்க வாடிக்கையாளரான புதிய 'நடுத்தரவர்க்க' அறிவு ஜீவிகளையும் இழந்து விட்டது. உலக சமுதாயத்தோடு யெல்ட்சினின் ரஷ்யாவை இணைப்பதற்கான தொழில் நுட்ப மற்றும் கருத்தியல் பணிகளை செய்வனே ஆற்றுவதின் மூலம் ஏகாதிபத்திய அமைப்பின் ஒரு ஓரத்தில் வசதியான வாழ்க்கை நடத்தி வந்த மேல் நோக்கி நகரும் இயல்புள்ள இந்த கும்பல் 1998-ஆம் ஆண்டில் நிதி நெருக்கடியில் நசுங்கிப் போனது. தங்களது வேடிக்கையான போலி வாழ்க்கையை மேலும் தொடர இயலவில்லை. அதனின்று அரசியலில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. அது இன்று அரசியலில் வலிமை வாய்ந்த ஒரு கும்பலான ''நாட்டுப் பற்று மிக்க'' அரசு அதிகார வர்க்கத்தின் பின்னே இதுவும் அணி திரள்கிறது.

இறுதியாக வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் கடந்த ஆக்ஸ்ட் மாதம் ''சாஸ்சிதா (தற்காப்பு)'' என்ற போர்க்குண மிக்க தொழிற்சங்கத்துடனும் பல்வேறு மார்க்சிய குழுக்களுடனும் இணைந்து ஒரு தொழிற்கட்சியை உருவாக்குவதற்கான இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர். இவர்கள் ரஷ்ய பின் நவீனத்துவாதிகளின் சிம்ம சொப் பனத்தின் மறு உருவம், ரத்தத்தாலும் சதையாலு மான ஒரு வரலாற்றுப் பெருங்கதையாடல்.

**குறிப்புகள்**

1. இக்கட்டுரையின் வெவ்வேறு பகுதிகள் 1996-இல் 'ஸ்லேவிய ஆய்வுகள் பற்றி தென் பகுதிக் கருத்தரங்கிலும்'' 1997-ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடந்த ''தற்கால மார்க்சிசம்'' பற்றிய கருத்தரங்கிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

2. ''பண்பாட்டின் தத்துவம், அறிவியல் ஆய்வு முறை, தர்க்கமுறை ஆகியவை பற்றிவிரிவாக எழுதி யுள்ள ஒரு ரஷ்ய தத்துவ அறிஞரின் சோசலிசம் பற்றிய உரையாடல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. ''மீண்டும் குறியீட்டிற்குள் திரும்புதல்'' தொகுதியில் பங்கேற்றுள்ள எழுத் தாளர்களின் தத்துவ மட்டத்தையும், கருத்தியல் தன்மையையும் புரிந்து கொள்ள இது ஒரு சான்று. சிறிது நாட்களுக்கு முன்பு ஒரு பொருளியல் அறிஞரோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவரை நான் ''சோசலிசத்தின் முழுமையான பயனை அடைய வேண்டுமென்றால் சோசலிசத்தை எவ்வாறு வரையறுப்பது என்று வினாவினேன். ''மனிதனை மனிதன் சுரண்டாத சமுதாயம்'' என்ற அவர் பதிலளித்தார். ''சரி, அப்படியானால் 1927 லிருந்து 1961 வரை விவசாயிகள் நடத்திய விதம் பற்றி என்ன நினைக்கிறீர்கள். அது சுரண்டல் இல்லையா?'' என்று கேட்டேன். ''இல்லை. அது சுரண்டல் இல்லை. சுரண்டல் என்பது உபரிப் பொருளை அபகரிப்பது - அதுவோ அத்தியாவசியப் பொருள்களை அபகரிப்பது'' என்று பதிலளித்தார்.

எனவே நாம் மற்றொருவனது உழைப்பின் பலனை அபகரிப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ''மற்றொருவர் உழைப்பின் பலனை'' அபகரிப்பது என்றால் என்னவென்று எந்த சட்டப்புத்தகத்தை வேண்டுமானாலும் புரட்டிப் பாருங்கள். அதன் சிறிய உதாரணம் திருட்டு. பெரிய உதாரணம் கொள்ளை. எனவே நாம் இதுவரை வாழ்ந்து



படிப்பகம்

www.padippakam.com

வந்த - இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தை ''மற்றவர் உழைப்பை அபகரிப்பதை அடிப்படையாகக் கொண்ட சமுதாயமாக வரையறை செய்யலாம்.''

3. ரஷ்ய பின் நவீனத்துவத்திற்கும்; ரஷ்ய அரசியல் அதிகாரத்திற்கும் உள்ள நெருக்கத்தை, குறிப்பாக நடப்பு ரஷ்ய அரசியலில் பயங்கரமானவரும், ரஷ்யப் பின் நவீனத்துவ தத்துவ விளையாட்டுகளைத் தமது அரசியல் பிரச்சனைகளுடன் வெளிப்படையாக இணைப்பவருமான ''விளாடிமீர் சிரினோவ்ஸ்சி'' போன்றோரைப் பற்றி அலெக்சாண்டர் ராப்போபோர்ட் அதிர்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.

4. ''பின் நவீனத்துவ அழகியலின் இடிபாடுகளிலிருந்து ''புதிய எதார்த்த வாதம்'' தோன்றுவதாக 1998-ஆம் ஆண்டிலேயே பிரபல கம்யூனிச எதிர்ப்பு விமர்சகரான நாடாலியா ஐஸனோவா குறிப்பிட்டுள்ளார்.

---

நூல் மதிப்புரை



சா. தேவதாஸ்

## நெருப்புக் குழியில் குருவி / ச. முகமது அலி / மலைபடுகடாம், பொள்ளாச்சி, 2000 / பக். 104 / விலை ரூ.40.00

கானுயிர்களான பறவைகள் மற்றும் விலங்குகள் குறித்து விழிப்புணர்வு வேண்டும் மற்றும் இவற்றைப் பாதுகாக்கும் அவசர உணர்வு வேண்டும் என்பவற்றை வற்புறுத்தும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது இந்நூல். தமிழில் ஒரு புதுக்குரல் இது. மற்ற துறைகளில் எவ்வளவு ஆழமாகப் புலமை பெற்றிருந்தாலும், கானுயிர் என்று வரும்போது பாமரத்தனமாகவே பலரும் உள்ளனர் என்று தன் சொல்லாடலைத் தொடங்குகிறார். கம்பன் முதல் வலம்புரிஜான் வரை இவ்விஷயத்தில் ஒரே மாதிரி இருப்பதை கடுமையாகவே அம்பலப் படுத்துகிறார்.

''பாம்பு கடித்தால் வாழைப்பட்டையில் உள்ள சாற்றைப் பிழிந்து கொடுக்க உடனே குணமாகும். பூரான் கடித்தால் பனை வெல்லத்தை உண்டால் அதன் தடிப்பு உடனே மாறும். நட்டுவாக்கழி கடித்தால், கொப்பரைத் தேங்காயைமென்று தின்ன உடனே குணங்காணலாம். இந்த எல்லா மருந்தும் ஒரே வேளைதான். இரண்டாம் வேளை மருந்து தேவையில்லை'' என்று கி.ஆ.பெ. விசுவநாதம் மிக மிக எளிமைப்படுத்தி, சிக்கலான மருத்துவ பிரச்னைகளுக்கு தீர்வு சொல்லியிருப்பதைச் சாடுகிறார்.

காடுகள், காட்டு விலங்குகள், ஆதிவாசிகள் குறித்து பிலோ இருதயநாத் எழுதியவற்றில் 95% கட்டுக்கதைகளென ஆசிரியர் எடுத்துரைப்பது அதிர்ச்சி தருவதாய் உள்ளது. இது போன்ற விஷயங்களை ஏன் நாம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தவில்லை? ''... நடக்காத, நடக்க முடியாத நிகழ்வுகளை, பார்த்ததாக எழுதுவதே ஒரு திறமையான எழுத்தாளரின் சிறப்பு எனத் தனக்குத்தானே முடிவு செய்துகொண்ட ஒரு மூட நம்பிக்கையாளர் இந்த பிலோ இருதயநாத்'' என்கிறார். ஆசிரியர்.

அறிவியல் / சூழலியல் குறித்து எழுதுவோரும் பேசுவோரும் துல்லியமான விஷய ஞானத்துடன் இன்றைய ஆய்வு வளர்ச்சி வரை தம்மைப் பரிச்சயப்படுத்திக் கொள்ளாது போனால், அவர்களால் உண்டாகும் விளைவு விபரீதமாயிருக்கும். இந்த நோக்கில் ஜிம் கார்பெட்டையும் சுஜாதாவையும் இருதயநாத்தையும் கண்டிப்பது அவசியம்.

ஆனால் உவமை / உருவகங்களுக்காகப் பயன்படுத்தும் கட்டுரையாளர்களையும் இலக்கியவாதிகளையும் இதே நோக்கில் சாடுவது சரியல்ல. இந்த விஷயம், பண்பாட்டுச் சூழலிலிருந்து, மொழியின் பண்பிலிருந்து வருவது. மேலும், வாய்மொழி மரபுக்கதைகளில் விலங்குகள் / பறவைகள் குறித்த நம்பிக்கைகள் அதிகம். இந்தியக் கதைகளிலிருந்து ருஷ்யக் கதைகள் வரையும் நரிகள் தந்திரமிக்கவையாகவே உள்ளன. நீதிக்கதைகள் எழுதும்போது மனிதரின் குணங்களை விலங்குகளுக்கு ஏற்றிக் கூறிவிடுவர். ஆக, இந்த விஷயம் நமது இலக்கல்ல.

மேலும், அறிவியல் முனைப்பு இல்லாது நமது அணுகுமுறை இருத்தல் வேண்டும். அறிவியல் மட்டுமே சரியானது என்ற நிலைப்பாடு, கலாசார விகசிப்பின் பல விஷயங்களைக் காலடியில் போட்டு மிதிக்கச் செய்து விடும். பகுத்தறிவுக் கோட்பாட்டினர் சறுக்கி விழுந்த இடம் இது. பகுத்தறிவு நமது அறிதல் முறையின் / விழிப்புணர்வின் தொடக்கமே.

கானுயிர் தொடர்பான ஆவணங்களையும் அறிவியல் போக்கு / ஆய்வு குறித்த விவாதங்களையும், நவீனத்தமிழ், திரு. முகமது அலியிடமிருந்து எதிர்பார்க்கிறது.



படிப்பகம்

www.padippakam.com




# மைலாஞ்சி (கவிதை தொகுப்பு)

***ஆசிரியர் :*** எச்.ஜி.ரசூல்
***வெளியீடு :*** சரம், 21/77, ஞானியார் வீதி,
தக்கலை, குமரி மாவட்டம்.
***விலை :*** ரூ. 50.00

**நூல் மதிப்புரை**



**பொதிகைச் சித்தர்**

## ஒன்றுபோல் இருப்பதில்லை எல்லா விரல்களும்

***''சில நூல்கள் இலக்கிய விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை. வேதங்கள், உபநிஷத்துக்கள், பகவத்கீதை, ஸீக்கிய கிரந்தங்கள் இவை இந்திய உதாரணங்கள். இந்தியாவிற்கு அப்பாற்பட்டு உதாரணம் என்றால் கொரான், பைபிள் முதலியவற்றைச் சொல்லலாம்.''***

- க.நா.சு. ('உலக இலக்கியம்')

மைலாஞ்சி பற்றிய மதிப்பீடு இடம் பெறா இதழே இல்லை என்கிற அளவிற்குச் சிற்றிதழ், மார்க்க இதழ், ஜனரஞ்சக இதழ் என எல்லாத் தரப்பிலும் அல்லோல கல்லோலப் பட்டா யிற்று என்கிற போதிலும் வாசிப்பின் சஞ்சாரத் திற்கு எத்தனை எத்தனையோ ஊற்றுக்கண் மடைதிறக்கும் சாத்தியக்கூறுகள் நிரம்பிய மைலாஞ்சி அத்தகைய ரீதியில் அணுகப்பட வில்லை என்பது என் ஆதங்கம்.

''நான் ஒரு முஸ்லீம் என்ற முறையிலும், கவிஞன் என்ற முறையிலும் கவிதைகளை அணுகிப்பார்த்த போது, எனக்குப் பட்டதைப் பகிர்ந்து கொள்வதே இம்மதிப்புரையின் நோக்கம்'' என்ற பீடிகையுடன் நாகூர் ரூமியின் மதிப்பீடு 'புது எழுத்தில்' இடம்பெற்றுள்ளது. அதில் வெளிப்படும் முரண் நகையினையும் - உட்பொதிந்த மௌனங்களையும் தற்சார்பான பெருங்கதையாடலின் பிரதிநிதியாகத் தலை யிட்டு பிரதியினைக் கதறச் செய்ய முனைவ தனையும் இங்கே உங்களோடு பகிர்ந்துகொள்ள எத்தனிக்கின்றேன். இதற்கு மாறாக மைலாஞ்சி யினை அதற்குள் உள் இயங்கும் சிருஷ்டி பரத் தர்க்கத்திற்கு ஊடாக அணுகத் தலைப்படுவதே 'வாமதந்திரச் சித்தர் மரபினில் வந்துதித்த' என திந்த வாசிப்பு மாகும்.

''தாகூர் தனது சமயத்தைக் கவிஞனின் சமயம் என்றார். எதிர்காலத்தில் சமயத்திற்குப் பதிலாகக் கவிதைகளே இருக்கும் என்றார் மேத்யு அர்னால்டு. சமயவாதிகள் துறவிகள் கவிஞர்களாக இருப்பார்களானால் கவிதைக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் நன்மை செய்ய முடியும்'' என்கிறார் ஞானி (தமிழ்நேயம் - 4). நல்லது நாகூர் ரூமியும் ரசூலும் இருவருமே ஒரே சமயவாதிகள்தாம் கவிஞர்கள்தாம். அப்புறம் இடையில் என்ன முரண்பாடு? சமயத்தை இவர்கள் எவ்வாறு பொருட்படுத்து கின்றார்கள் என்பதில்தான். ஞானியையே மீண்டும் நோக்குவோம். ''திருச்சபைகளில் விவிலியத்தைப் போதிப்பதற்குப் பதிலாக மக்களுக்குக் கவிதைகளைக் கற்றுக் கொடுங்கள். அதாவது கவிதையாகப் பொருட்படுத்த வேண்டுமே தவிர உண்மைக்கதை என்பதாக நோக்கலாகாது'' எனஸ்காட்லாந்தின் ஆங்கிலக் கண் திருச்சபையிலிருந்து ஓய்வுபெற்ற பேராய ரின் சில கருத்துக்கள். சமய உலகில் அதிர்ச்சி களை ஏற்படுத்தி உள்ளதை விவரிக்கிறார் ஞானி.

ஆனாலிது என் ஆச்சியிடம் கேட்ட சொல் கதையிலேயே எனக்கு அத்துப்படியான பாலபாடம்தான். என்ன அது. ''ஏல கதன்னால கயாறு திரிக்கதுதாம்ல. தாம்புக் கயத்த பாம்புன்னு புடுச்சி தண்ணி போட்ட ஜோர்ல செவத்துல ஏறுதாம்னா... அதெப்டீங்க... ஏல முட்டாமூதி பாம்பு கயிறு ஆஹாதுல. இன்னா லும் அப்படி பாம்பு கயிறா ஆஹுதுதாம்ல கதய...''

நாம் மக்களுக்குக் கவிதையைக் கற்றுக் கொடுப்பது ஒரு புறம் இருக்கட்டும். அவர் களின் சொல்கதைகளே நமக்கு சொல்லித் தரும் ஏராளம். இதை எல்லாம் நாம் நாகூர் ரூமிக்குச்... அதுவும் பிரம்மராஜனின் 'இரும்புக் கடலை களில்' (உபயம்: பழமலய்) பருப்பெருக்க வல்ல நாகூராருக்கு எடுத்துச்சொல்லவா? மைலாஞ்சி யின்மீது 'உண்மைக்குப் புறம்பான'தென்கிற



படிப்பகம்

www.padippakam.com

பெயரில் (உண்மையில் இஸ்லாத்துக்கும் புறம்பான தென அவர் கருதுவதையே) இத்தகைய கேள்விகளையே அவர் எழுப்புகிறார். 'எறும் பின் ஜனாஸா' என ரசூல் எழுதினால் அதுக்கெல்லாம் ஏது ஜனாஸா (பிணம்) என்கிறார் ரூமி.

''எறும்பாக மாறாமல்
எறும்புடன் பேசிய
அலைமான் நபி போலல்ல
வார்த்தைகளையோ
வார்த்தைகளற்றோ
எறும்பிடம் பேசக் கற்றுக்கொள்கிறேன்
எறும்பாக மாறி''

என்பார் ரசூல். ஆம்! ரசூல் அங்கங்கே அது ஆகிறார். இந்த 'அது ஆதலே' எறும்பாதல், குழந்தையாதல், பெண் ஆதல், ஏன் இபிலீசு ஆதல் என்றெல்லாமும் விரிகின்றது.

மைலாஞ்சியின் முதற்கவிதை விசித்திர கனியின் பிள்ளைகள். விலக்கப்பட்ட கனிகளை (Taboos) எல்லாம் நுகரத்தான் வேண்டும். அதன் கதி எதுவான போதிலும் என்பதாகவே நான தனை அர்த்தப்படுத்திக் கொள்கிறேன். 'விசித்திர கனியின் பிள்ளைகள்' எனுந் தலைப்பும் இன்னும் கவனங்கூரத்தகுவதே. இங்கே வேறொரு தளத்திலான என் ஹைகூ கூட ஒன்றும் ஒப்புநோக்க:

விலக்கப்பட்ட கனி / பதுங்கிக்கிடக்கும் பசி / ஆதாம் ஏவாளுக்கு மட்டுமா?

தொடக்கத்தில், ''முஸ்லீமாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு மனிதன் ஒரு கவிஞனாகவும் துணிச்சல் கொண்ட சிந்தனையாளனாகவும் இருக்கும் பட்சத்தில் அவனுள்ளே சில சந்தேகங்களும் கேள்விகளும் எழுவது இயற்கையானதே. இந்நேர்மைக்கான ஆதாரங்கள் நிறையவே கவிதைகளில் உள்ளன'' என ஒப்புக்கொள்ளும் ரூமி அப்புறம் பையப் பைய ரசூலின் நேர்மையை ஐயுறலாகின்றார்?

''ஆண்தன்மையும் பெண்தன்மையும் அற்ற
என் அல்லாவை எப்படி நான் அழைப்பேன்
என் தமிழில்''

இங்கே ரசூலின் மொழிப்பற்று ஒரு அபத்தான தர்க்க நெருடலாகப்படுகிறது ரூமிக்கு. மட்டுமல்லாமல் இக்கேள்வி ஒரு சரியான முஸ்லீமுக்கு வராது என ரசூலின் இஸ்லாமிய இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகிறார். ஆனால் எனக்கான வாசிப்பில் ஆணாகிப் பெண்ணாகி நின்ற தமதிறையைச் சைவர் அர்த்த நாரீஸ்வரா தாயுமானவா என்பதும் மாதொரு பாகன் மங்கைபங்கனென்பதும் வள்ளலார் பெண்ணினுள் ஆணாலும் ஆணினுள் பெண்ணும் / அன்றை அமைத்த அருட்பெருஞ்சோதி என்பதுவும், மனத்திரையில் விரிய பால்பேத - ஒருமை பன்மை கடந்த, அருஉருவை என்னென்பேன் என்தமிழில் எனும் ரசூலின் அல்லாட்டப் புதிரில்தான் அது கவிதை ஆகிறது. ''தமிழ் மரபு சார்ந்த, பெண்ணியம் சார்ந்த அடையாளங்களைத் தேடி இஸ்லாத்துக்குள் தான் நடத்திய தேடல்கள் தாம் இந்தக் கவிதைகள்'' என்பதே ரசூலின் சுயவாக்குமூலமாகும்.

புனிதச் சட்டங்களைக் கூட கேள்விக்குள்ளாக்காமல் அவற்றின் அமலாக்கத்தில் நிலவும் ஆணாதிக்கத்தினை கேள்விக்குள்ளாக்கும் எல்லையே ரசூலின் இயங்குதளம்.

''உனக்குத் தக்கதாய் விளக்கமளித்து / உண்மை விளம்பியாய் நடித்து / புனிதச் சட்டங்களை வளைத்து / முதுகு சொறிந்து கொள்கிறாய்''

ரசூலின் 'குழந்தைகள் உலகம்' ரம்மியமானது - அந்தக் கவிமனம் 'புறவெம்மை தாளாது மீண்டும் தாயின் கர்ப்பத்தில்' அடைக்கலந் தேடும் தன்மைத்துமாம்.

''வாழ விரும்ப வில்லை
தேடுகிறேன்
யூனுஸ் நபி வாழ்ந்த
மீனின் வயிற்றை''

எனத் தேடுகிறது.

''புதிர்களை அவிழ்த்து
என்னை நிர்வாணப்படுத்து
திரும்பவும் குழந்தையாக
உன் வீட்டு மாமரத்தில்
ஒரு மாம்பிஞ்சாய்ப் பூக்கிறேன்''

என அல்லாடுகின்றது.

''பொட்டு வச்சுப்பார்க்க
எனக்கும் ஆசை
உம்மா திட்டுவாளோ''

இந்தக் குழந்தையின் கேள்வியை ஏற்கும் ரூமியால் ரசூலின் செல்லமகளின் இன்னொரு கேள்வியை மட்டும் செரிமானிக்க இயலவில்லை

''இத்தனை இத்தனை
ஆண் நபிகளுக்கு மத்தியில்
ஏன்வாப்பா இல்லை
ஒரு பெண்நபி''



படிப்பகம்

www.padippakam.com



# உண்மை ஒளிர்கவென்று பாடவோ

**நூல் மதிப்புரை**

(நாவல்)

***ஆசிரியர் :*** பா. விசாலம்

***வெளியீடு :*** விஜயா பதிப்பகம்,
20, இராஜ வீதி, கோவை - 1.

***விலை :*** ரூ. 100.00

மா. அரங்கநாதன்

சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதரின் கதாகாலட்சேபங்களே நாவல்களாக பரிணமித்து வருகிற இந்த நவீனத் தமிழுலகில், பா. விசாலம் அவர்களது இரண்டாவது நாவல் அளிப்பது ஒரு மனச்சாந்தி.

மனச்சாந்தி என்று சொல்வது ஓர் ஒப்புமைக்காகவோ, ஏனோதானோ என்றோ அல்ல. இந்த நாவலின் போக்கை அவ்வாறே குறிப்பிட வேண்டும். உணர்வுகள் கிளர்ந்தெழச் செய்யும் நாவல்கள் நூற்றுக் கணக்கில் - நல்ல நாவல்களும் சேர்ந்து உலக இலக்கியத்தில் உண்டு. ஆனாலும் சில படைப்புக்களே உணர்வுகள் அடக்கம் பெறும் செயற்பாட்டினை அகத்தே கொண்டுள்ளன.

அப்படிப்பட்டவை மேநாட்டிலும் குறைவுதான் என்று, இலக்கிய வல்லுநர்கள் கணிக்கின்றனர். இந்த நாவல் அப்படிப்பட்ட போக்கில் செயற்பட்டிருப்பது ஒரு நல்ல திருப்பம்.

கொடுமைகள் - சீற்றங்கள் எப்போதும் இருந்திருக்கின்றன. அவை இந்த நாவலிலும் ஏராளம். அன்னம்மா - மீனா போன்றோர் அனுபவித்தது தனிப்பட்ட மனப்போராட்டங்கள் என்றால் ''சர்ச்'' உள்ளே மதில் எழுப்பி, தாழ்த்தப் பட்டவருக்கென உயர்சாதி கிறித்தவர்கள் செய்தவை வேறு. இவ்வாறு கொடுமைகள் சித்தரிக்கப்பட்டிருப்பினும், அவை நாவலின் மையப்புள்ளியாக இல்லை. கதை சொல்லியின் வெளிப்பாடு வேறு வகையில் செல்கிறது. அப்படிப்பட்ட முறையால் கொடுமையின் பின்னணி தெரிகிறது - சீற்றம் பிறக்கிறது.

இத்தகைய நிலையில் வாழ்க்கைப் போராட்டத்தை விட நாட்டின் விடுதலைப் போராட்டம் பெரிதாக இருந்திருக்க முடியுமா என்றும் தோன்றுகிறது. அதத்தகைய நிலையிலும் வாழ்க்கை நகர்ந்து செல்கிறது. வெறுப்பு மட்டுமே எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டு விடவில்லை. உண்மை என்பது மிச்சம் மீதி என்றில்லாமல் இருப்பது என்றால், கொடுமையும் உள்ளடக்கமாகி விடுகிறது. எல்லாவற்றையும் விட உண்மை அற்புதமானது என்ற தெளிவும் ஏற்படுகிறது.

இந்த நிலை ஏற்பட நாவலாசிரியர் ஒரு உத்தியைக் கையாளுகிறார். கதையிடையே, ஸ்பார்டக்கஸ், ஏசு, கலிலியோ, வீரமாமுனிவர் போன்றோரின் வாழ்வு பற்றிய மகோன்னதம் தோன்றும்படி நிகழ்ச்சிகளை சேர்த்திருக்கிறார். வைகுந்தசாமி பற்றிய நிகழ்வுகள் அதிகமாக இருந்திருக்க வேண்டும்.

'விண்ணரசு விண்ணில் இல்லை - அது இங்கேதான் இருக்கிறது' என்பதை வீரமாமுனிவர் சொன்னார் என்பது தெரியாது. ஆனால் நாவலாசிரியரின் போக்கு தெளிவாக இருக்கிறபடியால் சொல்லியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. வீரமா முனிவர் சொல்வதாக நாவலாசிரியர் திருவள்ளுவர் பற்றி கூறியிருப்பது, எந்த பகட்டுமில்லாது விளங்குகிற அழகு. அவர் இயற்றிய திருக்காவலூர் புராணத்தில், குலசேகர ஆழ்வாரின் 'படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பனோ' போன்ற பதிகங்கள் போல் அன்னை மேரியை பாடியிருக்கிறார். வைணவம் போல் கிறித்தவமும் பக்திக்கு முதலிடம் அளிக்கும் சமயம் தானே.

மார்த்தாண்ட வர்ம மகாராசா பற்றியும் நாவலாசிரியர் கூறுகிறார். இந்த மகாராஜா கிறித்தவராக மதம் மாறிய தேவசகாயம் பிள்ளைக்கு மட்டும் மரண தண்டனை அளிக்கவில்லை. பிராமண புரோகிதர் அறிவுரைப்படி, அனந்த பத்மநாப சாமிக்கு நடத்திய வேள்விக்காக, தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த பதினைந்து குழந்தைகளை (நாடார், ஈழவர், பரதவர்) திருவனந்தபுரத்தில் பல இடங்களில் உயிருடன் புதைக்கச் செய்தவர். (பார்க்க பேராசியர் சிவனடி அவர்களின் இந்திய சரித்திரக் களஞ்சியம் - vol 3) பிராமணருக்கு ஊட்டுப்புறைகள் திறந்தவர். கோசங்ரம் செய்து புண்ணியம் பெற்றவர்.



படிப்பகம்

www.padippakam.com

என்னும் மார்த்தாண்ட வர்ம ராஜா பற்றியோ, அவருக்கு தூபம் போட்ட ராமய்யன் பற்றியோ, நாவலாசிரியர் விமர்சனம் செய்யவில்லை.

ஆனால் 'ஒரு நட்சத்திரம் போனால் என்ன - வானத்திற்கு என்ன நட்டம். இன்னும் எத்தனையோ கோடி நட்சத்திரங்கள்' என்று நாவலாசிரியர் சொல்லும்போது அந்த தோரணை 'ஏற்றுக்கொள்ளல்' என்ற மன விரிவைக் காட்டுகிறது.

மனவிரிவு என்பது பெரிய விஷயம். அப்படிச் சொல்வது 'ஒன்றுமில்லாத ஒன்று' என்ற பொருளையும் தரும். எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு. முடிவிற்கு முடிவு இல்லை. சுதந்திர உணர்வுகள் - கனவுகள் இவற்றோடு இவற்றின் எதிராக போர்கள் - மதங்கள் ஆகியவை விலகாது இருப்பதையே மனித குல வரலாறு என்று சொல்லிவிட முடியும்.

சற்றேறக்குறைய இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால கட்டத்தில் நடக்கிற கதை. வடக்கன் குளமும், அதன் பக்கமுள்ள நாஞ்சில் நாடும் இந்த நாவலில்*, கிறித்துவ மதம் மாறியவர்கள் முக்கிய பங்கேற்கின்றனர். வேளாள கிறித்தவரும், நாடார் கிறித்தவரும், தாழ்த்தப்பட்ட கிறித்தவரும், தங்கள் சாதியை கைவிட்டுவிடாது, வெறும் 'சர்ச்' போய் வருகிற நெறிமட்டுமே போதுமென்று தங்கள் காரியங்களை பார்த்து வருகின்றனர். அவர்களிடம் 'சர்ச்' தவிர வேறு எந்த மாற்றமும் இல்லை. நாதசுரத்தோடு கல்யாணம் - பலகாரவகைகள் - குடும்ப உறவு முறைகள், நிகழ்ச்சிகள் - நான் நட்சத்ரம் பார்த்தல், எதிலும் மாற்றமில்லை. பேச்சு வழக்கு எப்போதும் மாறியதில்லை. கிறித்தவர்கள் மட்டுமல்ல, இந்த நாவலில் குறிப்பிடப்படாத மதம் மாறிய முஸ்லீம்களும் அப்படித்தான். வேளாளன் முஸ்லீமாக மாறிவிட்டால், 'பிள்ளை' பட்டத்தைக் கூட சில சமயம் விட்டுக் கொடுக்கமாட்டான். மற்ற இடங்களில் எப்படியோ தெற்கே அப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலேயர் வருவதற்கு முன்புள்ள கால கட்டத்திலிருந்து, குறைந்த பட்சம், 'வள்ளலார், காலம் வரை பார்த்தால், இதற்கான காரணகாரியங்கள் என சிலவற்றைச் சொல்ல முடியும்.'

மொழியிலும், உணவு உடை விஷயத்திலும், மதத்திலும் ஒரேயடியான மாற்றத்தைப் பெற்றுக்கொண்ட ஆப்ரோ-அமெரிக்கர் போன்றோர் சங்கதி அல்ல இது. அமெரிக்காவில் கறுப்பினத்தவராகியோர் ஆங்கிலம் பேசி 'சர்ச்' போய்வந்து, நிறவேற்றுமை வெறியை அனுபவித்துக் கொண்டே கிறித்தவராகவே அமெரிக்காவில் இருப்பது போன்றதல்ல நமது விஷயம். கறுப்பர்கள் 'பிஷப்' ஆக முடியும் என்பதும் இங்கே சொல்லவேண்டிய ஒன்று. பூங்குன்றனிலிருந்து வள்ளலார் வரை எடுத்துக் கொண்டால் தாங்கள் வணங்கியது வேதகால இந்திர-மித்ர கடவுள் அல்ல என்ற நினைவுடன்தான் செயல்பட்டிருக்கின்றனர். மூவேந்தர் காரியங்கள் முடிந்து பல்லவ ஆட்சியின் பின்னர் பாமர ஜனங்கள் என்ன செய்திருக்க முடியும்? அரசர்களைப் பின்பற்றுவதைத் தவிர வேறு எதையும் செய்திருக்க முடியாது. தங்களையும் வைதிக மதத்தின் ஓர் அங்கமாக நினைத்துக்கொள்ள, ஆரம்பித்தனர் - அவ்வளவுதான். சற்றேறக் குறைய இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் 'இந்து' என்ற சொல் புழக்கத்தில் வந்தது. அதுவும், ஆங்கிலேயர் நிர்வாக வசதிக்காக ஏற்படுத்திக்கொண்ட சொல். இதையும் நாம் மறந்துவிட முடியாது. இப்படி வைதிக நெறி பரவுங்காலம், தமிழ் நாட்டின் தென்பகுதியில் அது மிகத் தாமதமாகத்தான் தலையெடுத்திருக்கிறது. அதுவும் அரசர் மூலம்தான். அப்படிப்பட்ட நிலை வந்தபோது, தங்கள் சொந்த மன்னனின் நெறியை தங்கள் சாதிகளில் மட்டுமே அங்கு, அவற்றை விடாது, தங்கள் சாதிகளையே மதமாக்கிகொண்டு விட்டனர் போலும். மதமாற்றத்தால் தமிழன் என்ற அடையாளத்தை விட்டுவிட மறுத்தனர். மதமாற்றத்தால் தங்கள் தமிழ் அடையாளம் மாறிவிடாது என்று நம்பினர். வைதிகத்தில் அது நடவாத விஷயம்.

காலதேச வர்த்தமான நியதியில், எந்தவித உள்நோக்கமும் கற்பிக்காத வகையில், ராமானுஜர் பற்றி இந்த விஷயத்தில் சொல்வதென்றால், தீண்டத்தகாத சைவரை, தீண்டத்தகாத வைணவராக மட்டுமே மாற்றினார் என்று சொல்லமுடியும். 'சர்ச்' எதைத் தந்து விட்டது என்று கேட்டால், வெறும் 'நாராயண மந்திரம்' எதைத் தந்துவிட்டது என்றும் கேட்கலாம்.

மேலும் ராமானுஜர் தமது மானசீக குருவாகக் கொண்டது நம்மாழ்வாரை. நாஞ்சில் நாட்டைச் சார்ந்த உடையநங்கை அம்மையாரின புதல்வர் தான் நம்மாழ்வார். அவர் வளர்ந்தது திருக்குருகூராக இருப்பினும், பிறந்தது திருவண்பரிசாரம் என்றும் பதியலாகும். 'வருவார் செல்வார்



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வின் சூட்சுமம். அதை நுட்பமாக தரிசித்த உயிர் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. சவால், பிரேமை என எதையும் ஜோடிக்காமல், யதார்த்த வாழ்க்கையை போகிறபோக்கில் எதிர் கொள்ளும் அப்பாஸின் கவிதைகள் நுட்பமான மொழி ஆளுமையினால் வாசகனுக்குள் சிருஷ் டிக்கும் மனப்பதிவுகள் முக்கியமானவை. தேனருவியின் நீர் விழுதைப் பிடித்து மேலேறிச் செல்லும் மன விழைவு போல கவிதை வரிகள் மூலம் வெளிக்குள் பயணித்துத் தனக்கான இடத்தை நிறுவ முயலுகிறார் அப்பாஸ்.

அப்பாஸ் தனது கவிதை மூலம் சித்தரிக்கும் உலகில் சதா சர்வ காலமும் மனிதர்கள் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். சக மனிதர்களுடன் இடைவிடாமல் பேசுவதற்கு அப்பாஸிற்கு நிரம்ப விஷயங்கள் உள்ளன. அவர் தனக்குள் படிந்துள்ள வாழ்க்கையின் வண்டலையும் விசாரிப்புகளையும் நுட்பமாக் கவிதையாக்கி யுள்ளார். முடிந்தால் 'கிழத் துறவி' மூன்று அவுன்ஸ் அருந்திவிட்டு அப்பாஸுடன் பேச்சைத் தொடங்கலாம். அருவருப்பாக பொங்கும் பியரின் நுரைக்கப்பால் கண்ணடித்து அழைக்கும் வானவில்லின் ஜாலமாக விரியும் கனவுலகிற்குள் அப்பாஸின் விரலைப் பிடித்துக் கொண்டு நடக்கலாம். விழியில் தொங்கும் சூழல் ஏணியில் ஏறி சுழன்று உள்-வெளி அறியா போதத்திற்குள் மயங்கிச் சுழன்று பார்க்கலாம். அதற்கான எல்லா சாத்தியக் கூறுகளும் அப்பாஸின் கவிதை வரிகளுக்குள் ஒளிந்து கிடக்கின்றன. Game-ஐத் தொடங்கியாகி விட்டது. அப்பாஸ் ரெடி. அப்ப நீங்க? என்று வாசகரை நோக்கிக் குரல் பலமாக ஒலிக்கிறது.

விதிகள் யாவருக்கும் பொதுவாக இருப்பதான பாவனையில் உற்சாகமாக விளையாட்டைத் தொடங்கலாம். இறுதியில் விதிகள், விளை யாட்டு, கவிதை ஏதும் முக்கியமல்ல. சொல் லாடல் மூலம் தனது நிலையை வெளிப்படுத்த அழைப்பு விடும் கவிதைகள், வாசகருக்குப் பெருவட்டாக எதுவும் சொல்லுவதில்லை. Land Scape ஆக விரியும் இயற்கையின் கனபரி மாணங்கள் போல அப்பாஸ் வடிக்கும் சொற் களின் பிணைப்பு வாசிப்பில் நுட்பமான அனுப வங்களைத் தருகின்றன. அவ்வளவே.

வெளியின் பிரமாண்டத்திற்குள் கால அளவீடு களின் மூலம் நிலைநிறுத்த முயலும் மனித முயற்சிக்கள் நுட்பமானவை. காலம் கயிற்றரவா? மயங்கும் புள்ளியில் அப்பாஸின் கவிதைகள் வெளிப்படுவது சுவாரசியமாக உள்ளது.

''நீ உன் வீடு திரும்புதலுக்கும்
நான் நூலகம் திரும்புவதற்கும்
அவளின் அவசரத்திற்கும்
இடையில் அவைகள்
பறந்த வண்ணம் பறந்த வண்ணம்''

''மஞ்சள் வெளியில்
மெல்ல நம் பார்வைகள்
ஊடுருவும் கணங்களுக்கு இடையில்
பறந்து செல்கிறது சிட்டுக்குருவி''

''.... வரும் காலம் பற்றி சப்தித்து
நகரும் கடிகாரம் பற்றி
அறையில் நானும் மனைவியும்''

''தொடர்ந்து வரும் தற்செயல்களை
வார்த்தைகளுக்குள் சுருட்டிப் பார்க்கும்
உலகத்தைமீறிய தற்செயல்களில்
நானும் அவளும்''.

மனிதக் கணக்கீடுகளுக்கப்பால் காலம் குமளி யிட்டு வழிவது அப்பாஸிற்கு ஆழ்நிலையில் உறுத்தலாக இருக்கிறது. அவரது மனம் சலித் தெடுக்கும் சொற்கள் அபத்தமாக இருப்ப தறிந்தும் கவிதை வரிகள் மூலம் வாசகருடன் உற்சாகமாகக் கதையாடலைத் தொடங்குவது அப்பாஸின் தனித்துவம்.

வயலட் என்ற சொல் ஒலிப்பில் உணர்த்தும் அர்த்தம் கவிஞருக்குக் கிளர்ச்சி தருகிறது. அது சொல் நிலையிலும் அர்த்த நிலையிலும் வண்ண மாக வெளிப்பட்டுக் கண்ணுக்கும் மனதுக்கும் தரும் அனுபவம் முக்கியமானது. பச்சைநிறபூமி என்ற மரபு வழிப்பட்ட பிம்பச் சிதைவில், வயலட் நிறபூமி என்று கனவுகண்டு கவிஞர் சிறகடிக்கிறார். வாசகரும் வயலட், பூமி என்ற சொற்களின் சேர்க்கையில் கிளர்ச்சியடை கின்றார். வயலட் என்ற சொல்லுக்கும் வண்ணத் திற்குமான தொடர்பு விளைவிக்கும் / உணர்த்தும் அர்த்தம் காற்றடித்த பலூனாகக் கவிதையைத் தூக்கிச் செல்கிறது. மனித மன உணர்வுகளும் அன்றாட வாழ்க்கையும் வயலட் நிறத்துடன் குழம்பிப் பின்னிக் கிடப்பதை அவதானிக்கும் கவிஞர் இறுதியில் வயலட் நிறத்திற்காக எல்லா வற்றையும் தாங்கிக் கொள்ள முயலுவது வேடிக்கையானதாகத் தோன்றினாலும் அலை பாயும் மன வெளிப்பாட்டினை அறிய முடிகிறது.

அப்பாஸின் கவிதை மொழியானது மேலோட்ட மான வாசிப்பில் இளம் வாசகருக்குக் குழப் பத்தைத் தரலாம். கவிதை உணர்த்தும் உலகு வெளிப்படையாக அறிய இயலாதபோது மனதின் சலனங்களைக் காட்சியாக்கியுள்ள



படிப்பகம்

www.padippakam.com

கவிஞரின் மனவோட்டத்துடன் வாசகனும் இணைய வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. கவிதை, வரிகளுக்கிடையில் பயணம் செய்வதற்கான தோதுவை வாசகருக்குத் தராதபோதிலும், சுயமுயற்சியினால் புதியதான காட்சிகளை வடிவமைத்துக் கொள்ளலாம். என்றாலும் கவிதைகள் முதல் வாசிப்பில் தளதளத்து வாசகனை ஒதுங்கச் செய்கின்றன. இது நவீன கவிதை வாசிப்பில் வெளிப்படும் சிக்கல். இந்நிலையில் ஒதுங்கிநின்று வேடிக்கை பார்க்கும் பார்வையாளனாக வாசகன் இருக்க வியலாது. கவிஞன் போல வாசகனும் உசாராக இருந்து கவிதையின் நுட்பங்களைத் தேட வேண்டிய காலகட்டமிது. அவ்வகையில் அப்பாஸின் கவிதைகள் தனக்கான வாசகரை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டுள்ளன. அவை பொங்கி வழியும் நதிக்கரையோரம் அழகிய விரிந்த கூந்தலுடன் காத்திருக்கும் இளம் பெண்ணின் பார்வையைப் போல ஆயிர மாயிரம் சேதிகளைச் சொல்லுகின்றன. இதுவே அப்பாஸைக் கவிஞராக்கும் மாயாஜாலம்.

---

## நூல் மதிப்புரை

சா. தேவதாஸ்

**'நீர் விளையாட்டு' / பெருமாள் முருகன் / அகரம், கும்பகோணம், 2000 / பக். 153 / விலை ரூ.60/-**



சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், பத்திரிகையாசிரியர் எனத் தன் முயற்சிகளைப் படிப்படியாக விரிவுபடுத்தி வரும் பெருமாள் முருகனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இது. கிராமத்துச் சூழலில் நிகழ்வதாக பெரும் பாலான கதைகளும், நகரத்துச் சூழலில் நிகழ்வதாக சில கதைகளும் சேர்ந்து 21 கதைகள் கொண்டது. 'சிறுத்த பூதத்தில் கதை சொல்லுமாறு வற்புறுத்தும் குழந்தைக்கு, சொல்வதற்கு கதைகள் இல்லாது, எப்படியோ சமாளிக்கின்ற தந்தை; 'நீலாக்கா'வில் வித்தியாசமானவளும் வெகுளித்தனமிக்கவளுமான ஒரு பாத்திரம்; 'பெரிதினும் பெரிது' கதையில் விளையாடுவதற்கு உப்புக்குண்டான் என்னும் நெளிந்து போன அலுமினியப் பாத்திரம், கேட்டு அடம்பண்ணும் குழந்தை; 'நீர் விளையாட்டில் துணையாக நீச்சல் சொல்லிக் கொடுக்க வந்தவரை, நீரில் ஆழ்த்திவிடும் கொடூரம் கொண்டவர்களாக மாறும் சிறுவர்கள். இக்கதைகளெல்லாம் சிறுவர்கள்/வெகுளித்தனமான பெண் தொடர்பானவை; நுட்பமான உலகிலும் கனவுப் பரப்பிலும் மாய அனுபவத்திலும் திளைப்பதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டவை; ஆனால் அத்தகைய உலகில் அடியெடுத்து வைத்து விட்டு, சட்டெனப் பின்வாங்கி, சோர்வும் ஆயாசமும் தரும் யதார்த்த விவரணம் என்னும் பாரத்தைச் சுமக்கத் தொடங்கிவிடுகின்றன. 'காக்கை', 'நடுப்பகல் மீன்கள்' கதைகளில், மனிதன் கணக்கிற்கு அடைபடாத காக்கையினையும் மீன்களையும் காண்கிறோம். 'மழைக் குருவி'யில் அவ்வளவு திட்டுக்களையும் தாங்கிக் கொண்டு, ஜால்சாப்பு சொல்ல மீண்டும் மழை யில் திளைக்கப்போகும் பவானி வருகிறாள். பயணித்து வந்த பேருந்து போய்விட்டாலும், அதனை ஏமாற்றமாக, வேதனையாகக் கருதாது, வித்தியாசமான உலகிற்குள் பயணம் போவதற்கான வாய்ப்பாகக் கருதிப் போகத் தொடங்கும் பயணியை அறிமுகப்படுத்துகிறது. 'இருள் அழைப்பு'. நகரின் நெருக்கடியிலிருந்து விடுபடும் பொருட்டு சைக்கிள் சவாரி செய்யும் இளைஞன், சராசரி மனநிலைகளைத்தாண்டி, உல்லாசம் கொள்வதும், உற்சாகமடைவதும் வேறான ஆளுமை பெறுவதுமான தன்மைகளைப் பேசுவது 'வேட்கை'. இந்த இளைஞன் நகரின் நெருக்கடியிலிருந்து மட்டும் விடுபடவில்லை, யதார்த்தத்தின் இறுக்கத்திலிருந்தும் விடுபடுகின்றான், நடுத்தர வர்க்கத்தின் வாழ்வியல் வரையறைகளிலிருந்தும் விடுபடுகின்றான். ''மானுட யதார்த்தத்தை வெளிப்படுத்துவது மட்டுமல்லாது அதனைத் தாண்டிச் செல்வதற்கான வழியையும் காண்பிக்கும்'' தன்மை கொண்ட லூயி புனுவலின் திரைப்படங்களில் இதனைக் காணமுடியும். இப்படியான பயணமே எல்லைகளை விரிவுபடுத்தும். எல்லைகளுக்குள் அடங்கிப் போவது வாழ்க்கைக்கும் நல்லதில்லை, எழுத்திற்கும் நல்லதில்லை. பிணம் எழுந்து வந்து இயங்குவதை விவரிக்கும் 'எருக்கம் செடிகள்', மிகை யதார்த்தப்பணியில் விவரிக்கப்பட்டிருந்தால் மேலும் பரிமாணம் பெற்றிருக்கும். 'கோடித்துணி' கதை வேறு திசையில் போயிருக்க வேண்டும். 'உள் நுழைந்த மூஞ்சூறு', 'பீ' கதைகள் அதிகப்படியான யதார்த்தத்தின் சுமையேறியுள்ளன. இயல்பாக ஒரு பெண்ணுடன் பழக இயலாத, நடந்து கொள்ள முடியாத ஆணைக் கண்டு அவள் சிரிக்கையில், ''இருள் துளைத்து மரக்கிளைகளில் மோதிற்று. பறவைகள் கத்தத் தொடங்கின. இருளில் கரைந்து போயிருந்தான் அவன்'' என்று அற்புதமாக எழுதியிருக்கிறார் 'விதானம்' கதையில் பெருமாள் முருகன்.



படிப்பகம்

www.padippakam.com

**Silent Streams**
ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள தமிழ்க் கவிதைகள்
தொகுப்பு : V. விஜயராகவன்
புனல், No.1, 1வது குறுக்குத் தெரு, திருவான்மியூர், சென்னை - 41,
விலை : 50/-

**புதுமையின் வேர்கள்**
தமிழ் வசனகவிதைத் தோற்றம்
ஆசிரியர் : தமிழ்நாடன், விலை : 40/-

**மார்க்சியம் தேடலும் திறனாய்வும்**
தொகுப்பு : ஞானி
**புதுமலர் படைப்பகம்**
வெண்முகில், 20/33, திருவள்ளுவர் நகர், இராமநாதபுரம், கோவை- 45.
விலை : 86/-

**ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் பார்வையும் விமர்சனங்களும்**
ஆசிரியர் : கா. சிவத்தம்பி
மூன்றாவது மனிதன் வெளியீடு - இலங்கை.
கிடைக்குமிடம் : அடையாளம்
14-15/193, 2-வது தளம், கருப்பூர் ரோடு, புத்தானத்தம் - 621 310.
விலை : 75/-

**தூயோன் - சிறுகதைத் தொகுப்பு**
ஆசிரியர் : கோபிகிருஷ்ணன்
தமிழினி, 342, T.T.K.சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.
விலை : 40/-

**இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை**
இருபதாம் நூற்றாண்டு பார்வை
ஆசிரியர் : ஞானி
நிகழ் வெளியீடு; விலை : 20/-

**பிறிதொரு நதிக்கரை**
சிறுகதைத் தொகுப்பு
ஆசிரியர் : சூத்ரதாரி
வைகறை: 4-A ஐடியல் பள்ளிச்சாலை, நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை - 31. விலை : 50/-

**ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்பாளுமை**
ஆசிரியர் : பெருமாள் முருகன்
**தமிழோசை பதிப்பகம்**
**விலை : 45/-**

**மனத்தின் விடுதலை**
கட்டுரைத் தொகுப்பு
ஆசிரியர் : சோதிப்பிரகாசம்
பொன்மணி பதிப்பகம்
மணவாள நகர், திருவள்ளூர் - 2
விலை : 46/-

**கவிதையிலிருந்து..... மெய்யியலுக்கு**
கட்டுரைத் தொகுப்பு
ஆசிரியர்: ஞானி
நிகழ் வெளியீடு. விலை : 20/-

**கல்தூங்கும் நேரம்**
கவிதைத் தொகுப்பு
ஆசிரியர் : விக்ரமாதித்யன்
மார்ஸ் விஷன், 39, தாமோதர மூர்த்தி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 10.
விலை : 35/-

**தமிழ் சினிமாவில் சினிமா விமர்சனக் கட்டுரைகள்**
ஆசிரியர் : ஜெ. பிஸ்மி
4.ப.எண்.1, வேதாச்சலம் தெரு, சாலிகிராமம், சென்னை - 93
விலை : 60/-

**தமிழ்த் திரைப்பட வரலாற்றில் சாதனை இயக்குநர்கள் 1931-1965**
ஆசிரியர் : வரிசை கி. ராமச்சந்திரன்
விலை : 225/-

**குடி முந்திரி - சிறுகதைத் தொகுப்பு**
ஆசிரியர்: தங்கர் பச்சான். விலை : 75/-
செம்புலம், 50, 5வதுதெரு, அச்சுதன் நகர், ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 97

**மீண்டும் நதிக்கு - கவிதைத் தொகுப்பு**
ஆசிரியர் : வெங்கட்
வெளியீடு: அலங்கை அறக்கட்டளை
44-பி. டி.டி.சாலை, ஆரப்பாளையம், மதுரை - 625 016. விலை : ரூ. 25/-

**PFBR : A Demon in the making**
A. Critiue on the Environmental impact Assessment of the Prototype Fast Breeder Reactor to be constructed at Kalpakkam
Author : Dr.R. Ramesh
Ethiroli, Kanuvai, Coimbatore - 108

**கனவு - 37**
8/176, பாண்டியன் நகர், திருப்பூர் - 641 602. விலை : 15/-

**சுந்தரசுகன் - 175**
அம்மா வீடு
C.46, 2ம் தெரு, நகராட்சிக் குடியிருப்பு
தஞ்சாவூர் - 613 007. விலை : 5/-


## நிழலின் புதிய வெளியீடுகள்


1. ***பனியும் நெருப்பும்*** - மொழியாக்கம் - அமரந்த்தா — ரூ.100/-
(22 இலத்தின் அமெரிக்கச் சிறுகதைகள்)
2. ***புலம் பெயர்ந்தோர் கவிதைகள்*** (தொகுப்பு) — ரூ.75/-
(58 கவிஞர்களின் 89 கவிதைகள்)
3. ***தேம்பி அழாதே பாப்பா*** - கூகி — ரூ.75/-
(கென்ய நாவல்)
4. ***குரோட்டனோடு கொஞ்சநேரம்*** - பழமலய் — ரூ.40/-
5. ***நாட்டுப்புற வழக்காறுகள்*** - கழனியூரன் — ரூ.60/-

### நிழல் பதிப்பகம்
*31/48, இராணி அண்ணாநகர், சென்னை - 78.*




படிப்பகம்

www.padippakam.com



அடித்துப் புதைக்கப்பட்ட உயிர்களின் ஓலங்கள்

# 'தாமிரபரணி' நாடகம்

M.S. ரவிக்கண்ணன் - தூத்துக்குடி.

1999ம் வருடம் சூலை 2ம் நாள் - திருநெல்வேலி தாமிரபரணி நதிக்கரையில், உரிமை கோரிய 17 உயிர்கள் காவல் துறையினரால் அடித்துச்சாகடிக்கப்பட்டன. அன்றைய தினம் நதியானது தலித் மக்களைக் கொன்று குவிக்கும் படுகொலைக் களமாக மாறி நின்றது. நதி கரும் குருதியால் நிறைந்தது. செழித்துவளர்ந்த ஆறு, தன்னை நாடிப் பரிதவித்து வந்தவர்களை ஒரு அரக்கனைப் போல் விழுங்கி நின்றது. ஆதிக்கச்சாதி மனோபாவம் கொண்ட மக்களும் வாய்பொத்தி வேடிக்கை பார்த்தனர். 17 மக்கள் படுகொலைகளையும், அதன் கொடூரத்தையும் தமிழ் மக்கள் மறந்துவிட்டனர்.

இப்படு கொலைகள் நிகழ்ந்து இரண்டு வருடம் நிறைவுபெறுகிறது. கீழ வெண்மணியில் போன்று நினைவச் சின்னம் இங்கு எழுப்பப்பட்டுவிடக்கூடாது என அவசர அவசரமாக, உறவினர்களின் மூலம் இறுதிச்சடங்குகள் கூட செய்யப்படாத நிலையில் வெவ்வேறு இடங்களில் தனித்தனியே புதைக்கப்பட்ட உயிர்களின் உடல்கள் மண்ணைப் பிளந்து வெளிக் கிளம்ப காத்திருக்க, இன்னொருபுறம் வன்தாக்குதலால் ஊனமாகிப் போனவர்களின் ஓலங்கள் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அன்று, நதியால் கைவிடப்பட்ட சூழலில் திசைகெட்டு ஓடியவர்களின் ஓலங்களை தமிழ் மனம் மறந்துவிட்ட நிலையில், மறக்க விரும்பாத அந்த நாளை மீண்டும் ஞாபகப்படுத்தும் நோக்கில், அந்நிகழ்வை மையமாகக் கொண்டு சமீபத்தில் உருவாக்கப்பட்ட 'தாமிரபரணி' படைப்பாக்க முயற்சி முன்வைக்கப்படுகிறது. தொடர்ச்சியான ஞாபகமே நம்மையும் சார்ந்தவர்களையும் வலிமையுள்ளவர்களாய் மாற்றும்.

புதுவை ஆப்டிஸ்ட் குழுவும், திருநெல்வேலியில் செயல்படும் விளிம்பு - பண்பாட்டுப் புரிதலுக்கான தளமும் இணைந்து உருவாக்கிய 'தாமிரபரணி' நாடகம், மதுரையில் மற்றும் பாளையங் கோட்டையில் நடைபெற்ற தலித் கலை விழாக்களில் நிகழ்த்தப்பட்டது.

மேடை ஒளி தடை செய்யப்பட்டு இருளினுள், காண்டாவிளக்கின் ஒளியுடன், கட்டைக்குழல் இசையும், உறுமி இசையும் ஒலிக்க, கொன்று புதைக்கப்பட்ட 17



படிப்பகம்

www.padippakam.com

உயிர்களும் எழுந்து வருவதுபோல், ஒப்பனை தரித்த நடிகர்கள் மேடையில் தோன்றி நிற்க நாடகம் ஆரம்பமானது. ஒப்பனை உருவங்கள் தாமிரபரணி நதியில் நடந்த கோர சம்பவங்களை ஒப்பாரியாகக் கூற, மேடையில் கட்டப்பட்டிருந்த திரையில் தாமிரபரணி சம்பவப் புகைப்படங்களும், செய்திகளும் வீடியோ படமாக ஓடிக் கொண்டிருந்தது. தாமிரபரணி நதியில் இறந்து போனவர்கள் 17 நபர்கள் மட்டும் அல்ல. இன்னும் பலர் இறந்திருக்கின்றனர். அரசு அதை மறைத்துள்ளது என்ற உண்மையை நாடகம் மூலம் அறிய முடிந்தது. முழுக்க முழுக்க நிசப்தமாக்கப்பட்ட இருளில் நிகழ்த்தப்பட்ட நாடகக் காட்சிப்படிவங்கள் சாகடிக்கப்பட்ட 17 மக்களின் ஓலத்தை வெளிப்படுத்தியது.

சாகடிக்கப்பட்ட 17 மக்களும் ஆற்றில் மூழ்கியதால் இறந்ததாகக் கூறப்பட்ட மோகன் கமிசனின் அறிக்கைகளையும், அரசு மற்றும் காவல்துறையின் அறிக்கையையும் மறுத்து, காவல்துறையின் வன்தாக்குதலாலே 17 பேரும் இறந்தனர் என்ற உண்மையை நாடகமும், நாடகத்தினுள் பின்னணியில் திரையில் ஓடிய வீடியோ படமும் முன்னிறுத்தியது.

ஒரு மனித உடலுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சாதாரணமான மரியாதைகூட கொடுக்கப்படாமல் நிரை அம்மணமாக அரசு மருத்துவமனை பிணவறையில் தரையில் ஒன்றின்மேல் ஒன்றாக கிடத்திக் குவிக்கப் பட்டிருந்த காட்சி வீடியோ படமாக திரையில் கூட, அதனை ஒட்டிப் பாடப்பட்ட ஒப்பாரியானது, அவ்வுயிர்களே அந்நிலையில் கொடூரத்தை மக்கள் முன்னே சொல்வது போல் அமைந்திருந்தது.

திருநெல்வேலி மக்களின் நினைவு களிலிருந்து முழுவதுமாக மறக்கடிக்கப் பட்டுக் கொண்டிருந்த இச்சம்பவம், இந்நாடகம் மூலம் மீண்டும் ஞாபகப் படுத்தப்பட்டது என்பதோடு பார்வையாளர் களான மக்கள் மத்தியில் ஒருவித குற்ற உணர்வை ஏற்படுத்தியது என்றே சொல்லலாம்.

மறைக்கப்பட்ட உண்மைகளையும், தடைசெய்யப்பட்ட செய்திகளையும், புகைப்படங்களையும் வெளிக்கொணர்ந்து மக்கள் மத்தியில், நடந்த சம்பவத்தின் கொடூரத்தை உணர்த்தியதோடு மட்டுமல்லா மல், ஆதிக்கச்சாதி மனோபாவத்தை மிகவும் காத்திரமாக கேள்விக்குள்ளாக்கியது இந் நாடகம்.

உழைக்கும் மக்களின் இசை (உறுமி, கட்டைக் குழல்), அம்மக்களின் விளை யாட்டுக்கள், வழக்காறுகள், மேலும் அம்மக்களின் இறப்புச் சடங்குகளில் பாடப்படும் ஒப்பாரி பாடல்கள் என அம்மக்களின் வாழ்வியல் கூறுகளை முழுக்க முழுக்கப் பயன்படுத்தி நாடகம் கட்டமைக்கப் பட்டிருந்தது வீரியமாயிருந்தது.


இறுதியில், க்யுபா புரட்சியாளர் 'சே'வின் எழுச்சி வரிகளுடன் முடிவடைந்தது. இந்த 'தாமிரபரணி'' நாடகப் பிரதியை எழுதி வடிவமைத்தவர் 'விளிம்பு சுப்பையா'. பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடகத் துறையில் நாடகக் கலை பயின்று, தற்போது பாளை, தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறையில் ஆய்வு மேற்கொண்டிருக்கும் இவர், தாமிரபரணி சம்பவம் நடந்த சூழலில், நடந்த உண்மையை மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கில் 'விளிம்பு' அமைப்பின் மூலம், திருநெல்வேலியில் தொடர் கூட்டங்கள் நிகழ்த்தியதும், மோகன் கமிசன் மீதான கண்காணிப்புக் குழுவைத் தோற்றுவிக்க அடித்தளமாய் அமைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இப்படைப்பாக்க முயற்சியில் பங்குகொண்டு, இந்நாடகத்தை இயக்கிய, தலித் பெண் இயக்குனர் மு. ஜீவா, அரங்கை வடிவமைத்த சிபு.எஸ். கொட்டாரம், உறுமி பாரதி, கட்டைக் குழல் சண்முக சுந்தரம், நடிகர்கள் முனியராஜ், ராமர், பொன்னுச்சாமி, முத்துக்குமார், கலியாணி குமார் போன்றோரின் பங்கு முக்கியமானது.

மறக்க விரும்பாத ஆதிக்க வர்க்கத்தின் கொடூர நிகழ்வுகளையும், அது எழுப்புகிற கேள்விகளையும் இது போன்ற படைப்பாக்க முயற்சிகளாக மாற்றும்போது, அது நம்மையும், சார்ந்தவர்களையும் கூர்மை யாக்கும். அது ஞாபகங்களைப் புதுப்பிக்கும். தொடர்ச்சியான ஞாபகமே நம்மை வலிமையுள்ளவர்களாய் மாற்றும்.



படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியம் என்பது சுரண்டல்

ஏகாதிபத்தியம் என்பது போர்

ஏகாதிபத்தியம் என்பது ஆக்கிரமிப்பு

ஏகாதிபத்தியம் என்பது வன்முறை

ஏகாதிபத்தியம் என்பது இனவெறி

ஏகாதிபத்தியம் என்பது நோய்

ஏகாதிபத்தியம் என்பது பஞ்சம் பசி

ஏகாதிபத்தியம் என்பது குழந்தைகளின் எதிரி

ஏகாதிபத்தியம் என்பது வறுமை

ஏகாதிபத்தியம் என்பது இன அழிப்பு

ஏகாதிபத்தியம் என்பது நிறவெறி

ஏகாதிபத்தியம் என்பது பாசிசம்

ஏகாதிபத்தியம் என்பது மக்களின் எதிரி



வளைகுடாப்போரில் அமெரிக்கா ஈராக்கில் வீசிய யுரேனியக் குண்டினால் பல்வேறு வகையான பிறவிக் குறைபாடு களுடன் பிறக்கும் நூற்றுக்கணக்கான குழந்தைகளில் ஒன்று

படிப்பகம்

www.padippakam.com





## போர் அன்பானதுதான்!

ஸ்டீபன் கிரேன்

அழாதே பெண்ணே,
போர் அன்பானதுதான்!
கிலி பிடித்த குதிரை தனியே ஓடியதுபோல
போர்க்கரங்கள் உன் காதலனை வானத்தில் வீசியெறிந்தன.
அழாதே, போர் அன்பானதுதான்!
படைப்பிரிவின் நாராசமான முரசொலிக்கிடையே
ிறிய உயிர்கள் போராடத் துடிக்கும்,
இம் மனிதர்கள் பயிற்சிக்கும் இறப்பதற்கும் மட்டுமே பிறந்தவர்கள்
விவரிக்க முடியாத புகழ் அவர்கள் தலைமேல் பறந்து கொண்டிருக்கும்
வீரமே போர்தெய்வம்; வல்லமையே அதன் இராஜ்ஜியம்
இங்கு கிடப்பது ஆயிரக்கணக்கான வீரர்களே.
ாப்பா போரை நினைத்து அழாதே,
அது மிகவும் அன்பானது!
பதுங்குக் குழிகளில் உன் தந்தை தடுக்கி விழுந்துவிட்டார்
அவரது சீற்றம் கொண்ட இதயம் மூச்சுத்திணறி இறந்துவிட்டது.
அழாதே போர் அன்பானதுதான்!
ிவப்பும், தங்கமும் கலந்த கழுகுக் கொண்டை தெரியும்
அவசரம் பொறித்த கொடி ஏந்திய படைகள்,
இம் மனிதர்கள் பயற்சிக்கும் இறப்பதற்கும் மட்டுமே பிறந்தவர்கள்
கொல்லுதல் பற்றிய ஒழுக்கம் கற்றுக்கொடுக்கப்படும்
கொலை செய்வதில் திறமை இருந்தால் சிறப்புப்பட்டம் வழங்கப்படும்
இப்போர்க்களத்திலும் கிடப்பது ஆயிரக்கணக்கான வீரர்களே!
அம்மா!
ன் மகனது ஒளிரும் சவத்துணியில்
அவனது பணிவான இதயம்
ஒரு பொத்தானைப்போல் தொங்கும்.

மிழில் : கான்

Edited & Published by A.J. Khan, 24, Alagiri Nagar, Second Street, Vadapalani, Chennai-600 026.